விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி 14 திங்கட்கிழமை (27.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 098

# மூன்றாவது தரப்பால் பிரச்சினைகள் தீராது



## அரசுடன் பேசியே தீர்வைப் பெறலாம் -தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலர்

(சத்துருக்கொண்டான்)

மூன்றாவது தரப்பு வந்து தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கப்போவதில்லை. இலங்கை அரசாங்கத்துடன் பேசுவதன் மூலமே தமிழ் மக்களுக்கான நீடித்து நிலைத்து நிற்கும் தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும் என கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளருமான கே.துரைராஜசிங்கம் தெரிவித்தார். 23ஆம் பக்கம்

## த.தே.கூட்டமைப்புக்கு 7 நாட்கள் அவகாசம்

(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு மக்களின் தொடர் போராட்டம் நேற்று 26 நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது. சொந்த நிலத்திற்கு செல்வதற்காக வீதிகளில் 23ஆம் பக்கம் பார்க்க...

## உணவு கொடுக்க தாமதம்
## தாயை கொலை செய்த மகன்


(கொழும்பு)

வெலிகம-படவல பிரதேசத்தில் மகன் ஒருவர் தனது தாயை தடியொன்றினால் தாக்கி கொலை செய்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளதாக வெலிகம பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் 75 வயதுடைய வயோதிப தாயொருவரே உயிரிழந்துள்ளார். 23ஆம் பக்கம் பார்க்க...

## ரணிலும் மைத்திரியும் சிங்களவர்கள்; காட்டிக்கொடுக்க மாட்டார்கள்-கிரியெல்ல



(கண்டி)

ஜனாதிபதியும் பிரதமரும் சிங்கள பௌத்தர்கள் என்பதால் நாட்டை காட்டிக் கொடுக்க மாட்டார்கள் என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றிய அமைச்சர், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தில் உள்ள சர்வதேச நீதிபதிகள் தொடர்பான விடயம் குறித்து கருத்து வெளியிட்ட போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய தேசிய கட்சி சிங்கள பௌத்த மக்களின் உரிமைகளை பாதுகாப்பது போன்று தமிழ், முஸ்லிம் மற்றும் கிறி 23ஆம் பக்கம் பார்க்க...

## காணாமல் ஆக்கப்பட்டோர்; அடுத்த கட்ட நிலை என்ன?
## வடக்கு முதல்வருடன் ஆராய முடிவு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் போராட்டத்திலீடுபடும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வடமாகாண முதலமைச்சருடன் சந்திப்பொன்றை ஏற்படுத்தி அடுத்த கட்ட முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் 24ஆம் பக்கம் பார்க்க...

## 'சிங்ஹலே' இனவாதம் முறியடிக்கப்பட்டுள்ளது
## தேசிய சமாதானப் பேரவை

(கொழும்பு)

நல்லாட்சியினுடைய ஜனாதிபதியின் சொந்தப் பிரதேசமான பொலநறுவையில் உருவாக்கப்பட்ட "சிங்ஹலே" இனவாதம் "மனிதாபிமானத்தினால்" முறியடிக்கப்பட்டதாக தேசிய சமாதானப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சமாதானப்பேரவையின் "மாவட்டக் குழுக்கள் அடைந்த வெற்றிகள்" என்ற அறிக்கை நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மாவ 24ஆம் பக்கம் பார்க்க...

## தமிழர்களுக்கான 150 வீடுகளும் அவர்களிடமே ஒப்படைக்கப்படும்
## ஆனால் நிகழ்வுகள் அனைத்தும் ரத்து-லைக்கா

(சென்னை)

இலங்கையில் அல்லலுறும் தமிழர்களுக்காக தமிழக அரசியல்வாதிகள் ஒன்றும் செய்யவில்லை என்று லைக்கா நிறுவனத்தின் துணைத் தலைவர் பிரேம் சிவசாமி சாடியுள்ளார்.

லைக்கா நிறுவனத்தின் ஞானம் அறக்கட்டளை சாரபில் இலங்கையின் வவுனியாவில் கட்டப்பட்டுள்ள 150 புதிய வீடுகளை தமிழர்களுக்கு வழங்கும் நிகழ்ச்சியில் தென்னிந்திய திரைப்பட நடிகர் ரஜினி . 23ஆம் பக்கம் பார்க்க...

## புலிகள் வெளியே படையினர் உள்ளே

(கொழும்பு)

தற்கொலை தாக்குதல் நடத்த வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உறுப்பினர்கள் தாக்குதல் நடத்தும் முன்னர், அவர்களை மட 24ஆம் பக்கம் பார்க்க...

## கலைப்பீட மாணவர்களது
## கற்றல் செயற்பாடுகள் வழமை போல் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களது கற்றல் செயற்பாடுகள் நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் கலைப்பீட முதலாம் இரண்டாம் வருட மாணவர் 24ஆம் பக்கம் பார்க்க...

## விடுதலைப் புலிகளை தோற்கடித்ததற்காக
## மகிந்தவை தமிழ் மக்கள் பழிவாங்கினர்!-கோத்தா

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தோற்கடித்தமைக்காக மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை தமிழ் மக்கள் பழிவாங்கி விட்டதாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பின் வார ஊடகமொன்றுக்குவழங்கியநேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் அவர் 24ஆம் பக்கம் பார்க்க...



## புகையிரதம் மோதியதில் இளம் குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை நாவலடிப் பகுதியில் நேற்றைய தினம் காலை யாழில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற புகையிரதத்தில் மோதுண்டு இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அரியாலை கிழக்கை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான தவநாயகம் பிரேந்திரா (வயது 27) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார். 24ஆம் பக்கம் பார்க்க...

## குற்றச்சாட்டுக்கு ஆதாரம் எங்கே?

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் உருவாகி 2 வருடங்களில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சுமத்தப்பட்ட எந்தவொரு குற்றச்சாட்டையும் ஆதார பூர்வமாக 23ஆம் பக்கம் பார்க்க...

## க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள் நாளை வெளியாகுமென அறிவிப்பு

(கொழும்பு)

2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் நாளை 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெளியிடப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. அன்றைய தினத்தில் பரீட்சார்த்திகள். இணையத்தின் மூலம் தாங் 24ஆம் பக்கம் பார்க்க...


## டெங்கு அபாயம் நீங்கவில்லை

(கிண்ணியா)

கிண்ணியாவில் டெங்கு அபாயம்முற்றாக நீங்கவில்லை என தெரிவித்துள்ள சுகாதார அதிகாரிகள் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்தாலும் அது முழுமை 23ஆம் பக்கம் பார்க்க...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது



கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவரை கொடிகாமம் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

கொடிகாமம் கெற்பேலி பகுதியில் பராமரிப்பற்றுக் காணப்பட்ட பற்றைக் காணியின் நடுவில் கேணி ஒன்றுக்கு அருகில் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக கொடிகாமம் இரகசிய பொலிஸ் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து குறித்த பகுதியை நேற்றையதினம் பொலிஸார் சுற்றிவளைத்ததுடன், கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த இருவரை கையும்மெய்யுமாக கைது செய்தனர்.

இதன் போது அவர்களிடம் இருந்து 150 லீற்றருக்கு மேற்பட்ட கசிப்பு உற்பத்திக்கான கோடாவை கைப்பற்றி அழித்துள்ளதுடன் 20 லீற்றர் கசிப்பையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இன்றையதினம் சாவகச்சேரி நீதிமன்றில்தடயப் பொருட்களுடன் அவர்களையும்முற்படுத்தவுள்ளதாக கொடிகாமம்பொலிஸார்தெரிவித்தனர்(செ-89)

# மாடுகளைத் தேடி கொழும்பில் வேட்டை

(கொழும்பு)

கொழும்பு நகர வீதிகளில் திரியும் மாடுகளைப் பிடித்து, எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள கால்நடைகள் சுதந்திர மையத்தில் விட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு நகரை அழகுபடுத்துதல் செயற்றிட்டதின் கீழ், இத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக, மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது கொழும்புப் பிரதேசத்தில் மட்டும் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் மேல் மாகாணம் முழுவதும் குறித்த திட்டம் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ)


## தேவை

கொழும்பில் வீட்டில் தங்கியிருந்து சேவை செய்வதற்கு பெண் தாதியர் தேவை.
(உணவு, தங்குமிட வசதியுடன் 25000/=)

தொடர்புகளுக்கு:- 077 678 6312

(8420)


# ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

## அம்பலவாணர் சிவலோகநாதன்



தோற்றம் : 27.11.1948
மறைவு : 27.03.2016


அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனும்
அதுவென்ற வள்ளுவர்தன்
வாய்மொழி பொய்யா வண்ணம்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துடன் சங்கமித்த
எங்களுயிர் அப்பாவே!
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம் நெஞ்சைவிட்டு
ஆளுதவி தேடாமல், ஆடம்பரமில்லாமல்
ஆதரித்து எமை வளர்த்து
அன்புடன் காத்தெடுத்த அப்பாவே!
களிப்போடு வாழ்ந்திருந்த – உம்மை
காலன் நொடிப் பொழுதில் கொண்டு
சென்ற துயரத்தால்
ஆறாது கலங்குகிறோம் அப்பா!
ஆண்டு பல கடந்தாலும்
மாறுமோ மனதைவிட்டு
இறைவனடி சேர்ந்து இன்புற்று வாழ
எம் பெருமான் திருவடியை
சேவித்து நிற்கின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சூரவத்தை,
சுன்னாகம்.

(8424)

இங்ஙனம் :
குடும்பத்தினர்.

# மீளாத் துயருடன் இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் சபாரத்தினம் கணநாத் (கணன்)

(Ceylinco Insurance)

அன்னை மடியில் : 17.10.1992
ஆண்டவன் அணைப்பில் : 20.03.2015

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
உன் அன்பு முகம் என்றும் எம்
நினைவுகளில் நின்று மறையவில்லை மகனே!
நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி,
மாதங்கள் வருடங்கள் ஆகியும்
உன் நினைவுத் துயரிலிருந்து மீண்டெட
முடியவில்லை எங்களால். மீண்டும்
உன் அழகிய பொன்முகம் காணத் தவிக்கின்றோம்
உனது ஆத்மா சாந்தியடைய என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் பிரிவால் துயருறும்...


வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

அன்பு அப்பா, அம்மா, அண்ணா, அக்காமார்,
மைத்துனர்மார், மைத்துனி, மருமகன்

(C-7921)

# கலப்பு நீதிமன்றம் அமைக்க இடமளிக்கப் போவதில்லை

## சுதந்திரக்கட்சி திட்டவட்டம்



(கொழும்பு)

ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை எவ்வாறான வாக்குறுதிகளை கொடுத்தாலும் இலங்கைக்குள் கலப்பு நீதிமன்றம் ஒன்றை அமைக்க ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். இலங்கை அரசு சர்வதேச கட்டளைகளுக்கு அடிபணிய ஒருபோதும் தயார் இல்லையென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.


ஐக்கிய தேசியக் கட்சியின் நகர்வுகள் மிகவும் மோசமான வகையில் அமைந்துள்ளது.

வெகு விரைவில் நல்லாட்சி அரசாங்கத்தை கலைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

ஜெனிவா கூட்டத்தொடர் முடிவடைந்துள்ள நிலையில் இலங்கை தொடர்பிலான அறிக்கை தொடர்பிலும் நல்லாட்சி அரசாங்கம் நாட்டில் இனி முன்னெடுக்கவுள்ள நகர்வுகள் தொடர்பிலும் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## நாட்டை ஆள்வதற்கு அரசாங்கம் சில நிறுவனங்களை பயன்படுத்துகிறது

### மகிந்த கடும் விசனம்



(கொழும்பு)

நாட்டை ஆட்சிசெய்வதற்காக நல்லாட்சி அரசாங்கம் சில நிறுவனங்களை மாத்திரம் பயன்படுத்தி வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புரட்சிக்கு வழி என்ற தொனிப்பொருளில் காலி ஹபராதுவ நகரில் நேற்று முன்தினம் மாலை ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் நடத்திய மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தநிலையில், ஐக்கிய தேசியக் கட்சியினால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மூழ்கடிக்கப்பட்டுள்ளதாக நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (இ-7)

## தேர்தலை நடத்தாது காலம் கடத்துவது ஜனநாயகத்தின் மீதான அத்துமீறலாகும்

### மகிந்த தேசப்பிரிய கவலை



(கொழும்பு)

மக்களுக்கு தேர்தல் தொடர்பிலும் பாராளுமன்றம் தொடர்பிலும் நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கான புதிய வாக்காளர்களின் பதிவுகள் கடந்த காலத்தை விடவும் 50 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தலை நடத்தாது காலம் கடத்துவது ஜனநாயகத்தின் மீதான அத்துமீறல் எனவும் அவர் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கவலை வெளியிட்டார். (இ-7)

## பெண்களுக்கான விசேட நீதிமன்றங்கள் தேவை

### இராஜாங்க அமைச்சர் ராதா.வலியுறுத்து

(கொழும்பு)

பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை விசாரிப்பதற்கென, விசேட நீதிமன்றங்கள் இலங்கையில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதற்கானவிசேடவேலைத் திட்டம் ஒன்றை, அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

அவ்வாறு செய்தால் மட்டுமே, பெண்களுக்கெதிரான குற்றங்களை குறைக்க முடியும் என்பதுடன், வழக்கின் தீர்ப்புக்களையும் விரைவாக வழங்க முடியும்.

இதன் மூலம் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்" என்று, கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி ராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, மலையக மக்கள் முன்னணியின் மகளிர் முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெண்கள் தின நிகழ்வு, மஸ்கெலியா ஸ்ரீ சண்முகநாதன் ஆலய மண்டபத்தில், நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பெண்களுக்கான உரிமைகளை பாதுகாக்க வேண்டுமெனில், அவர்களுக்கென தனியான நீதிமன்றம் உருவாக்கப்பட வேண்டும். அப்படி உருவாக்காமல், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாது.

பெண்கள் தொடர்பான வழக்குகள், அவர்களின் தனிப்பட்ட சுய கௌரவத்தைக் கருத்திற் கொண்டு, தனியான நீதிமன்றங்கள் தேவைப்படுகின்றது.

இன்று இலங்கையில், பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நிறைவடைவதற்கு, நீண்டகாலம் தேவைப்படுகிறது.

தீர்ப்பு வழங்குவதற்குள் வழக்கின் சாட்சியங்கள் பலர் உயிரிழந்து விடுகின்றனர். இதன் காரணமாக, பல வழக்குகளில்பெண்களுக்குகிடைக்க வேண்டிய நீதி கிடைப்பதில்லை. புங்குடுதீவு மாணவி வித்தியாவின் வழக்கு, இன்னும் நிலுவையில் உள்ளது. வழக்குகள் தாமதம் ஆகின்ற காரணத்தால், பொதுமக்களுக்கு நீதிமன்றம் தொடர்பாக சந்தேகங்கள் ஏற்படுகின்றன. எமது நாட்டில், தற்போது நீதித்துறை மிகவும் சுயாதீனமாகச் செயற்படுகின்றது.

எனவே, பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமானால், அவர்களுக்கென தனி விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சைட்டத்திற்கு எதிராக இரண்டு ஆர்ப்பாட்டங்கள்

(கொழும்பு)

மாலபே சைட்டம் கல்லூரியை மூடக்கோரியும் சைட்டம் திட்டத்தை தடை செய்யக் கோரியும் இரு வேறு பகுதிகளில் ஆர்ப்பாட் டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பல்கலைக்கழக மாணவர்களும் பொதுமக்களும்இணைந்து கினிகத்தேன பகுதியிலும் லக்ஷபான பகுதியிலும் நேற்றுக் காலை ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சைட்டம் திட்டத்தினால் பொதுமக்களுக்கு கிடைக்கும் இலவச வைத்திய சேவை பாதிப்படைவதுடன் இலவச கல்வி முறைமையும் வியாபார மயமாக்குவதாகவும் தெரிவித்தனர்.

சைட்டம் திட்டத்துக்கு எதிராக சுலோகங்கள் ஏந்தியவாறு கோசமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (இ-7)

## ரஜனியின் இலங்கைக்கான விஜயம் இரத்தானது குறித்து நாமல் விசனம்


(கொழும்பு)

நடிகர் ரஜனிகாந்தின் இலங்கைக்கான விஜயம் தடைப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விசனம் வெளியிட்டுள்ளார்.

ரஜனியின் இலங்கைக்கான விஜயம் தடைப்பட்டமை குறித்து தமிழக அரசியல் வாதிகளின் மீதும் அவர்களின் செயற்பாடுகள் குறித் தும் நாமல்விசனம்வெளியிட்டுள்ளார்

டைம்ஸ் நவ் என்ற இந்திய ஊடகம் ஒன்றுக்கு





கருத்து தெரிவித்த நாமல்,

இலங்கையில் நடைபெறும் செயற்பாடுகள் குறித்து தமிழக அரசியல்வாதிகள் விமர்சனம்செய்து வருகின்றனர்.

எனினும் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவித உதவியும் செய்வதில்லை.


அதன்படி எந்தவொரு நடிகரும் இலங்கை வருவதில் தவறில்லை எனவும் நாமல் குறிப்பிட்டுள்ளார்.

பிரபல படத்தயாரிப்பு நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட 150 வீடுகளை மக்களிடம் கையளிப்பதற்காக நடிகர் ரஜனிகாந்துக்கு அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது.

எனினும்தமிழக அரசியல் வாதிகளின் அழுத்தம் காரணமாக, ரஜனிகாந்த் தனது விஜயத்தை இரத்து செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## லயனின் 4/67 பந்துவீச்சு பெறுதியால்

# இந்தியாவின் ஆதிக்கத்தை தகர்த்து மீண்டெழுந்தது அவுஸ்திரேலியா



தரம்சாலா டெஸ்டில் இந்தியா 2-வது நாள் ஆட்ட முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 248 ஓட்டங்கள் சேர்த்துள்ளது. லோகேஷ் ராகுல். புஜாரா அரைச்சதம் அடித்தனர்.

இந்தியா- அவுஸ்திரேலியா அணிகள் மோதும் 4-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி தரம்சாலாவில் நேற்று முன்தினம் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்த அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 300 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அந்த அணியின் தலைவர் ஸ்மித் சதம் (111) அடித்தார். வோர்னர், வேட் அரைச்சதம் அடித்தனர்.

இந்திய அணி சார்பில் புதுமுக வீரர் குல்தீப் யாதவ் 4 விக்கெட்டும், உமேஷ் யாதவ் 2 விக்கெட்டும், அஸ்வின். ஜடேஜா, புவனேஷ்வர் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர். பின்னர் முதல் இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா நேற்று முன்தினம் முதல்நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு ஓவர் மட்டுமே விளையாடி ஓட்டம் எதுவும் எடுக்காமல் இருந்தது.

நேற்று 2-வது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடக்க வீரர்கள் முரளி விஜய், லோகேஷ் ராகுல் தொடர்ந்து விளையாடினர். அவுஸ்திரேலியாவின் பேட் கம்மின்ஸ், ஹசில்வூட் ஆகியோர் தங்களது வேகப்பந்து வீச்சால் இருவரையும் மிரட்டினார்கள்.

ஸ்விங். சீம். பவுன்ஸ் என தொடர் தாக்குதல் நடத்தினார்கள். இருவரும் ஓரளவிற்கு தாக்குப்பிடித்தார்கள். இறுதியில் இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை 10.2 ஓவரில் 21 ஓட்டமாக இருக்கும் போது முரளி விஜய் 11 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார்.


அடுத்து புஜாரா களம் இறங்கினார். ராகுல், புஜாரா ஜோடி மதிய உணவு இடைவேளை வரை விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டது. இந்திய அணி 2-வது நாள் மதிய உணவு இடைவேளை வரை ஒரு விக்கெட் இழப்பிற்கு 64 ஓட்டங்கள் எடுத்தது. ராகுல் 31 ஓட்டங்களுடனும், புஜாரா 22 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

மதிய உணவு இடைவேளை முடிந்து ஆட்டம் தொடங்கியதும், இருவரும் ஓட்டங்குவிக்க தொடங்கினார்கள். லோகேஷ் ராகுல் 98 பந்தில் அரைச்சதம் அடித்தார். தொடர்ந்து விளையாடிய லோகேஷ் ராகுல் 60 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பேட் கம்மின்ஸ் பந்தில் ஆட்டம் இழந்தார்.

அப்போது இந்தியா 40.2 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 108 ஓட்டங்கள் எடுத்திருந்தது. 3-வது விக்கெட்டுக்கு புஜாராவுடன் ரகானே ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நிலைத்து நின்று ஆடியது. புஜாரா 132 பந்தில் அரைச்சதம் அடித்தார். இந்த ஜோடி மதிய தேநீர் இடைவேளை வரை விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டது.

2-வது நாள் தேநீர் இடைவேளைவரை இந்தியா 60 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 153 ஓட்டங்கள் எடுத்திருந்தது. புஜாரா 53 ஓட்டங்களுடனும், ரகானே 19 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். முதல் இரண்டு செசனிலும் இந்தியா இரண்டு விக்கெட்டுக்களை மட்டுமே இழந்திருந்தது.

தேநீர் இடைவேளை முடிந்த பின் ஆட்டம் தொடங்கியதும் இந்திய விக்கெட்டுக்கள் மளமளவென சரிய ஆரம்பித்தது. இதனால் ஆட்டம் அவுஸ்திரேலியா கைக்குச் சென்றது. புஜாரா (57). கருண் நாயர் (5) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர். அடுத்து வந்த அஸ்வின் அதிரடியாக விளையாடி 49 பந்தில் 30 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டம் இழந்தார். தலைவர் ரகானே 46 ஓட்டங்களில் தனது விக்கெட்டை பறிகொடுத்தார்.



இந்தியா 221 ஓட்டங்கள் எடுப்பதற்குள் மேலும் நான்கு முக்கிய விக்கெட்டுக்களை இழந்தது. தேநீர் இடைவேளைக்குப் பின் 68 ஓட்டங்களிற்குள் நான்கு விக்கெட்டுக்களை இழந்தது குறிப்பிடத்தக்கது.

7-வது விக்கெட்டுக்கு சகாவுடன் ஜடேஜா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி 2-வது நாள் ஆட்டம் முடியும்வரை மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டது. 2-வது நாள் ஆட்ட முடிவில் இந்தியா 6 விக்கெட் இழப்பிற்கு 248 ஓட்டங்கள் எடுத்துள்ளது. சகா 10 ஓட்டங்களுடனும், ஜடேஜா 16 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

தற்போது வரை இந்தியா அவுஸ்திரேலியாவை விட 52 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளது. கைவசம் 4 விக்கெட்டுக்கள் உள்ளன. இன்று 3-வது நாள் ஆட்டத்தில் சகா - ஜடேஜா ஜோடி 300 ஓட்டங்கள்வரை தாக்குப்பிடித்து விளையாடினால், இந்த டெஸ்டில் இந்தியா ஆதிக்கம் செலுத்த வாய்ப்புள்ளது.

## தமீம், சகீப் அசத்தல்

# இலங்கையை வென்றது வங்கப்புலி



தம்புள்ளவில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் தமீம் இக்பால் சதத்தால் இலங்கையை 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது பங்களாதேஷ்.

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி தம்புள்ளவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் களம் இறங்கிய பங்களாதேஷ் தமீம் இக்பால் (127). சபீர் ரஹ்மான் (54). சாஹிப் அல் ஹசன் (72) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 50 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 324ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் 325 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய இலங்கை அணி, சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களை இழந்ததால் 45.1 ஓவரில் 234 ஓட்டங்கள் எடுத்து சகல இலக்குகளையும் இழந்தது. இதனால் பங்களாதேஷ் அணி 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இலங்கை அணியில் அதிகபட்சமாக சண்டிமால் 59 ஓட்டங்களும், பெரேரா 55 ஓட்டங்களும் எடுத்தனர். பங்களாதேஷ் அணி சார்பில் முஷ்டாபிஜூர் ரஹ்மான் 3 விக்கெட்டும், மோட்ரசா, மெஹதி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களும் வீழ்த்தினார்கள். சதம் அடித்த தமீம் இக்பால் ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் பங்களாதேஷ் மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என முன்னிலைப் பெற்றுள்ளது. இரு அணிகளுக்கு இடையிலான 2-வது போட்டி 28-ந் திகதி நடக்கவிருக்கிறது.

## முதல் நாள் ஆட்டம் மழையால் தடைப்பட்ட போதும்

# தென்னாபிரிக்கா 314/10, நியூசிலாந்து 67/0



ஹாமில்டனில் நடைபெற்று வரும் கடைசி டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்துக்கு எதிராக தென்னாபிரிக்கா முதல் இன்னிங்ஸில் 314 ஓட்டங்கள் சேர்த்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.


நியூசிலாந்து - தென்னாபிரிக்கா அணிகள் இடையேயான 3-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ஹாமில்டனில் நேற்று முன்தினம் தொடங்கியது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 41 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 123 ஓட்டங்கள் எடுத்து இருந்தபோது மழை பெய்தது. மழை தொடர்ந்து பெய்ததால் அத்துடன் முதல்நாள் ஆட்டம் முடித்து கொள்ளப்பட்டது.

நேற்று 2-வது நாள் ஆட்டம் நடந்தது. தலைவர் டு பிளிஸிசிஸ் 53 ஓட்டங்களுடனும், பவுமா 29 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். மறுமுனையில் விக்கெட் விழுந்த வண்ணம் இருந்தாலும் குயிண்டான் டி கொக் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 118 பந்தில் 90 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இவரது ஆட்டத்தால் தென்னாபிரிக்கா முதல் இன்னிங்ஸில் 89.2 ஓவரில் 314 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. நியூசிலாந்து தரப்பில் ஹென்றி 4 விக்கெட்டும், வாக்னர் 3 விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர் முதல் இன்னிங்ஸை நியூசிலாந்து தொடங்கியது. தொடக்க வீரர்களாக லாதம், ஜீத் ராவல் ஆகியோர் களம் இறங்கினார்கள். இவர்கள் இருவரும் 2-வது நாள் முடியும் வரை விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டனர்.


இதனால் நியூசிலாந்து அணி 2-வது நாள் ஆட்ட முடிவில் 25.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 67 ஓட்டங்கள் எடுத்துள்ளது. லாதம் 42 ஓட்டங்களுடனும், ராவல் 25 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

தற்போது வரை நியூசிலாந்து 247 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளது. இன்று 3-வது நாள் முழுவதும் நிலைத்து நின்று விளையாடினால் நியூசிலாந்து வெற்றி பெற முயற்சிக்கலாம்.



## நேபாளத்தில் மருத்துவ மனைகள் கட்டிய

# நட்சத்திர கால்பந்து வீரர் மெஸ்ஸி



ஆர்ஜென்டினாவை சேர்ந்த பிரபல நட்சத்திர கால்பந்து வீரர் மெஸ்ஸி நேபாளத்தில் சுகாதார மையங்கள் கட்டியுள்ளார்.

நேபாளத்தில் கடந்த 2015-ம் ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் காரணமாக அந்நாடு மிகப்பெரிய இழப்பை சந்தித்தது. இதையடுத்து. கொஞ்சம் கொஞ்சமாக இயல்பு நிலைக்கு திரும்பி வரும் நேபாளத்தில், சுகாதார மையங்கள் அமைக்க யுனிசெப் அமைப்புடன் அந்நாட்டு அரசு ஒப்பந்தம் செய்து கொண்டது.

இந்நிலையில், யுனிசெப் அமைப்புடன் இணைந்து ஆர்ஜென்டினா நாட்டு கால்பந்து வீரர் மெஸ்ஸி. நேபாளத்தில் 14 சுகாதார மையங்கள் கட்டுகிறார். மொத்தம் 74 சுகாதார மையங்கள் கட்ட யுனிசெப் ஒப்பந்தமிட்டது. இதில் மெஸ்ஸி 3 சுகாதார மையம் கட்டியுள்ளார். மேலும் 11 மையங்கள் கட்டப்பட்டு வருவதாக மெஸ்ஸி பவுண்டேஷன் அமைப்பு தெரிவித்துள்ளது.

நேபாள நாட்டில் மெஸ்ஸி பவுண்டேஷன் சார்பில் கட்டி முடிக்கப்பட்ட சுகாதார மையங்கள் தமக்கு மகிழ்ச்சியளிப்பதாக யுனிசெப் அமைப்பின் நல தூதர் தெரிவித்துள்ளார்.

நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி

Dr.S.S.சர்மா குருஜீ

077 784 1558

## அம்புலன்ஸ் சாரதி வெற்றிடம்

**யாழ்.மாவட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் இல் அம்புலன்ஸ் சாரதி பதவிக்கு ஆட்சேர்ப்பு**

1. Aதர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 5 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அவசியம்
2. 30 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தகுதியானோர் உரிய சான்றிதழ்களுடன் எதிர்வரும் 01.04.2017 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல. 161, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட காரியாலயத்திற்கு சமுகம் தரவும்.

உடனடித் தொடர்புக்கு இல- 075 761 0010

மேலதிக விபரங்களுக்கு:
அவசர அம்புலன்ஸ் சேவை இல.
021 321 4444 (8418)

செ.செல்வரஞ்சன்
மாவட்ட ஆணையாளர்,
சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ்,
யாழ். மாவட்டம்.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
16
05
1941

மறைவு
26
03
2012

அமரர் **பொன்ராசா இரத்தினதேவி**

(8419)

அன்பே என் ஆருயிரே
உன் நினைவே என் நினைவில்

"செல்வவாசம்",
வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.

கணவர்,
செ.பொன்ராசா.

# மாவட்ட செயலகம், கிளிநொச்சி

## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் நிர்மாணம் | ஒப்பந்த தொகை | வேண்டப்படும் ஆகக் குறைந்த ICTAD தரம்/பதிவு | கேள்விப் பிணைப்பணம், செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|
| KN/EB/11/Con/Kac/bou/713/Vol.2 | மாவட்டச் செயலக பின்பக்க சுற்று மதில் நிர்மாணம் | 2.59 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C8 or above Building | ரூபா 26.000.00 வங்கி பிணை 19.07.2017 வரை (91 நாள்) |
| KN/EB/11/Con/Kar/Can/750 | கரைச்சி பிரதேச செயலக சிற்றுண்டிச்சாலை நிர்மாணம் | 4.33 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C7or above Building | ரூபா 43.000.00 வங்கி பிணை 19.07.2017 வரை (91 நாள்) |
| KN/EB/11/Con/Poo.Qua/698 | பூநகரி பிரதேச செயலர் விடுதி நிர்மாணம் | 8.86 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C7or above Building | ரூபா 87.000.00 வங்கி பிணை 02.08.2017 வரை (105 நாள்) |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவார்.
   I. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
   II. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
   III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்பதிகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.
2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச்செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே:-021 228 5357, பக்ஸ் இல:- 021 228 3966)
3. கேள்வி ஆவணங்களை 29.03.2017 ஆம் திகதியிலிருந்து 18.04.2017 ஆம் திகதி வரை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வேலை நாட்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக்கிளையில் மீளளிக்கப்படாத ரூபா 2000.00 கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் தேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச்செயலகம் கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 19.04.2017 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும் . கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
7. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட நிதிச்சுற்றறிக்கை 04/2016க்கு அமைவாக வடக்கு மாகாணத்தை சார்ந்தவர்களுக்கே முன்னுரிமையளிக்கப்படும்.

(சி-7911)

சுந்தரம் அருமைநாயகம்,
திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,
அரசாங்க அதிபர்/மாவட்டச்செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

# இராசி பலன்

27.03.2017
(பங்குனி 14, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு
சதுர்தசி முற்பகல் 10.23மணிவரை
பூரட்டாதி பிற்பகல் 3.04 மணிவரை
சுபநேரம் 12.14-1.44 மணிவரை
இராகுகாலம் 7.44-9.14 மணிவரை
அமாவாசை விரதம், பங்குனித்திங்கள்
சர்வதேச நாடக தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத, சுக் | செவ் | | |
| சந் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மகம், பூசம் காலை 8.58 மணிக்கு மீன-சந் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்**: குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், நண்பர்கள் கடைசி நேரத்தில் கை கொடுத்து உதவுவர், கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம்.

**இடபம்**: செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**மிதுனம்**: மனதிற்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**கடகம்**: கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்**: வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், நட்பொன்று பகையாகலாம்.

**கன்னி**: குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்**: நன்மைகள் நடைபெறும் நாள், நல்லவர்களின் சிநேகம் கிட்டும், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம்.

**விருச்சிகம்**: பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.

**தனுசு**: எதிர்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், நேர்மையும் நாணயமும் கொண்ட நண்பர்களால் நன்மைகள் நடைபெறலாம்.

**மகரம்**: கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும்.

**கும்பம்**: கோரிக்கைகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மீனம்**: குடும்பத்தினரிடம் முன் கோபத்தைக் குறைப்பது நல்லது, புதியவர்களின் நட்பு கிடைக்கும், பக்குவமாக நடந்து பாராட்டு பெற வேண்டிய நாள், சிந்தனை மிகுதியான நாள்.



பொலிகண்டி தெற்கு வீரபத்திரர் ஆலயத்திற்கு அருகில் அமைக்கப்பட்ட நன்னீர் திட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை முன்னாள் ஜனாதிபதியும் நல்லிணக்க செயலணியின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.அகிலதாஸ் மற்றும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஜெயசீலன், கிராமசேவையாளர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)

## வைத்தியசாலையில் சிரமதானம்



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகர இளைஞர் கழகத்தினால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் ஒரு பகுதி சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. இச்சிரமதானம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது நகர இளைஞர் கழகத்தினை சேர்ந்த இளைஞர்கள் ஒன்றிணைந்து வைத்தியசாலையின் ஒருபகுதியை துப்புரவு செய்தனர். வைத்தியசாலையில் நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்தி தூய்மையாக்குவதில் இழுபறி நிலை காணப்படுவதாக வலம்புரி பத்திரிகையூடாக அறிந்தோம். இதனையடுத்தே எமது சாவகச்சேரி நகர இளைஞர் கழகத்தினூடாக சிரமதானம் செய்ய முடிவெடுத்தோம் என இளைஞர் கழக செயலாளர் மு.கோகுல்ராஜ் தெரிவித்தார். இது எங்கள் வைத்தியசாலை. இதனை சிறப்பாக செயற்பட நாம்தான் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். யாரையும் எதிர்பார்த்து நாம் இருக்கக்கூடாது. இனி வரும் காலங்களில் நாம் இவ்வாறு தொடர்ச்சியாக வேலைத்திட்டங்களை மேற்கொள்வோம் எனவும் தெரிவித்தார். சிரமதான பணியில் இளைஞர்களோடு கலந்து கொண்டிருந்த வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ரி.குகதாஸன் கருத்து வெளியிடும் போது சாவகச்சேரி நகர இளைஞர் கழகத்தினர் முன்னுதாரணமான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். வைத்தியசாலை, பாடசாலை, பொதுச்சந்தை ஆகியன ஒரு இனத்தின் முக்கியமான கட்டமைப்புக்களாகும். இவற்றை இவர்கள் போன்ற இளைஞர்கள் முன்னின்று வளர்த்தெடுக்க வேண்டும். இன்று இளைஞர்கள் இவ்வாறான சமூகம்சார் செயற்பாடுகளில் ஈடுபடுவது வரவேற்கப்பட வேண்டும். சாவகச்சேரி நகர இளைஞர்கழகத்தினர் தாமாக முன்வந்து செயலாற்றுகின்றமை எல்லோருக்கும் ஓர் முன்னுதாரணம் என தெரிவித்தார். (இ-89)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் நேற்று முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் மறுநாள் 8ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 9ஆம் திகதி தீர்த்திருவிழாவும் இடம் பெறும். (இ




## காணாமற்போனோரின் உறவினர்களின் கவனயீர்ப்புப் போராட்டம் தொடர்கிறது

## பல்வேறு தரப்பினரும் ஆதரவு



வடமராட்சிக் கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உறவினர்களால் முன்னெடுக்கப்படும் காலவரையறையற்ற போராட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பதினொராவது நாளாகவும் தொடர்ந்தது. இதில் வடமராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மனித உரிமைகள் சட்டத்தரணி டொமினிக் பிறேமானந் ஆகியோர் கலந்து கொண்டு தமது ஆதரவைத் தெரிவித்தனர். (இ-60)




யாழ்.தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் மாணவர் பாராளுமன்ற அமர்வு அண்மையில் இடம்பெற்றபோது...



யாழ். ஒஸ்மானியா கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற அல்ஹதீஜா முன் பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வையும் விருந்தினராக கலந்து கொண்ட யாழ். எழுத்தாளர் பரீட் இக்பால் பரிசில் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

11


# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

தமிழ்மக்கள் பேரவையின் பிரதிநிதிகள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராஜாவை யாழ்ப்பாணம் மாட்டீன் வீதியில் உள்ள கட்சித் தலைமையகத்தில் சந்தித்தனர். இந்தச் சந்திப்பு இரவு 9 மணியளவில் நடைபெற்றது.

அன்றையநாள் கிளிநொச்சிக்கான பயணமொன்றை மாவை. சேனாதிராஜா மேற்கொண்டிருந்ததால் இரவு 9 மணிக்குச் சந்திப்பதற்கான நேரத்தை மாவை.சேனாதிராஜாவே தந்திருந்தார். சந்திப்பு சில இடங்களில் இறுக்கமாகவும் சில இடங்களில் சுமுகமாகவும் நடந்தது.

எதுவாயினும சந்திப்புத் தொடர்பில் ஊடகங்களுக்கு தகவல் வழங்குவதில்லை என முடிவு செய்யப்பட்டது. இதற்கு வைத்திய நிபுணர்கள் ரவிராஜ் சாட்சியம். இருந்தும் மறுநாள் யாழ்.பிராந்திய ஊடகமொன்றில், தமிழ்மக்கள் பேரவையின் பிரதிநிதிகள் இரவோடு இரவாக மாவை.சேனாதிரா ஜாவைச் சந்தித்து கெஞ்சினர் எனச் செய்தி வெளியாகியிருந்தது.


உண்மையில் இரவு நேரத்தை ஒதுக்கியது மாவை. சேனாதிராஜா என்பதால், கூட்டமைப்பின் தலைமைக்குப் பயந்து பகலில் சந்திக்காமல் தமிழ் மக்கள் பேரவை பிரதிநிதிகளை இரவில் சந்தித்தார் மாவை.சேனாதிராஜா என்றே அந்தச் செய்தி வந்திருக்க வேண்டும். எதுவாயினும் இச்செய்தியால் பேரவையின் பிரதிநிதிகள் கிஞ்சித்தும் கிலேசமடைந்திருக்கவில்லை. எது எப்படியாயினும் தமிழ் மக்கள் பேரவையின் பிரதிநிதிகளுக்கும் மாவை. சேனாதிராஜா வுக்குமிடையிலான சந்திப்பு பின்னாளில் பேரவையின் தேவையை மாவை மட்டத்தில் உணர வைத்தது என்பது உண்மை.



கூட்டமைப்பின் கூட்டங்களில் பேரவையின் கருத்துக்குச் செவிசாய்க்க வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை மாவை. சேனாதிராஜா கூறியிருந்தாராயினும் கூட்டமைப்பின் தலைமை அது பற்றி இம்மியும் கருத்திலெடுக்க வில்லை.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு புலிகளுக்கு எதிரான போக்குடையவர்களின் அதிகாரத்தின்கீழ் எவ்வாறு வந்தது என்பதை முன்னைய தொடர்களில் பார்த்திருந்தோம்.

ஐந்து அரசியல் கட்சிகளின் கூட்டாக இருந்த கூட்டமைப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆளுகைக்குட்பட்டதற்கு மூலகாரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்யாமைதான்.



கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்திருந்தால் தலைவர், செயலாளர், பொருளாளர், கட்சிப் பேச்சாளர் என்ற பதவிகள் ஒவ்வொரு அங்கத்துவக் கட்சிக்கும் கிடைத்திருக்கும். தவிர கட்சிக்கான உப விதிகளும் பதவித் தெரிவுகளும் நிறுதிட்டமாக எழுத்தில் அமைக்கப்பட்டிருக்கும். இஃது கூட்டமைப்பில் எவரும் அதிகாரம் செலுத்தமுடியாத ஒரு ஜனநாயக இயல்பை- பண்பை தோற்றுவித்திருக்கும்.

ஆனால் இது எதுவும் இல்லாத கட்டத்திலேயே கூட்டமைப்பு ஒரு சிலரின் அதிகாரத்திற்குள் அகப்படலாயிற்று. இங்குதான் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கிய புள்ளிகளின் இராஜதந்திரம் வேலை செய்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யாமல் தடுப்பதில் இரா.சம்பந்தரும் அவரோடு சேர்ந்தவர்களும் உறுதியாக இருந்தனர்.

கூட்டமைப்பைப் பதிவு செய்யுங்கள் என அங்கத்துவக் கட்சிகள் கேட்ட போதிலும் அதுபற்றி சம்பந்தர் தரப்பு கவனம் கொள்ளாமல் நடந்து கொண்டது. இதன் விளைவே இன்று சம்பந்தருடனும் அவர் சார்ந்தவர்களுடனும் கூட்டமைப்பு வாழ்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யாததன் காரணமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியிலேயே கூட்டமைப்பினர் தேர்தலில் போட்டியிட்டனர்.

அதாவது கூட்டமைப்பு என்று கூறிக்கொண்டாலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னமே தேர்தலுக்கான சின்னமாகியது. அக் கட்சியின் தலைவர், செயலாளர் சட்ட ரீதியான அதிகாரமுடையவர்களாகினர். இதன் விளைவாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் முதன்மை வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்களை ஏமாற்றுவது சம்பந்தர் தரப்பிற்கு சுலபமாயிற்று.

கடந்த பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தேசியப் பட்டியலில் இரண்டு பாராளுமன்ற ஆசனம் கிடைத்தது. இதில் ஒன்று பேராசிரியர் சிற்றம்பலத்திற்குக் கொடுப்பது கூட்டமைப்பின் தலைமைக்குக் கடினமான விடயமல்ல. இருந்தும் தங்களின் சொற்படி பேராசிரியர் சிற்றம்பலம் நடந்து கொள்ளமாட்டார் என்பதாலேயே அவருக்கு எம்.பி. பதவி வழங்கப்படவில்லை. எனினும் இதனையும் இரா.சம்பந்தர் கையாண்ட விதம் அற்புதமானதுதான்.

பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களுக்கு எம்.பி. பதவி வழங்குவதாக இருந்தால் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கான காலத்தில் அரைப் பங்கு வழங்க முடியும் என சம்பந்தர் அறிவித்தார். அதாவது விக்கிரமாதித்த மன்னன் போல நாடு ஆறுமாதம் காடு ஆறுமாதம்.

ஆக, பேராசிரியர், சிற்றம்பலத்திற்கு இரண்டரை ஆண்டுகள் எம்.பி. பதவி வழங்கலாம் என்பது சம்பந்தரின் அறிவிப்பு. அதிலும் முன்னரைக் காலப்பகுதியா? பின்னரைக் காலப்பகுதியா? என்பது வெளிப்படுத்தப்படவில்லை.

தேசியப்பட்டியலின் முதன்மை வேட்பாளராகத் தன்னை அறிவித்துவிட்டு இரண்டரை வருடங்களுக்கு எம்.பி. பதவி தரலாம் என்று சம்பந்தர் கூறியது பேராசிரியருக்குக் கடும் கோபத்தைக் கொடுத்தது. அதனால் அவர் தனக்குப் பதவி வேண்டாம் என்று கூறி விட்டார்.

பரவாயில்லை. முதலில் பாராளுமன்றத்திற்குச் செல்லுவோம் என்றொரு முடிவை பேராசிரியர் சிற்றம்பலம் தீர்மானித்து முன்னரைக் காலப் பகுதியை எனக்குத் தாருங்கள் என்று கேட்டிருக்கலாம். ஆனால் பேராசிரியரோ நாரதர் கொண்டுவந்த மாம்பழத்தை பிள்ளையாருக்கும் முருகனுக்கும் பாதிபாதியாகப் பங்கிட்டு பிரச்சினைக்கு முடிவு கட்டக்கூடாது என்பது போல தந்தால் முழுக்க. இல்லையேல் நீயே வைத்துக் கொள் என்று விட்டார்.

இது கூட்டமைப்பிற்கு சாதகமாயிற்று என்பதற்கப்பால் அரைக்காலம் கொடுத்தால் பேராசிரியர் அதைத் தூக்கி எறிவார். அதன் பின்னர் தமக்கு விருப்பமானவர்களுக்கு எம்.பி. பதவியை வழங்கலாம் என்பது சம்பந்தருக்குத் தெரிந்திருந்தது என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

அரை எம்.பி. பதவியை பேராசிரியர் மறுத்து விட தாங்கள் கீறிய கோட்டை மீறாத இருவருக்கு எம்.பி.பதவியை வழங்குவதென கூட்ட மைப்பின் தலைமை முடிவு செய்தது.

(வளரும்)

-புருசோத்தமன்-

# முள்ளிக்குளம் கிராம மக்களுக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு



(மன்னார்)

தமது பூர்வீக நிலங்களில் நிலை கொண்டுள்ள கடற்படையினரை வெளியேற்றக் கோரி மன்னார் மாவட்டம் முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்கள் முன்னெடுத்து வருகின்ற கவனயீர்ப்பு போராட்டத்திற்கு பல்வேறு மட்டங்களில் இருந்து ஆதரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இலங்கை கடற்படையினரால் அபகரிக்கப்பட்டு தற்போது கடற்படை முகாமாக மாறியுள்ள தமது நிலத்தை மீட்டு தங்களை மீள்குடியேற்றம் செய்ய வலியுறுத்தி முள்ளிக்குளம் கிராம மக்கள் கடந்த வியாழக் கிழமை ஆரம்பித்த கவனயீர்ப்பு போராட்டம் நேற்று ஞாயிற்றுக் கிழமை நான்காவது நாளாகவும் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

முள்ளிக்குளம் மக்களின் உரிமை போராட்டத்திற்கு தொடர்ச்சியாக பல்வேறு தரப்பினர் தமது ஆதரவை வழங்கி வருவதோடு, அப்பகுதியில் உள்ள முஸ்லிம் மக்களும் ஆதரவை வழங்கி வருகின்றனர்.

குறித்த போராட்டத்திற்கு பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், அருட்தந்தையர்கள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், தொண்டு அமைப்புக்களின் பிரதிநிதிகள், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் தொடர்ச்சியாக ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

எனினும் தமது போராட்டம் குறித்து முசலி பிரதேசச் செயலாளர் மற்றும் உதவி பிரதேசச் செயலாளர் ஆகியோர் வந்து பார்வையிட்டுச் சென்றதை தவிர எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை என அந்த மக்கள் தெரிவித்தனர்.

மக்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற போராட்டங்களின் காரணமாக பல்வேறு காணிகள் வடக்கில் விடுவிக்கப்பட்டு வருகின்றன.

எனவே போராட்டத்தை மேற்கொண்டே எமது உரிமைகளை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதனால் எமது நிலம் விடுவிக்கப்படும் வரை போராட்டம் தொடரும் எனவும் உரிய பதில் கிடைக்காது விட்டால் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள முள்ளிக்குளம் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பல்வேறு கிராமங்களில் இருந்தும் மக்கள் முள்ளிக்குளம் மக்களின் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5,15)

# அரச வேலைவாய்ப்பைக்கோரி பட்டதாரிகள் நாளை கவனயீர்ப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் படித்துப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுவிட்டு வேலைவாய்ப்பு கிடைக்கும் என காத்திருந்து நம்பிக்கை இழந்துள்ள வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகள் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக மன்னார் மாவட்ட வேலைவாய்ப்பு இல்லா பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இப் போராட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் தொடர்ந்து தீர்வு கிடைக்கும் வரை கவனயீர்ப்பு போராட்டத்தை தொடரப் போவதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னார் மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தின் கலந்துரையாடல் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை மன்னார் சித்தி விநாயகர் பாடசாலை மண்டபத்தில் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்த கவனயீர்ப்பு போராட்டத்திற்கான கலந்துரையாடல் கூட்டத்தின் போது பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 350 இற்கு மேற்பட்ட பட்டதாரிகள் பட்டப்படிப்பை நிறைவுசெய்த நிலையில் வேலைவாய்ப்பு இல்லாமல் உள்ளனர்.

இவ்வாறு வேலைவாய்ப்பு இல்லாது இருக்கும் பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகள் தொடர்பாக இந்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையில், பட்டப்படிப்பை நிறைவு செய்த எந்தவொரு பட்டதாரியும் வேலையில்லா பட்டதாரி என்ற பெயரால் இனி வரும் காலங்களில் அழைக்கப் படக்கூடாது என இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட பட்டதாரிகள் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.


இவ்வாறு வேலைவாய்ப்பு இல்லாத பட்டதாரிகள் சங்கம் என்ற ஒன்று இனிவரும் காலங்களில் இல்லாது இருப்பதற்கு நாம் முன்னெடுக்கவுள்ள கவனயீர்ப்பு போராட்டம் ஒரு அடித்தளமாக அமைய வேண்டும்.

எங்களின் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் தொடர்பில் கட்சி வேறுபாடின்றி அனைத்து அரசியல் வாதிகளுக்கும் தெரியப்படுத்துவோம். அதற்காக எந்தவொரு அரசியல் கட்சியினதும் அரசியல் தலையீடுகளுக்கும் அடிபணியாது எமது போராட்டத்தை தொடர்வோம் என கலந்துரையாடல் கூட்டத்தில் ஏகோபித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த கவனயீர்ப்பு போராட்டம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் செயலகத்தின் முன்பாக ஆரம்பமாகவுள்ளது.

எனவே எமது கவனயீர்ப்பு போராட்டத்திற்கு இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றி, கட்சி வேறுபாடின்றி அனைத்து தரப்பினரும் இணைந்து ஆதரவுக்கரம் நீட்டி ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் ஒன்றையும் முன்வைத்துள்ளனர். (5-15)

# தீர்வுகள் எதுவுமின்றி தொடர்கிறது போராட்டம்





(பரந்தன்)

கிளிநொச்சியில் முன்னெடுக்கப்படும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் 35 ஆவது நாளாக தொடர்கின்றது.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை 35 ஆவது நாளாக தீர்வின்றி தொடர்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையையும் வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கடந்த மாதம் 20 ஆம் திகதி அன்று காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்பு போராட்டம் இரவு பகலாக தொடர்கின்றது. (5-15.312)




# வெடிபொருட்கள் மீட்பு

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கப்பட்ட இரகசியத்தகவலுக்கு அமைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், கிளிநொச்சி பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அத்தியட்சகர், தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கிளிநொச்சி குற்றத்தடயவியல் பொலிஸார் கொண்ட குழுவினரால் நெத்தலியாறு பகுதியில் ஆற்றின் நடுவே வைக்கப்பட்டிருந்த பை ஒன்றில் வெடிபொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதி புதுக்குடியிருப்பு பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இருப்பதனால் புதுக்குடியிருப்புப் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்துள்ளனர்.

குறித்த வெடிபொருள் என்ன என்பது தொடர்பில் ஆராயவும் அதனை மீட்கவும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உதவி கோரப்பட்ட நிலையில் இன்னமும் குறித்த வெடிபொருட்கள் மீட்கப்படவில்லை.

இருப்பினும் அப்பையினுள் மூன்று அல்லது நான்கு மோட்டார் வகைக் குண்டுகள் இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (5-312,15)

# ஆசிரியர் மத்திய நிலையத்திற்கான புதிய இரண்டு மாடி கட்டடம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலய வளாகத்திற்கு அருகாமையில் அக்கராயன் ஆசிரியர் மத்திய நிலையத்திற்கான இரு மாடிக் கட்டடம் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் 28 மில்லியன் ரூபாய் செலவில் கட்டட வேலைகள் ஆரம்பித்து துரிதமாக நடைபெற்றுவருவதாக ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர், தெரிவித்தார்.

இக் கட்டட வேலைகள் யாவும் எதிர்வரும் ஜூலை மாதத்தில் நிறைவு செய்யப்பட்டு ஆசிரியர்களின் பயன்பாட்டுக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் கட்டடத்தில் 100 பேர் ஒரே நேரத்தில் அமர்ந்து செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய சகல வசதிகளையும் கொண்ட கருத்தரங்கு மண்டபமும் ஆசனத் தொகுதியும் உள்ளடக்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. (5-84)

# காணி உரிமம் கிடைக்கும்வரை எமது போராட்டம் தொடரும்


(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பன்னங்கண்டி கிராமத்தில் காணி அனுமதிப்பத்திரம் உட்பட பல அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோரி மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர்கவனயீர்ப்பு போராட்டம்நேற்று ஞாயிற்றுக்கிழமை 5 ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். இந்தப் போராட்டத்தினை பன்னங்கண்டி கமம் மற்றும் ஜொனிக் குடியிருப்பு பிரதேச மக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டு முதல் அடிப்படை உரிமை இல்லாத மக்களாக வாழ்ந்து விட்டோம்.

இனியும் அவ்வாறு வாழ முடியாது. தயவு செய்து எமக்கான காணி உரிமத்தினை வழங்குவதுடன், அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை தமக்கான காணி உரிமம் கிடைக்கும் வரையில் போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (5-15,312)



கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் வாரந்தோறும் நடைபெறும் தமிழ்பெரியார்களை கண்டறிதல் என்னும் பேச்சு போட்டி நடைபெற்று வருகின்றது. இந்நிகழ்விற்கான பரிசில்களும் நலன் விரும்பிகளால் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (படம்-தெல்லிப்பழை செய்தியாளர்)



# அடிப்படை வசதிகள் கோரி மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம்



(மல்லாவி)

வவுனியா மாவட்டத்தில் உள்ள ஓமந்தை பிரதேசத்துக்குட்பட்ட அரச உத்தியோகத்தர் வீட்டுத்திட்ட மக்கள் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோரி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30, மணியளவில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருதாவது.

வவுனியா மாவட்டத்தில் அரச உத்தியோகத்தர்களாக கடமையாற்றும் காணிகளற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு வதிவிடங்களை அமைப்பதற்காக ஓமந்தை பகுதியில் கடந்த 5. வருடங்களுக்கு முன்னர் காணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இக் காணிகளில், சுமார் 700 அரச உத்தியோகத்தர்களுக்கு 1/4, ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்ட நிலையில் இது வரை சுமார் 65 குடும்பங்களே அங்கு குடியேற்றியுள்ளனர்.

மிகுதி காணிகளில் அரச உத்தியோகத்தர்கள் குடியேறாது பற்றைக் காடுகளாக காணப்படுகின்றது.

இந்த வீட்டுத்திட்டத்தில் உள்வாங்கப்பட்ட பல பயனாளிகளுக்கு ஏற்கனவே வவுனியா உட்பட பல இடங்களில் வீடுகள், காணிகள் இருக்கும் நிலையில் இத்திட்டத்திலும் காணிகள் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் வவுனியா நகரப் பகுதியில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேச செயலாளர் இந்த வீட்டுத்திட்டத்தில் தனக்கும் காணி பிடிக்க முனைந்த போது இது தொடர்பில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு தடுக்கப்பட்டதாகவும் இதற்கு பழிவாங்கும் செயல்களை பிரதேச செயலாளர் மேற்கொள்வாதால் தமக்குரிய அரச பொது வேலைகள் தடுக்கப்படுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர் குடியிருப்பு மக்கள் தம்மை சந்திக்க வந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்தில் தெரிவித்துள்ளார்கள்.

அத்துடன் இக் காணிகளில் உரிமையாளர்கள் குடியேறாத காரணத்தால் காட்டு விலங்குகளின் ஆபத்துடன், திருடர்களின் அச்சுறுத்தலும் காணப்படுவதுடன், குடியிருப்புக்கான வீதிகள் செப்பனிடப்படவில்லை, வீதி மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை, இதனுடன் கட்டி முடிக்கப்படாதுள்ள வீடுகளில் சமூக சீர்கேடான செயற்பாடுகள் நடைபெறுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

எனவே தமது குடியிருப்புக்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோரியே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இங்குள்ள காணிகளில் உரிமையாளர்கள் குடியேறாத காணிகளை வேறு அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கக் கோரியும் இவர்கள் ஆர்ப்பாட்டத்தின் போது தெரிவித்துள்ளார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சுமார் 30 நிமிடங்கள் அமைதியான முறையில் சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியாவாறு ஓமந்தை அரச உத்தியோகத்தர்கள் வீட்டுத் திட்டத்திற்கு செல்லும் பிரதான வீதியில் நின்றிருந்தனர்.

இவர்களை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவக்தி ஆனந்தன், வைத்தியர் சி.சிவமோகன் ஆகியோர் நேரடியாக சந்தித்து கலந்துரையாடியதுடன் இவர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக வவுனியா அபிவிருத்தி குழு கூட்டத்தில் கலந்துரையாடி தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என உறுதியளித்துள்ளனர்.

இதனையடுத்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றுள்ளனர். (5-15,250)

# காணிகளை விடுவிக்கக்கோரி இன்று கண்டனப் பேரணி

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் படையினர் வசமுள்ள அரச திணைக்களங்களுக்கு சொந்தமான காணிகளை விடுவிக்க கோரி கண்டனப் பேரணியொன்று நடைபெறவுள்ளது.

இந்த கண்டன பேரணி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வட்டக்கச்சி அரச பண்ணைக்கு முன்பாக ஆரம்பமாகி உழவு இயந்திரப் பெட்டிகளில் போராட்டக்காறர்கள் ஊர்வலமாக சுமார் 8 கிலோமீற்றர் தூரம் பயணித்து ஏ - 9, வீதியில் உள்ள கோவிந்தன் கடைச் சந்தியில் ஒன்று கூடி பின்னர் அங்கிருந்து ஏ - 9, வீதியூடாக நகர்ந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு சென்று மகஜர் ஒன்றைக் கையளிக்கவுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருக்கும் பொது மக்களிற்கு அரச சேவைகளை வழங்கி வரும் அரச திணைக் களங்களுக்குரிய அலுவலக் காணிகளான வட்டக்கச்சி விவசாயப் பண்ணைக் காணி, கிளிநொச்சி மகா வித்தியாலயக் காணி, மாவட்டச் செயலக காணி, தேசிய இளைஞர் சேவை நிலையக்காணி மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களக் காணி ஆகியவற்றை கடந்த 8 வருடங்களாக படையினர் தங்கள் வசம் வைத்துள்ளார்கள்.

இதனால் குறித்த அரச திணைக்களங்களின் செயற்பாடுகளில் இடர்பாடுகள் காணப்படுவதன் காரணமாக மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்ய முடியாதுள்ளது.

இதனால் அரச திணைக்களங்களுக்கு சொந்தமான காணிகளை விடுவிக்க கோரி இந்த கண்டனப் பேரணி முன்னெடுக் கப்படவுள்ளது.

எனவே கிளிநொச்சி மாவட்ட ரீதியாக நடைபெறும் இந்த கண்டனப் பேரணியில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மற்றும் விவசாயிகள், மீனவர்கள், பொதுமக்கள், உட்பட அனைவரையும் கலந்து கொள்ளமாறு பேரணி ஒழுங்கமைப்பாளர்கள் அறிவித்துள்ளார்கள். (5-15)

# துவிச்சக்கரவண்டி வழங்கி வைப்பு



(குருமன்காடு)

தேசியரீதியில் சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றி மூன்றாமிடம் பெற்ற பாலச்சந்திரன் தர்சிகா என்ற மாணவிக்கு புலம்பெயர் தமிழரின் நிதியளிப்பில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தானால் துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தை சேர்ந்த பா.தர்சிகா சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்கேற்று மாகாண மற்றும் தேசிய ரீதியில் வெற்றி பெற்று வந்த நிலையில் சொந்தமாக தன்னிடம் துவிச்சக்கரவண்டி இல்லை எனவும் அயலவர்கள் மற்றும் நண்பிகளின் துவிச்சகர வண்டியை பயன்படுத்தியே போட்டியில் ஈடுபடுவதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானிடம் தெரிவித்திருந்த நிலையில் புலம் பெயர் தமிழரான சிவரஞ்சினி என்பவரின் நிதியுதவியில் துவிச்சக்கர வண்டியொன்றினை கொள்வனவு செய்து நேற்று குறித்த மாணவியின் வீட்டிற்கு சென்று வழங்கி வைத்தார்.

இதன்போது புலம்பெயர் தமிழரான சிவரஞ்சினி மற்றும் பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியோக செயலளார் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (5-250)

# ஐ.நா. - இலங்கை - கால அவகாசம் - ஆதரவு இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

(குருமன்காடு)

ஐ.நாவில் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட இரண்டு வருட கால அவகாசத்தையும், அதற்கு ஆதரவு வழங்கியவர்களையும் வன்மையாக கண்டிக்கின்றோம் என இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

வுவனியாவில் 31 நாளாக நடைபெறும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் ஒரு மாதத்தை கடந்து நடக்கின்றது.

ஜெனிவாவில் அரசாங்கம் இரண்டு வருட கால அவகாசத்தை கோருகின்றது. ஆனால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் அரசாங்கம் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பிரகீத் எக்னலியகொட கொலை செய்யப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட பாதுகாப்பு தரப்பைச் சேர்ந்தவர்களை 15 நாட்கள் வழக்கு இல்லாமல் வைத்திருப்பது தவறு என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுகின்றார்.

ஆனால்இங்கு 19 வருடங்களுக்கு மேலாக எந்தவித வழக்குகளுமின்றி தமிழ் அரசியல் கைதிகள் பலர் சிறையில் உள்ளனர்.

இது சம்மந்தமாக எந்தவொரு நடவடிக்கையும் இல்லை.

2009 ஆம்ஆண்டு போர் முடிந்துவிட்டது. ஆனால் இன்று வரை இந்த மக்கள் தொடர்பில் எந்த தீர்வும் இல்லை. காணாமல் போனவர்கள், அரசியல் கைதிகள், காணி சம்மந்தமான விடயங்கள் தொடர்பில் எந்த தீர்வும் இல்லை. பின்னர் எதற்காக ஐ.நாவில் இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம். அதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

அதற்கு ஆதரவு வழங்கியவர்களையும் நாம் கண்டிக்கின்றோம். இந்த மக்களின் போராட்டங்களுக்கு எமது ஆதரவு தொடருமென டினத் தெரிவித்தார். (5-250)




# டெங்கு கட்டுப்பாட்டு தேசிய நிகழ்ச்சித்திட்டம்; ஒத்துழைப்பை வழங்குமாறு வேண்டுகோள்

(பரந்தன்)

சுகாதார அமைச்சினால் எதிர் வரும் 29ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் 4ஆம் திகதி வரை நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தினைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

எனவே தேசிய நிகழ்ச்சி திட்டத்திற்கு மக்களின் ஒத்துழைப்பை வழங்குமாறும் பொதுச்சுகாதார துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வரலாற்றில் இல்லாத பாரிய டெங்குநோய்த் தாக்கத்திற்கு நாடு தற்போது முகம்கொடுத்து வருகிறது. நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருகிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளில் சராசரியாக இலங்கையில் வாரத்திற்கு 300 தொடக்கம்400 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டு வந்த அதேவேளை 2017ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கையானது சடுதியாக அதிகரித்து, வாரத்தில் 2000 டெங்கு நோயாளிகளாகக் காணப்படும் அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறதென தெரிவிக்கப்படுகிறது.

வழக்கத்திற்கு மாறாக, தென் மேற்பருவப்பெயர்ச்சிக் காலநிலை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளமையானது மிகவும் ஆபத்தானது. ஏனெனில், இதே நிலை தொடருமாயின் பருவப்பெயர்ச்சிக் காலநிலை ஆரம்பித்ததும் டெங்கு நோயின் தாக்கம் மேலும் அதிகரித்து நாடளாவிய ரீதியில் வாரத்திற்கு 4000 அல்லது 5000 பொது மக்கள் டெங்குநோயால் பாதிப்படையலாம்.

அவ்வாறு நேரிட்டால், குறுகிய காலத்தினுள் வைத்தியசாலைகளில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அனுமதிக்கப்படும்போது அவர்களை விசேடமாகக் கண்காணிப்பதற்குரிய மருத்துவ ஆளணி மற்றும் இடவசதிப் பற்றாக்குறை ஏற்படும். இது இறுதியில் தகுந்த கண்காணிப்பு இன்றி டெங்கு நோயாளர்கள் வைத்தியசாலைகளில் உயிரிழக்கும் ஆபத்தினை விளைவிக்கும். எனவே அவற்றை தடுக்கும் வகையில் தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில் பூரண ஒத்துழைப்பை வழங்கி நோய் வருமுன் தடுக்கும் சிறந்த வழியை பின்பற்ற வேண்டும் எனச் சுகாதார துறையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

டெங்கு நோயாளர்களது எண்ணிக்கை கட்டுக்கடங்காது சடுதியாக அதிகரித்தால், கிளிநொச்சியில் ஒரு அவல நிலைமை ஏற்படக் கூடிய சாத்தியங்கள் உருவாகிவிடலாம்

எனவே, நாம் ஒவ்வொருவரும் எமது வசிப்பிடங்கள், அயல் பகுதிகள், வேலைத்தளங்கள், கல்விக் கூடங்கள் என நாம் வாழும் மற்றும் நடமாடும் எந்த இடத்திலும் நுளம்புகள் வாழ்வதற்கு ஏற்ற சூழலை அளிக்காமல் இருப்பதே உயிர்களைப் பாதுகாப்பதற்கான ஒரே வழி எனத் தெரிவித்துள்ளனர்.

இம்மாதம் 29 இலிருந்து ஏப்ரல் 4 ஆம் திகதி வரை நடைக் குழுவினர் வீடுவீடாக நடந்து வந்து டெங்கு நோய் காவும் நுளம்புகள் உள்ளனவா?, அந்த நுளம்புகள் வளரக்கூடிய வாழ்விடங்கள் உள்ளனவா? எனப் பார்வையிட்டு மக்களுக்கு ஆலோசனை வழங்கவுள்ளனர்

அத்துடன் மாவட்டத்தில் பராமரிப்பற்ற நிலையில் கழிவுப் பொருட்களைக் கொட்டும் பகுதிகளாகப் பயன்படும் காணிகளை இனங்கண்டு அந்தந்தப் பகுதிகளுக்குரிய பிரதேச சபைகள் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளன. எனவே காணி உரிமையாளர்களோ அல்லது உரிமையாளர்களுக்குப் பதிலாக அக்காணிகளைப் பராமரிப்பவர்களோ விரைந்து அவற்றைச் சுத்தப்படுத்துவதன் மூலம் தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகிறோம் என கிளிநொச்சி. பொதுச் சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (5-312)

# போர்க்குற்றங்கள் குறித்து சாட்சியங்கள் எதுவும் இல்லை

## முன்னாள் இராணுவத் தளபதி கூறுகிறார்

(கொழும்பு)

**இராணுவத்தின் மீதான போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்றும் இவற்றுக்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை என்றும் முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**



" போர்க்குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுக்கள் போலியாக தயாரிக்கப்பட்டவை. உலகின் மிகவும் மோசமான பயங்கரவாத அமைப்பாக அடையாளப்படுத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளை நாம் அழித்துள்ளோம்.

பொதுமக்களை மிகவும் நுட்பமான பாதுகாப்பு வழிமுறைகளை பயன்படுத்தி போரின் போது மீட்டு எடுத்துள்ளோம். புலித் தலைவர்கள் போரில் கொல்லப்பட்டனர். அந்த அமைப்பின் உறுப்பினர்கள் எங்களிடம் சரணடைந்தனர். எனவே போர்க்குற்றங்கள் என்பது போலியாக உருவாக்கப்பட்டவை.

வெளிவிவகார அமைச்சர் படைவீரர்களை காட்டிக் கொடுக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றார். மேற்குலக நாடுகளுடன் இணைந்து இவ்வாறு செய்கின்றார். படைவீரர்களை காட்டிக் கொடுக்கப் போவதில்லை என்றே ஜனாதிபதியும் பிரதமரும் உறுதியளித்துள்ளனர்.

அரசியல்வாதிகளின் கருத்துக்கள் தொடர்பில் எமக்கு நம்பிக்கையில்லை. எனினும் ஜனாதிபதி எமது படையினரை பாதுகாப்பார் என்ற நம்பிக்கையுண்டு.

படையினர் மீதான போர்க் குற்றச் செயல்களை அரசாங்கம் நிராகரித்து, படையினர் எவ்வாறான மனிதாபிமான மீட்புப் பணிகளை மேற்கொண்டார்கள் என்பது பற்றி தெளிவுபடுத்த வேண்டும். நாம் அப்பாவி மக்களை கொலை செய்யவில்லை. எனவே நீதி விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை. அவ்வாறு நாம் குற்றச் செயலில் ஈடுபட்டதாக எவ்வித சாட்சியங்களும் கிடையாது.

ஊடகவியலாளர்களை தாக்குவதற்கு குழுக்கள் உருவாக்கப்பட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை. இராணுவத்தில் குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்கள் இருக்கவுமில்லை. நாட்டுக்கு பாரியளவில் சேவையாற்றிய புலனாய்வுப் பிரிவினரை அழுத்தங்களுக்கு உட்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவது வருத்தமளிக்கின்றது என முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

### தமிழ்ப் பெண்களை துன்புறுத்திய இந்தியப் படையினர்

# ராஜீவைக் கொல்ல பிரபாகரன் உத்தரவு

## கருணா தகவல்

வடக்கில் இந்தியப் படையினர் பெண்களை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய காரணத்தினால், இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்ய வேண்டுமென விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தம்மிடம் கூறினார் என முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

திலீபனின் மரணத்தின் பின்னர் நாம் போருக்கு ஆயத்தமாகியிருந்தோம். வல்வெட்டித்துறையில் இராணுவ ஜீப் வண்டியொன்றின் மீது திடீர் தாக்குதல் நடத்தினோம். இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் இந்திய இராணுவத்தினர் தொடர் தாக்குதல்களை நடத்தத் தொடங்கினர். வடக்கில் மட்டுமன்றி தெற்கிலும் தாக்குதல் நடத்தத் தொடங்கியிருந்தனர். அந்தக் காலத்தில் பெரிதாக போர் இல்லை என்பதனால் நான் வடக்கில் பிரபாகரனுடன் இருந்தேன். அப்போது பிரபாகரன் என்னை அழைத்து "நீ கிழக்கிற்கு 'போக வேண்டும்" என உத்தரவிட்டார்.

நான் கிழக்கிற்கு செல்ல சில மணித்தியாலங்களுக்கு முன்னதாக பிரபாகரன், ராஜீவை கொலை செய்ய வேண்டுமெனக் கூறினார். இந்திய இராணுவம் மிகவும் பெரியது. அவர்கள் தாக்குதல் நடத்தி முன்னேறி வந்தனர். அவர்கள் பிடிக்கும் கிராமங்களில் வசித்து வந்த பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டனர். இது குறித்து பிரபாகரன் கடும் கோபத்துடன் இருந்தார்.

இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பிடிக்கப்பட்ட ஒன்பது பெண்களை இந்திய இராணுவத்தினர் கூட்டு பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியிருந்தனர். இந்தப் பெண்கள் கடுமையாக நோய் வாய்ப்பட்டனர். அவர்கள் யாழ்ப் பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதனை அறிந்து கொண்ட பிரபாகரன் "நாம் ராஜீவ் காந்தியை கொலை செய்ய வேண்டும்" என என்னிடம் கூறினார் என கருணா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# விமல் சிறைச்சாலை வைத்தியசாலையில்



(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலைக்குள் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச சிறைச்சாலை வைத்திய சாலையில் நேற்றுக்காலை அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடல் நலம் பாதிப்படைந்ததன் காரணமாக சிறைச்சாலை அதிகாரிகள் அவரை சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் சட்டமூலத்திற்கு அமைவாக எந்தவொரு சிறைக்கைதியாவது உணவு தவிர்ப்பில் ஈடுபட்டு வந்தால் அவரைப் பலவந்தமாக வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு சட்டரீதியான அதிகாரம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)





THE NEXT STEP எனும் அமைப்பு வறிய மாணவர்களின் கல்விக்கு உதவும் பொருட்டு செயற்பட்டு வருகிறது. இவ் அமைப்பின் நான்காவது செயற்றிட்டம் மட்டக்களப்பு மிச்நகர் அரச தமிழ் கலவன் பாடசாலையிலும் ஐந்தாவது செயற்றிட்டம் முல்லைத்தீவு நட்டாங்கண்டல் அரச தமிழ்க் கலவன் பாடசாலையிலும் இடம்பெற்றது. இச்செயற்றிட்டம் மூலம் இரு பாடசாலைகளின் சுமார் 300 வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# மகிந்த அரசால் கொடுக்கப்பட்டு மைத்திரி அரசால் பறிக்கப்படும் சமுர்த்தி உதவிக் கொடுப்பனவு

(கொழும்பு)

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகளுக்கு மாதாந்தம் வழங்கப்படும் கொடுப்பனவில் இருந்து பல்வேறு காரணங்களை தெரிவித்து பணம் சுரண்டப்படுவதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகளுக்கு முன்னர் நிவாரணம் வழங்கப்பட்டது. பின்னர் மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படுவதாக தெரிவித்து அத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அவை ஒழுங்கு முறைப்படி மாதாந்தம் பயனாளிகளுக்கு வழங்கப்படுவதில்லை.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் "செழிப்பான இல்லம்" என்ற திட்டத்தின் கீழ் சமுர்த்தி நிவாரணம் பெறும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் நான்கு கட்டங்களாக பிரித்து மொத்தமாக தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்குமாறும் முதலில் அதற்கான பணத்தை சமுர்த்தி வங்கி பயனாளிகளின் வைப்பில் இருந்து பெறப்பட்டு வழங்குமாறும் பின்னர் அந்த நிதி மீளளிப்பு செய்யப்படும் எனவும் பணிப்பாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் முதற்கட்டமாக அனைத்து பயனாளிகளுக்கும் 2500 ரூபாய் வழங்கப்பட்டது. அதன் பின்னர் தேர்தல் இடம்பெற்று ஆட்சி மாறிய பின்னர் குறித்த திட்டம் நிறுத்தப்பட்டது. அதற்கான பணமும் ஒதுக்கப்படவில்லை.

இந்த நிலையில் புதிய அரசில் அவ்வாறான ஒரு திட்டம் இல்லை என்றும் அதற்கொன நிதி ஒதுக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்படதனை அடுத்து, முன்னர் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட குறித்த 2500 ரூபாவினையும் பயனாளிகளிடம் இருந்து மீள அறவிடுமாறு பணிப்பாளர் நாயகத்தினால் கடந்த 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அறிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர்களால் குறித்த விடயம் தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தி கட்டம் கட்டமாக குறித்த பணத்தினை அறவிடும் படி வங்கி முகாமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் இந்த வருடத்தில் இருந்து சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிக்ளிடம் குறித்த பணம் அறவிடப்பட்டு வருகிறது.

ஆனால் குறித்த விடயம் தொடர்பில் பெரும்பாலான சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகளுக்கு விளக்கமளிக்கப்படவில்லை. அத்துடன் கட்டம் கட்டமாகவும் குறித்த பணத்தினை அறவிடாமல் ஒரே தடவையில் அந்தப்பணத்தை வங்கி முகாமையாளர்கள் அறவிடுகின்றனர். அத்துடன் தமக்கு மாதாந்தம் கிடைக்கும் கொடுப்பனவுகளை கூட ஒழுங்கு முறையில் வழங்குவதில்லை எனவும் பலர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

நாம் மாதாந்தம் சமுர்த்தி பணம் வைப்பிலிடுகிறோம். மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை மாதாந்த பணத்தினை மொத்தமாக சேர்த்து தருவார்கள்.

அவசர தேவை கருதி மாதாந்தம் பெறுவதற்கு சென்றாலும் அப்பணத்தை பெற முடியாது. இந்த நிலையில் கடந்த 2015 ஆம் ஆண்டு நாம் எதையும் கேட்காமலே எமக்கு 2500 ரூபாய் பணத்தை இலவசமாக தருவதாக கூறி தந்தார்கள். பின்னர் குறித்த பணம் தேர்தலுக்காக தரப்பட்டது. மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வரவில்லை. எனவே அந்தப் பணத்தை மீளப் பெறுகிறோம் என தெரிவித்து எமது கொடுப்பனவில் இருந்து இந்த வருடம் அந்த 2500 ரூபாவை அறவிட்டுள்ளார்கள்.

நாம் எந்தப் பணத்தையும் கேட்கவில்லை. அவர்களாகவே தந்து அவர்களாகவே பறிக்கிறார்கள். அத்துடன் புதுவருட கொடுப்பனவு என ஆயிரம் ரூபாவையும் வைப்பிலிடுமாறு கூறிப் பறிக்கிறார்கள்.

நாம் மிகவும் வறுமையில் இருந்தே இந்த பணத்தை பெறுகிறோம். பல்வேறு தேவைகளுக்கு தான் அந்த பணத்தினை பயன்படுத்துகிறோம். அவ்வாறு தரும் சொற்ப பணத்திலும் ஒவ்வொரு காரணங்களை கூறி எமது பணத்தை சுரண்டுகிறார்கள்.

எமக்காக சேமிக்கிறார்கள் என தெரிவித்து சுரண்டுகிறார்கள். ஆனால் எமக்கு தேவை ஏற்படும் போது குறித்த பணத்தினை பெற முடியவில்லை. எதையும் அவர்களிடம் கேட்கவோ? பேசவோ? முடியவில்லை. மீறி கதைத்தால் நிவாரண பணம் கிடைக்காது என மரியாதை குறைவாக திட்டுகிறார்கள். எங்களின் குறைகளை யாரிடம் தெரிவிப்பது என தெரியாமல் இருக்கிறோம் என தெரிவித்தார்.


குறித்த விடயம் தொடர்பில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது,

முன்னைய அரசில் அமுல்படுத்தப்பட்ட குறித்த திட்டம் புதிய அரசில் நடைமுறைப்படுத்தாது நிறுத்தப்பட்டுள்ளது. அதற்கான காரணத்தை முறைப்படி பயனாளிகளுக்கு விளங்கப்படுத்தி பகுதியாக அறவிடுமாறு தான் வங்கி முகாமையாளர்களுக்கு அறிவித்துள்ளோம். எந்த ஒரு காரணத்துக்காகவும் 2500 ரூபா பணத்தினை மொத்தமாக அறவிடும் படி தெரிவிக்கவில்லை. இது தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. வங்கி முகாமையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

மேலும் சமுர்த்தி பணம் வைப்பிலிடுவது தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன எனவும் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இருப்பினும் இனி வரும் காலங்களில் பணம் வைப்பிலிடும் போது பயனாளிகள் பற்றுச் சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் முறைகேடுகள் அறியப்பட்டால் அந்தந்த பணிப்பாளர்களிடம் அறிவிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றனர். (இ-9)

## குடிநீர் சுத்திகரிப்பு தொகுதிகள் வைத்தியசாலையில் நிறுவல்




தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நோயரளர் நன்மை கருதி ஏழாலை களவாவோடை அம்மன் ஆலய அடியவர்களின் நிதிப் பங்களிப்புடன் ஆறு ஆரோ (Auro) குடிநீர் சுத்திகரிப்புத் தொகுதிகள் வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ளன. மேலும் ஏற்கனவே களவாவோடை அம்மன் ஆலயத்தினரின் பங்களிப்படன் புதியதோர் மகப்பேற்று கிளினிக் தொகுதி அமைக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## பொலித்தீன் பைகளுக்குப் பதிலாக இனி துணியினாலான பைகளைப் பயன்படுத்த சாவகச்சேரியில் விற்பனை தொகுதி

(யாழ்ப்பாணம்)

பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் பொலித்தீன் பைகளுக்கு பதிலாக துணியினாலான பைகளை பயன்படுத்துவதற்காக விசேட விற்பனைத் தொகுதி சாவகச்சேரி பொதுச் சந்தையில் ஏற்படுத்தப்படும் என நகராட்சி மன்ற செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்தார். சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குள் பொலித்தீன் பாவனையை முற்றாக ஒழித்து துணிகளால் தயாரிக்கப்பட்ட பைகளை பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தவுள்ளோம். எமது பிரதேசத்தில் பெண்தலைமைத்துவத்தைக் கொண்ட பல குடும்பங்கள் வாழ்கின்றார்கள். அவர்களினால் உற்பத்தி செய்யப்படும்துணிப்பைகளை விற்பனை செய்வதற்கு சந்தைத் தொகுதியில் விஷேட விற்பனைப்பிரிவு ஏற்படுத்தப்படும். இதன்மூலம் பொலித்தீன் பைகளை கட்டுப்படுத்துவது மட்டுமன்றி பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்க்கைத்தரமும் மேம்படுத்தப்படும் என நகராட்சி மன்ற செயலாளர் தெரிவித்தார். பொதுமக்கள் பயன்படுத்திய பொலித்தீன் பைகள் மற்றும் வீடுகளில் இருக்கக் கூடிய பொலித்தீன் கழிவுகளை போடுவதற்குரிய கழிவு தொட்டிகள் நகருக்குள் அமைக்கப்படும். நகருக்குள் வருகின்ற பொதுமக்கள் இதற்குள் பொலித்தீன் கழிவுகளை போட்டுவிட்டு துணிப் பைகளை வாங்கி பயன்படுத்த முடியும். இதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என நகராட்சி மன்ற செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-89)

## சாலை முகாமையாளர் பதவியேற்பு

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய சாலைகளில் ஏற்பட்ட சாலை முகாமையாளர் பதவி வெற்றிடங்கள் நிலுவையில் உள்ள நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சி.சிறிதரன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் அழுத்தத்தின் காரணமாக இவ் வெற்றிடங்களுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

யாழ். சாலையின் புதிய சாலை முகாமையாளராக அபுல்குதாமூசீம் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான பதவியேற்பு விழா இன்று காலை 9 மணியளவில் யாழ். சாலையில் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களுக்கான தமிழ்த்தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம், ஜாதிக சேவக சங்கம், ஸ்ரீலங்கா சுதந்திர போக்கவரத்து ஊழியர் சங்கம் ஆகியன இணைந்து நடத்தவுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-3)

## வாய்க்கால், வீதிகளில் கழிவுகளை வீசுவோரின் மீது கடுமையான சட்ட நடவடிக்கை

வடமராட்சி தெற்கு மேற்கு பிரிவிற்குட்பட்ட கரவெட்டி, கரணவாய், உடுப்பிட்டி பகுதிகளிலுள்ள வீதிகள், ஒழுங்கைகள், வாய்க்கால்களுக்குள் குப்பைகள், கோழி இறைச்சி கழிவுகளை வீசுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி சுதோகுமார் அறிவித்துள்ளார். டெங்கு நோயைக் கட்டுப்படுத்தக் கூடிய நடவடிக்கையில் கரவெட்டி சுகாதார உத்தியோகத்தர்களும் கரவெட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், நெல்லியடிப் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிரதேச சபை சிற்றூழியர்கள், வர்த்தக சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்க கிராம பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி சுதோகுமார் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-3,60)

# ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதை எதிர்த்து லண்டனில் ஆயிரக்கணக்கானோர் பேரணி




ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து லண்டனில் நேற்று முன்தினம் நடந்த பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவது தொடர்பாக கடந்த ஆண்டு ஜூன் மாதம் பிரிட்டனில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் 52 சதவீத பிரிட்டிஷ் மக்கள், வெளியேற ஆதரவு தெரிவித்து வாக்களித்தனர். 48 சதவீதம் பேர் ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு விலக வேண்டாம் என்று வாக்களித்தனர்.

மக்களின் கருத்துப்படி ஐரோப்பிய யூனியனில் இருந்து வெளியேறும் மசோதாவுக்கு பிரிட்டன் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. எனவே, இன்னும் சில தினங்களில் அதற்கான நடைமுறைகளை பிரதமர் தெரேசா மே தொடங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது ஒருபுறமிருக்க ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெள யேறுவதற்கு எதிரான போராட்டங்களும் ஆங்காங்கே நடந்து வருகிறது. அவ்வகையில் லண்டனில் நேற்று முன்தினம் பாராளுமன்ற சதுக்கம் நோக்கி பேரணி நடைபெற்றது.

அங்கு சென்றதும், வெஸ்ட் மினிஸ்டர் பாலத்தில் தீவிரவாதி நடத்திய தாக்குதல் காரணமாக 4 பேர் உயிரிழப்புக்கு இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, 'ஸ்டாப் பிரெக் சிட், ஐ லவ். யு, ஹேப்பி பெர்த்டே ரு.யு. என்பது போன்ற பல்வேறு வாசகங்கள் கொண்ட பனர்கள் ஐரோப்பிய ஒன்றிய கொடி களை ஏந்திக் கொண்டும், கோஷமிட்டவாறும் போராட்டக்காரர்கள் சென்றனர். (இ-12)

# ஒரு விளக்கு எம்.ஜி.ஆர். இன்னொரு விளக்கு 'ஜெ'

## பன்னீர் விளக்கம்



மின்கம்பத்தில் ஒரு விளக்கு எம்.ஜி.ஆர். இன்னொரு விளக்கு ஜெயலலிதா. எங்கள் சின்னத்தில் குழப்பம் இல்லை என தமிழக முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் விளக்கமளித்துள்ளார்.

ஆர்.கே. நகர் தொகுதியில் ஓ.பன்னீர்செல்வம் அணி வேட்பாளர் மதுசூதனன் தலைமை தேர்தல் அலுவலகம் தண்டையார்பேட்டை கோதண்டராமர் தெருவில் அமைக்கப்படுகிறது. இதற்கான பூமி பூஜை நேற்று நடந்தது.

இதில் ஓ.பன்னீர செல்வம் நிருபர்களிடம் கூறியதாவது,

இந்தத் தொகுதியில் எங்கள் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. இரட்டை இலை சின்னத்திற்கு பதிலாக இரட்டை மின்விளக்கு கிடைத்ததால் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை.

மக்களின் எண்ணம் தெளிவாக உள்ளது. தேர்தல் முறையாக நடக்க வேண்டும். வாக்குச் சீட்டோ, மின்னணு வாக்குப்பதிவோ எதுவாக இருந்தாலும் மக்கள் எங்களுக்குத்தான் வாக்களிப்பார்கள்.

இரட்டை மின்விளக்கில் ஒரு விளக்கு எம்.ஜி.ஆர். என்னும் ஒளிவிளக்கு. இன்னொரு விளக்கு ஜெயலலிதா என்ற திருவிளக்கு.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னாள் அமைச்சர் மா.பா.பாண்டியராஜன் கூறியதாவது,

இந்தத் தொகுதிக்காக 108 வாக்குறுதிகள் அடங்கிய தேர்தல் அறிக்கையை தயாரித்துள்ளோம். இன்று காலையில் தேர்தல் பணிமனையில் வெளியிடப்படும்.

இந்த தேர்தலில் ஜெயலலிதா மரணத்துக்கு நீதி கிடைக்க வேண்டும். மரணத்துக்கு காரணமானவர்கள் சட்டத்தால் தண்டிக்கப்பட வேண்டும். நிறைவேறாத அவரது கனவுகளை நிறைவேற்றுவோம் என்பதை மக்கள் முன் முக்கிய பிரசாரமாக வைப்போம்.


எங்கள் வேட்பாளர் மதுசூதனன் தொகுதி மக்களுக்கு நன்கு அறிமுகமானவர். அவர்தான் இந்த தொகுதியில் முதல் மேம்பாலத்தையும், துணை மின் திட்டத்தையும் கொண்டு வந்தார்.

எங்கள் வாக்குறுதியில் ஜெயலலிதா வாழ்ந்த வீடு நினைவு இல்லமாக்க வேண்டும்என்றும்இடம்பெற்றுள்ளது.

களத்தில் நிற்கும் வேட்பாளர்களில் 8 பேர் வாபஸ் வாங்கி விட்டால் வாக்குச் சீட்டு முறைவராது. எனவே வாக்குச் சீட்டு முறை வருவதற்கான வாய்ப்பு இல்லை என்று நம்புகிறோம்.

நிகழ்ச்சியில் வேட்பாளர் மதுசூதனன், பொன்னையன், நத்தம் விஸ்வநாதன், கே.பி.முனுசாமி, செம்மலை, மைத்ரேயன் எம்.பி., முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் ஜே.சி.டி.பிரபாகர், என்.பி. வெங்கட்ராமன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-12)

# தென்கொரிய கடற்பகுதியில் 300 பேருடன் மூழ்கிய கப்பலை அகற்ற 471 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது



தென்கொரியாவில் 3 ஆண்டுகளுக்கு முன்பு 300 பேருடன் கடலில் மூழ்கிய சொகுசு கப்பல் கடலின் மேற்பரப்புக்கு கொண்டு வரப்பட்டது.

கடந்த 2014 ஏப்ரல் 16 ஆம் திகதி தென்கொரியாவின் தென்மேற்கு கடல் பகுதியில் சென்று கொண்டிருந்த சொகுசு கப்பல் கடலில் மூழ்கியது. இதில் 300 பேர் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் மாணவர்கள்.

சுமார் 40 மீற்றர் ஆழத்தில் கப்பல் மூழ்கியது. 145 மீற்றர் நீளம், 6,825 தொன் எடை கொண்ட அந்த கப்பலை மீட்டு அப்புறப்படுத்த அந்த நாட்டு அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொண்டது. இந்தப் பணி சீனாவைச் சேர்ந்த ஷாங்காய் சால்வேஜ் என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

அந்த நிறுவனம் கடலுக்குள் 33 தூண்களை நிறுவி 2 மீட்புக் கப்பல்கள் மூலம் தென்கொரிய கப்பலை நேற்று முன்தினம் கடலின் மேற்பரப்புக்கு கொண்டு வந்தது. இன்னும் 2 வாரங்களில் தென்கொரிய கப்பல் அங்கிருந்து அகற்றப்பட உள்ளது.

மொத்தம் 450 ஊழியர்கள் சொகுசு கப்பலை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பணிக்கு ரூ. 471.5 கோடி செலவிடப்படுகிறது.

கப்பல் முழுமையாக மீட்கப்பட்ட பிறகு விபத்துக்கான காரணம் தெரியவரும் என்று தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-12)

# சாரதியின்றி இயங்கும் சுரங்க ரயில் சேவை சீனாவில் இவ்வருட இறுதிக்குள் அறிமுகம்



(பீஜிங்)

ரயில் சேவையில் சிறந்து விளங்கும் சீனா, தனது அடுத்தகட்ட வளர்ச்சியாக, சாரதியின்றி இயங்கும் சுரங்க ரயில் சேவையை இந்த ஆண்டு இறுதிக்குள் அறிமுகப்படுத்தவுள்ளது.

தலைநகர் பீஜிங்கில் யங் பாங்கில் இருந்து பாங் ஷான் வரை 16.6 கிலோ மீற்றர் தூரத்துக்கு ஆளில்லாமல் இயங் கும் வகையில் ரயில் தண்டவாளம் அமைக்கப்பட்டுள்ளது.

இது முற்றுமுழுவதும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தொழில்நுட்பமாகும்.

இந்த கட்டுமான பணிகள் இந்த ஆண்டுக்குள் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, புதிதாக உருவாக்கப்படும் இரு ரயில் தண்டவாள வழித்தடங்களில் இவ்வருட இறுதியில் ரயில்கள் ஓடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


சீனாவில் ஏற்கனவே புல்லட் ரயில், சுரங்க ரயில் சேவை என அதிவிரைவான ரயில் சேவை வளர்ச்சி கண்டுள்ள நிலையில், சாரதியின்றி இயங்கும் சுரங்க ரயில் சேவை, உலக ரயில் சேவை வளர்ச்சியின் அடுத்த கட்டமாக பார்க்கப்படுகின்றது. (இ-12)

# சீனாவில் மின் உற்பத்தி நிலைய நடைமேடை சரிந்து 9 பேர் பலி

(பீஜிங்)

சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் இயங்கி வரும் மின் உற்பத்தி நிலையத்தில் நேற்று முன்தினம் நடைமேடை சரிந்த விபத்தில் 9 பணியாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சீனாவின் குவாங்டாங் மாகாண தலைநகரான குவாங்ஸோ நகரில் அரசுக்கு சொந்தமான அனல் மின் சார உற்பத்தி நிலையம் இயங்கி வருகிறது. இங்குள்ள ஏழாவது உற்பத்தி அலகை விரிவாக்கம் செய்யும் கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.




இந்நிலையில், இங்குள்ள ஒரு நடைமேடை சரிந்து விழுந்த விபத்தில் சிக்கிய ஒன்பது பணியாளர்கள் உடல் நசுங்கி, பரிதாபமாக உயிரிழந்ததாக சீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (இ-12)




# தங்கச் சுரங்கத்தில் விஷவாயு பத்துப்பேர் மூச்சுத்திணறி பலி!

சீனாவில் ஏராளமான நிலக்கரி மற்றும் தங்கச் சுரங்கங்களில் இருந்து கனிமங்களை வெட்டி எடுக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இவற்றில் சில சுரங்கங்கள் மட்டுமே உரிய முன் அனுமதி பெற்றும் முறையான பாதுகாப்பு அம்சங்களுடனும் செயற்படுகின்றன. பல சுரங்கங்கள் முன் அனுமதி இல்லாமலும் பாதுகாப்பு அம்சங்கள் ஏதுமில்லாத ஆபத்தான சூழலிலும் இயங்குகின்றன.



இந்நிலையில், இங்குள்ள ஹேனான் மாகாணத்தின் லிங்காபோ நகரில் இயங்கி வந்த குயின்லிங் தங்கச் சுரங்கத்தில் நேற்று முன்தினம் இரவு திடீரென காபன் மோனாக்சைட் விஷ வாயு கசிவு ஏற்பட்டது. இந்த விஷ வாயுவில் சிக்கி மூச்சுத் திணறிய 8 தொழிலாளிகள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதேபோல் அருகாமையில் உள்ள மற்றொரு விஷவாயு சுரங்கத்திலும் ஏற்பட்ட விஷவாயுக் கசிவில் மேலும் இரு தொழிலாளிகள் பலியாகினர். (இ-12)

# சிரியாவில் சிறைச்சாலை மீது விமானங்கள் குண்டு வீச்சு



16 பேர் உயிரிழப்பு

உள்நாட்டுப் போர் மற்றும் ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கத்தால் சிக்கித் தவிக்கும் சிரியா நாட்டின் இட்லிப் மாகாணத்தில் உள்ள சிறைச்சாலை மீது போர் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சு தாக்குதலில் 16 பேர் உயிரிழந்தனர். சிரியாவின் வடமேற்கு பகுதியில் உள்ள சிறைச்சாலை மீது நேற்றிரவு அந்நாட்டு விமானப் படைகள் நடத்திய குண்டு வீச்சில் சிறை அதிகாரிகள் இருவர் உட்பட மொத்தம் 16 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-12)

# மொசூல் நகர் தாக்குதல்களில் உயிரிழந்த பொதுமக்கள் தொடர்பில் ஐ.நா. அதிருப்தி

அமெரிக்க கூட்டுப்படையினரால் ஈராக்கின் மொசூல் நகரில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் உயிரிழந்த பொதுமக்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

மொசூல் நகரில் அண்மையில் நடத்தப்பட்ட விமான தாக்குதல்களில், 200 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் உயிரிழந்துள்ளனர்.



இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளவுள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன. மேற்குறித்த உயிரிழப்புக்கள் எப்போது சம்பவித்தது என்பது தொடர்பில் இதுவரை தகவல்கள் வெளியிடப்படவில்லை.

2014 ஆம் ஆண்டு தொடக்கம் ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் உள்ள மொசூல் நகரை கைப்பற்றும் பொருட்டு ஈராக் படையினர் தொடர் தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த தாக்குதல்களுக்கு அமெரிக்க கூட்டுப்படையினரும் உதவி புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

# புதிய புரட்சி



(பீஜிங்)

உலகிலேயே அதிகளவு மக்கள் தொகை கொண்ட நாடான சீனாவில் மிகக் குறுகிய இடங்களிலே அடுக்குமாடி குடியிருப்புக்கள் கட்டப்படுவது வழக்கம். அதிலும் சோங்கிங் நகர் பகுதிகளில் மட்டும் கோடிக்கணக்கான மக்கள் வசித்துவருவதால் நகரைச்சுற்றி எங்கு நோக்கினாலும் அடுக்குமாடி கட்டடங்களை காணலாம்.

இந்நிலையில் அங்கிருக்கக்கூடிய 19 மாடிக் கட்டடம் ஒன்றின் நடுவே ரயில் செல்லும் வகையில் பாதை அமைக்கப்பட்டுள்ளது. 8 ஆவது மாடியில் ரயில் நுழைந்து செல்லும் வழியின் நடுவில் ரயில் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளதால் அடுக்கு மாடி குடியிருப்பு வாசிகள் அனைவரும் விரைவாக ஏனைய இடங்களுக்கு பயணம் செய்ய முடிகிறது.

இந்தியாவில் சென்னை, பெங்களூரு உள்ளிட்ட பெரு நகரங்களில், மெட்ரோ ரயில் அமைக்கப்பட்ட போது பல்வேறு குடியிருப்புக்கள் அகற்றப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. இந்நிலையில், சீனாவின் இந்த திட்டம் அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறது. (இ-12)

# அமெரிக்காவின் குண்டுவீச்சில் அல்கொய்தா தலைவன் பலி!

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நடத்திய குண்டு வீச்சில் அல்கொய்தா தலைவன் பலியானான்.

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள அமெரிக்க இராணுவம் ஆளில்லா விமானங்கள் (டிரோன்) மூலம் குண்டு வீச்சு நடத்தி தீவிரவாதிகளை அழித்து வருகிறது.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் எல்லையில் உள்ள பத்திகா மாகாணத்தில் அல்கொய்தா தீவிரவாத இயக்க தலைவர்கள் பதுங்கி இருப்பதாக உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது.

அதைத் தொடர்ந்து அங்கிருந்த மறைவிடங்கள் மீது அமெரிக்கா ஆளில்லா விமானங்கள் குண்டுவீச்சு நடத்தின. அதில் அல்கொய்தா மூத்த தலைவன் குவாரி யாசின் கொல்லப்பட்டான்.

இத்தகவலை அமெரிக்க இராணுவத்தின் தலைமையகமான பென்டகன் உறுதி செய்துள்ளது. கொல்லப்பட்ட குவாரி யாசின் பாகிஸ்தானில் உள்ள பலுசிஸ்தான் மாகாணத்தில் தலிபான் தீவிரவாதிகளுடன் சேர்ந்து தாக்குதல் நடத்தி வந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-12)

# சுகாதாரப் பாதுகாப்பு மசோதா தோல்விக்கு ஜனநாயக கட்சியை குற்றஞ்சாட்டுகிறார் ட்ரம்ப்

அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஜனாதிபதி ட்ரம்பின் குடியரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், போதுமான வாக்குகள் கிடைக்காததால் சுகாதார பாதுகாப்பு மசோதா திரும்பப்பெறப்பட்டது.

"ஜனநாயக கட்சியின் வாக்குகளை பெற முடியவில்லை, மேலும் நாங்கள் சற்று தயக்கம் காட்டியதால், பின்வாங்க நேர்ந்தது" என்று வோஷிங்டன் நாளிதழுக்கு ட்ரம்ப் அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

கடைசி நிமிடத்தில் மசோதா திரும்பப் பெறப்பட்டது. ஜனாதிபதி ட்ரம்புக்கு பெரிய பின்னடைவாகக் கருதப்படுகிறது.

ஒபாமாகேர் என்று அறியப்பட்ட சுகாதார பாதுகாப்புத் திட்டத்தை, அகற்றியோ-மாற்றியோ, புதிய திட்டம் கொண்டு வரப்படும் என்பது ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரத்தில் ட்ரம்ப் கொடுத்த முக்கியமான வாக்குறுதி.

மசோதா வெற்றி பெறுவதற்கு தேவைப்படும் குறைந்தபட்ச 215 வாக்குகளை பெற முடியாது என்பது உறுதியாக தெரிந்தவுடன், மசோதாவை திரும்பப்பெற ட்ரம்ப் ஒப்புக் கொண்டதாக, அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் பால் ரயான் தெரிவித்தார்.

குடியரசுக் கட்சிக்கு நாடாளுமன்றத்தின் பிரதி நிதிகள் சபையிலும், செனட்டிலும் பெரும்பான்மை பலம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இருந்தபோதிலும், குடியரசுக் கட்சியின் 28 முதல் 35 எம்.பிக்கள் ட்ரம்பின் அமெரிக்க சுகாதார பாதுகாப்பு சட்ட வரைவு மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்ததாக பல்வேறு தகவல்கள் தெரிவித்தன.

இந்த மசோதாவில் சுகாதார பாதுகாப்பு வெட்டு மிகவும் அதிகமாக இருந்ததாக சிலர் வருத்தம் தெரிவித்தாலும், போதுமான மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்று வேறு சிலர் கருதினர்.

மசோதா குறித்து அண்மையில் எடுக்கப்பட்ட வாக்கெடுப்பில் 17% வாக்குகள் மட்டுமே கிடைத்ததை அடுத்து பொதுமக்களிடமும் எதிர்ப்பு நிலவியது உறுதியானது.

புதிய சுகாதார பாதுகாப்பு மசோதா அமுலுக்கு வந்தால், 2017 முதல் 2026 இற்கு



இடைப்பட்ட காலத்தில் 336 பில்லியன் டொலர்கள் அளவிலான நிதிப் பற்றாக்குறை குறையும் என்று அமெரிக்க காங்கிரஸின் பட்ஜெட் அலுவலகம் மதிப்பிட்டிருந்தது.

அதேசமயத்தில் 52 மில்லியன் மக்களுக்கு சுகாதார பாதுகாப்பு இருக்காது. இது ஒபாமா சுகாதார பாதுகாப்பு திட்டத்துடன் ஒப்பிடும்போது, 24 மில்லியன் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

மசோதாவை திரும்பப் பெற்றுக்கொண்ட ட்ரம்ப் அதற்கு பிறகும், ஒபாமாகேர் திட்டம் மாற்றப்படும் என்று கூறினார். (இ-12)

# மூலோபாய அபிவிருத்தித் திட்ட வெளியீடு







இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்க வட மாகாண கிளை மற்றும் கனேடிய உலக பல்கலைக்கழக சேவைகளுடன் இணைந்து வழங்கிய 2016-2019 ஆம் ஆண்டிற்கான மூலோபாய அபிவிருத்தித் திட்ட வெளியீடு மற்றும் நிர்மாணிகளின் ஒன்று கூடல் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கிறீன் .கிறாஸ் விடுதியில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பொறியியல் சேவைகளின் பிரதிப் பிரதம செயலாளர் பொறியியலாளர் சண்முகநாதன், கௌரவ விருந்தினர்களாக இலங்கை கட்டட நிர்மாணிகள் சங்க தலைமைப் பீடத்தின் தலைவர் மற்றும் செயலாளர் உட்பட கனேடிய உலக பல்கலைக்கழக சேவைகளின் பிராந்திய இயக்குநர் எஸ்தர் மக்கிண்டோச் மற்றும் கட்டட நிர்மாணிகள் சங்கத்தின் பிராந்திய தலைவர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் 2016-2019 ஆம் ஆண்டிற்கான மூலோ பாயத் திட்டம் வெளியிடப்பட்டதுடன் கட்டட நிர்மாணிகள் சங்கத்தின் வட மாகாணக் கிளையினால் முதல் முதலாக நிர்மாணி சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அத்துடன் வடமாகாணக் கிளைக்கான இணையத்தளமும் இந்நிகழ்வில் ஆரம்பித்து வைக்கப்பட்டதோடு வட மாகாண கட்ட நிர்மாணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் மங்களராஜா மற்றும் கட்டுமானத்துறையில் சிறப்பாக மிளிர்கிற பெண் திருமதி கிருஷ்ணவேணி மனோகரபுவன் ஆகியோர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (இ-9)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

➧ செல்வி **சி.இலக்கியா** ➧

அமெரிக்காவின் நிலையான ஆராய்ச்சி வலையமைப்பு சர்வதேச ரீதியில் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இரசாயனதாக்கங்களும் தீர்வுகளும் என்னும் தலைப்பில் கோரப்பட்ட ஆய்வுக்கட்டுரையில் இலக்கியாவின் ஆய்வுக்கட்டுரை முதலாவதாக தெரிவு செய்யப்பட்டு சர்வதேச விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையை பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் மேலும் பல விருதுகள் பெற மனதார வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர் :
அப்பம்மா, மாமா, மாமி,
சித்தப்பாமார், சித்திமார்.

கரவெட்டி

(8413)


# 100 அடி பள்ளத்தில் பாய்ந்தது ஆட்டோ

## மூவர் படுகாயம்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் - மஸ்கெலியா பிரதான வீதியில் குடா மஸ்கெலியா பகுதியில் ஆட்டோ ஒன்று நேற்று முன்தினம் இரவு 100 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த 3 பேர் படுகாயங்களுக்குள்ளாகி மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குடா மஸ்கெலியா பகுதியிலிருந்து மஸ்கெலியா நகர பகுதியை நோக்கி சென்றுக் கொண்டிருந்த போதே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

இவ்விபத்தில் 15 மற்றும் 14 வயதுடைய சிறுவர்களே காயமடைந்துள்ளனர். ஆட்டோ சாரதி 15 வயதுடைய சிறுவன் என்பதால் அவனுக்கு சாரதி அனுமதி பத்திரம் இல்லை என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

ஆட்டோ தடுப்புக் கட்டை செயலிழந்ததன் காரணமாகவே இவ்விபத்து நிகழ்ந்துள்ளதாகவும், இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# பசில் ராஜபக்ஷவே எனது வாழ்க்கையை சிக்கலாக்கினார்

## மேர்வின் புகார்

(கொழும்பு)

பசில் ராஜபக்ஷவே தனது அரசியல் வாழ்க்கையை சிக்கலாக்கியதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ தன்னுடன் இருந்தவர்களுக்கு தொந்தரவு கொடுத்ததாகவும் முன்னாள் அமைச்சர் மேர்வின்சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.

சிங்கள வார பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை கூறியுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்ள முன்னாள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தன்னை பசில் ராஜபக்ஷவிடம் அழைத்துச் செல்ல முயற்சித்ததாகவும் அதனை தான் நிராகரித்ததாகவும் மேர்வின் தெரிவித்தார்.

நான் மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர்களை திட்டினேன். தவறு செய்தவர்களை திட்டாது. வெள்ளை சுண்ணாம்பு பூசவா சொல்கிறீர்கள்?.

பசில் ராஜபக்ஷ எனது முழு அரசியல் வாழ்க்கையையும் சிக்கலுக்குள்ளாகினார். கோத்தபாய என்னோடு இருந்தவர்களுக்கு தொந்தரவு கொடுத்தார். மகிந்தவே அவர்களை காப்பாற்றினார் என மேர்வின் சில்வா கூறினார்.

கடந்த பொதுத் தேர்தலின் பின்னர், சில சாட்சிய ஆவணங்களுடன் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சென்றிருந்த மேர்வின் சில்வா, வெள்ளை வான் கடத்தல் சம்பவங்கள் குறித்து முறைப்பாடு ஒன்றை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


# இலங்கைத்திறந்த பல்கலைக்கழகம்
# யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்
# கல்வியாண்டு 2017/18

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

| கற்கை நெறிகள் | அனுமதித் தகைமைகள் | மொழி | கற்கை நெறிக்கான காலம் | விண்ணப்பிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி (Certificate Programme in Social Sciences) | ◆ 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். | தமிழ்/ ஆங்கிலம் | 2 வருடம் | 05.03.2017 20.04.2017 |
| இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா (Diploma in Youth Development Work)(DYD) | ◆18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும் அத்துடன்<br>◆ க.பொ.த உயர்தரத்தில் ஏதாவது ஒரு துறையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது<br>◆இ.தி.ப.கழகத்தினால் வழங்கப்படும் ஏதாவது ஒரு கற்கை நெறியில் இரண்டாம் மட்டத்தினை (Level 2) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.அல்லது<br>◆இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இவற்றுக்குச் சமமான அல்லது மேற்பட்ட வேறு தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். இளைஞர் அபிவிருத்தியில் துறைசார் அனுபவமும் இதில் கருத்தில் கொள்ளப்படும். | தமிழ்/ ஆங்கிலம் | 2 வருடம் | 05.03.2017 20.04.2017 |
| சமூக விஞ்ஞானத்தில் கலைமாணி (BA Degree in Social Sciences) | ◆18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்<br>◆இ.தி.ப.கழகத்தினால் வழங்கப்படும் ஏதாவது ஒரு கற்கை நெறியில் இரண்டாம் மட்டத்தினை (Level 2) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.அல்லது<br>◆ க.பொ.த உயர்தரத்தில் ஏதாவது ஒரு துறையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது<br>◆இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இவற்றுக்குச் சமமான அல்லது மேற்பட்ட வேறு தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். | ஆங்கிலம் | 3 வருடம் | 05.03.2017 20.04.2017 |

**www.ou.ac.lk** என்ற இணையத்தளத்திற்கு பிரவேசித்து விண்ணப்பிக்க முடியும்.

(சி-7923)

மேலதிக தகவல்களுக்கு

| நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் | பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் | 021 - 222 3374 |
| வவுனியா கற்கை நிலையம் | இல 366, கண்டி வீதி, தேக்கவத்தை, வவுனியா | 024 - 222 2995 |
| கிளிநொச்சி கற்கை நிலையம் | 155 ஆம் மைல்கல், கண்டிவீதி, கிளிநொச்சி | 021 - 228 3970 |
| முல்லைத்தீவு கற்கை நிலையம் | ஒட்டுசுட்டான்வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | 071 - 352 2367 |
| மன்னார் கற்கை நிலையம் | 363, தலைமன்னார் வீதி, மன்னார். | 023 - 225 1999 |

**பதிவாளர்,**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.**

**இணைய வருவழி மூலமே விண்ணப்பிக்க முடியும்**

# துணிச்சலான பெண் சந்தியா எக்னெலிகொட

## அமெரிக்கா அனைத்துலக விருது



(கொழும்பு)

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலி கொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவுக்கு அமெரிக்கா துணிச்சலான பெண் என்ற அனைத்துலக விருது வழங்கி கௌரவிக்கவுள்ளது.

அனைத்துலக அளவில் துணிச்சலான பெண்களுக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் விருதுகளை வழங்கவுள்ளது.

இந்த விருதைப் பெற்றுக் கொள்வதற்காக சந்தியா எக்னெலிகொட அடுத்த வாரம் வோஷிங்டனுக்குப் பயணமாகவுள்ளார்.

'தனது கணவனின் வழக்கில் மாத்திரமன்றி, சிங்கள, தமிழ் சமூகங்களில் காணாமல் போனவர்களின் குடும்பங்களின் சார்பாக நீதிக்காகப் போராடும் இவர், இலங்கையின் நீதி, நல்லிணக்கத்துக்கான ஒரு ஆழமான சின்னமாக, விளங்குகிறார்' என்று இவரை இந்த விருதுக்குப் பரிந்துரைத்துள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# இளைஞர்களுக்கு புதிய கட்சி

## மேர்வின் சில்வா அறிவிப்பு




இளைஞர்களுக்கு புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா அறிவித்துள்ளார்.

இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவித்துள்ள அவர், தற்போதைய அரசியலில் உள்ள வயதானவர்களை தூக்கி எறிந்து விட்டு புதிய தலைமுறையினருக்கு நாட்டை ஒப்படைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கடந்த மகிந்த ஆட்சியின் போது பல சர்ச்சைகளில் சிக்கிய மேர்வின் சில்வா, தனது மகனின் அரசியல் பயணத்தை ஆரம்பிக்க முன்னெடுக்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டமாகவே இது காணப்படுவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ-7)

# இலங்கையில் ஜனநாயகம் உறுதி செய்யப்பட்டுள்ளது

## ஜேர்மன் பாராளுமன்றத் தலைவர் கூறுகிறார்



(கொழும்பு)

இலங்கையில் ஜனநாயகம் மற்றும் மனிதவுரிமை உறுதி செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் தான் மகிழ்ச்சியடைந்திருப்பதாக ஜேர்மன் பாராளுமன்ற தலைவர் பேராசிரியர் நோபெட் லெம்பேர்ட் (Norbert Lammert) தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியில் உள்ள இலங்கைத் தூதுவர் கருணாதிலக அமுனுகமவை நேற்று முன்தினம் சந்தித்த போது இந்த விடயங்களை தெரிவித்துள்ளார்.

அதேவேளை இவர் தலைமையிலான ஜேர்மன் பாராளுமன்றக்குழு அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய விடுத்த அழைப்புக்கு அமைவாக இக்குழுவினரின் இலங்கை விஜயம் அமையவுள்ளது.

இலங்கையுடன் ஜேர்மனி தனது அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கும் இரண்டு நாடுகளின் பாராளுமன்ற அலுவல்களை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தலைவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# மூன்றரை மாதங்களில் 217 பில்லியன் ரூபா நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன!

(கொழும்பு)

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 17ம் திகதி வரையிலான மூன்றரை மாத காலப் பகுதியில் 217 பில்லியன் ரூபா நாணயத்தாள்களை அரசாங்கம் அச்சிட்டுள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் செலவுகள் வெகுவாக உயர்வடைந்துள்ளதாகவும், வருமானத்தை விடவும் பல மடங்கு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள், ஓய்வூதியம் மற்றும் அமைச்சரவைக் கொடுப்பனவுகள் போன்றவற்றினால் அதிகளவு பணத்தை அரசாங்கம் செலவிட நேரிட்டுள்ளது.

வட்டி வீதங்கள் உயர்வடைந்துள்ளதனால் அரசாங்கம் நாட்டினால் தாங்கிக்கொள்ள முடியாத அளவிற்கு பணத்தை அச்சிட்டு வருகின்றது என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், இலங்கை மத்திய வங்கி ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் மட்டுமே பணம் அச்சிடப்படுவதாகவும் புறம்பான வகையில் பணம் அச்சிடப்படவில்லை எனவும் தெரியவருகிறது. (இ-7)

# 12 தமிழக மீனவர்கள் கைது

(புதுக்கோட்டை)

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 12 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

ஜெகதாப்பாட்டினத்தில் இருந்து 176 விசைப் படகுகளில் மீனவர்கள் நேற்று முன்தினம் கடலுக்கு வந்தனர்.

இந்நிலையில் எல்லை தாண்டி நெடுந்தீவு அருகே மீன்பிடித்ததாக கூறி 2 விசைப் படகுகளையும் 12 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் சிறை பிடித்தனர்.

ஏற்கனவே 26 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது மேலும் 12 மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். (இ-12)

# இன்று ஒரு தகவல்

## தாய்க்குக் கிடைக்கும் தணியாத சந்தோஷம்!

தாய்க்குக் கிடைக்கும் தணியாத சந்தோஷம் மகளுக்கு ஏதாவது செய்து கொண்டே இருப்பது தான்– தன் மகள் எவ்வளவு வசதியான வீட்டில் வாழ்க்கைப்பட்டிருந்தாலும் சரி.

தாயின் இந்தப் பழக்கம் பலவிதமான பிரச்சினைகளை உண்டு பண்ணிவிடுவதுண்டு.

குறிப்பாக மகனுக்கு என்று ஒன்றும் இல்லாத போதும் தாய் தன் மகளுக்கு ஏதேனும் பெரிதாகச் செய்ய நினைக்கும் போது மகன் குமுறத் தொடங்கிவிடுவான். பிரச்சினை வெடிக்கும்.

மகனுக்கு என்று ஏகப்பட்டது இருக்கிறது என்றே வைத்துக் கொள்வோம். மருமகள் வந்து விட்டால் பெரும்பாலும் இதை அவள் பிரச்சினையாக்காமல் இருப்பது இல்லை.

ஏங்க உங்கம்மா நம்ப புள்ளைகளுக்கு ஒரு பிஸ்கட் பாக்கெட்டாவது வாங்கிக் கொடுத்தது உண்டா? உங்க தங்கச்சி புள்ளைகளுக்கு எவ்வளவு வாங்கிக்கிட்டுப் பொறாங்க பாருங்க என்று அந்த மருமகள் பிஸ்கட் பிரச்சினையை ஆரம்பிக்கக் கூடும்.

இப்படி ஒரு தர்ம சங்கடத்தில் சிக்கிக் கொண்ட என் நண்பர் ஒருவர் நடந்ததைச் சொல்லி வருத்தப்பட்டார்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது சுலபம். ஆனால் நீங்கள் தாம் மாற வேண்டும் என்றேன். எப்படி என்றார்.

உங்கள் தாயை மட்டுமல்ல எந்தத் தாயையும் இந்த விடயத்தில் மாற்றவே முடியாது. எனவே தான் நீங்கள் மாற வேண்டும் என்றேன். உங்கள் தாய் தனக்காக ஏதும் செய்து கொள்கிறார்களா? சிறிது நேரம் யோசித்துவிட்டு அப்படி ஒன்றும் இல்லை என்றார்.

அப்படியானால் அவர்கள் உங்கள் சகோதரிக்காகச் செய்யும் செலவுகளை நீங்கள் உங்கள் தாயின் தனிப்பட்ட செலவாகவே கருத வேண்டும். உங்கள் வீட்டில் உங்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ அதே உரிமை உங்கள் தாய்க்கும் இருக்கிறது. அவர்களை அவர்களது கடைசிக் காலத்தில் சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு.

அவர்கள் என்னை விரும்பவில்லையே என்றார். அவர்கள் தன் மகளுக்குச் செய்வதை நீங்கள் உங்கள் மனைவியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு கண்டித்திருப்பீர்கள் ! ஆமாம் என்றார். அது தான் காரணம். இனிமேல் நீங்கள் கூட உங்கள் சகோதரிகளுக்கு ஏதேனும் செய்யத் தொடங்க வேண்டும் என்றேன். என் அம்மா செய்வதே அதிகம் என்றார். இங்கே தான் பலரும் தவறு செய்கிறார்கள் தாய் , மகளுக்குச் செய்வதைத் தடுப்பதோடு தாங்களும் ஒன்றும் செய்யாமல் இருக்கிறார்கள். அதனால் தாய்க்கு இருக்கும் சாதாரண உதவும் உள்ளம் கொளுந்துவிட்டு எரிந்து அதிகமாகி விடுகிறது.

என் மனைவியை என்ன சொல்லிச் சமாளிப்பதாம்?

உன்னை நேரடியாகப் பாதிக்கிற எந்த விடயமென்றாலும் சொல். நான் பார்த்துக் கொள்கிறேன். இந்த விடயத்தில் என்னால் முடியாது. இந்த விடயத்தில் என் அம்மாவின் சந்தோஷம் தான் முக்கியம். அம்மா அடைகிற இந்த ஒரே சந்தோஷத்தையும் நாம் பறிக்கக் கூடாது.

இது வேறு வடிவில் மாறி உன் சந்தோஷத்தைப் பறிக்கிற பிரச்சினையாகிவிடும் என்று தீர்த்துச் சொல்லிவிடுங்கள் என்றேன்.

மகள் தான் என்றில்லை. குடும்ப உறுப்பினரில் குறிப்பிட்ட எந்த ஒருவருக்குத் தொடர்ந்து ஒரு தாய் உதவ நினைத்தாலும் சரி. அதற்கு மற்றவர்கள் ஓரளவேனும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

பெற்ற வயிறு பற்றி எரியும்படி நடந்து கொள்வது நல்லதற்கில்லை.

**லேனா தமிழ்வாணன்**

# புலனாய்வுப் பிரிவுகளின் முன்னாள் பிரதானிகள் விரைவில் கைதாக வாய்ப்பு

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேன மற்றும் தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் கபில ஹெந்தவிதாரண ஆகியோர் கைது செய்யப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்ட சம்பவம் உட்பட பல குற்றச் செயல்களுடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு தொடர்பு இருப்பதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த குற்றச் செயல்களுக்கு இராணுவ புலனாய்வுப் பிரிவின் பிரத்தியேகமான குழு பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் மேற்கூறிய அதிகாரிகளின் நேரடி கண்காணிப் பின் கீழ் இந்த குழு இயங்கி வந்தமையும் விசாரணைகளில் அம்பலமாகியுள்ளது.

இந்தக் குழுவினர் யுத்தத்துடன் சம்பந்தப்படாத ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினரை கடத்திச் சென்று கொலை செய்துள்ளதாக விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இதனைத் தவிர லசந்த விக்ரமதுங்க கொலை மற்றும் ஊடகவியலாளர் கீத் நொயார் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அமைச்சர் சரத் பொன்சேகா வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில் அமல் கருணாசேன மற்றும் கபில ஹெந்தவிதாரண ஆகியோர் விரைவில் கைது செய்யப்படலாம் என தெரிய வருகிறது. (இ-7)

# ரஜனியின் இலங்கை விஜயம் ரத்து வைகோ, திருமாவளவன் வரவேற்பு

(டில்லி)

லைக்கா நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த இலங்கை பயணத்தை நடிகர் ரஜனிகாந்த் ரத்து செய்துள்ளதற்கு திருமாவளவன், தி. வேல்முருகன், வைகோ உள்ளிட்டோர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

தமிழர்களுக்காக லைக்கா நிறுவனம் கட்டிய வீடுகளை திறந்து வைக்க இலங்கை செல்ல ரஜனிகாந்த் திட்டமிட்டார். இதற்கு தமிழகத்தில் எதிர்ப்பு கிளம்பியது. தமிழக அரசியல் கட்சித்தலைவர்கள் பலரும் எதிர்ப்பு தெரிவித்தனர். ரஜனிகாந்த் இலங்கை செல்லக் கூடாது என்று கோரிக்கை விடுத்தனர்.

இதனை ஏற்று ரஜனிகாந்த் தனது இலங்கை பயணத்தை ரத்து செய்வதாக அறிவித்துள்ளார். இது தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள ரஜனிகாந்த், மீண்டும் இலங்கை செல்ல வாய்ப்பு வந்தால் அதை அரசியலாக்க வேண்டாம் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் புனிதப்போர் நடந்த பூமியை காணும் பாக்கியம் கிடைத்தால் போகவிடாமல் செய்துவிடாதீர்கள் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ் மக்களை பார்த்து மனம் திறந்து பேச எண்ணினேன் என்றும், தமிழக மீனவர் பிரச்சினை பற்றி இலங்கை ஜனாதிபதியிடம் பேச எண்ணியிருந்தேன் என்றும் நான் அரசியல்வாதியல்ல, சினிமா கல்லைஞன் என்றும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திருமாவளவன் வரவேற்பு

ரஜனிகாந்த் தனது இலங்கை பயணத்தை இரத்து செய்வதாக அறிவித்துள்ளதை வரவேற்பதாக விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் கூறியுள்ளார். ரஜனிகாந்த் மீது தமக்கு எந்தக் காழ்ப்புணர்ச்சியும் இல்லை என்றும் கூறியுள்ளார்.

இப்போதுள்ள சூழ்நிலையில் ரஜனி சென்றால் அது பாதகமாக அமையும் என்று அங்குள்ள தமிழர்கள் கூறினார்கள். இதனாலேயே தான் ரஜனியின் இலங்கை பயணத்தை ரத்து செய்யுமாறு கோரிக்கை விடுத்ததாக கூறினார்.

சிங்களவர்களின் போர் புனிதப் போர் அல்ல... விடுதலைப்புலிகள் நடத்தியதே புனிதப்போர் என்றும் திருமாவளவன் கூறியுள்ளார்.

### வைகோ வரவேற்பு

ரஜனியின் அறிக்கைக்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வரவேற்பு தெரிவித்துள்ளார். ரஜனியின் இலங்கை பயணம் பற்றி கேள்விப்பட்ட உடன் அவருடன் தாம் தொலைபேசியில் பேசியதாக கூறிய வைகோ, அங்குள்ள நிலையை விரிவாக எடுத்துக்கூறியதாக தெரிவித்தார்.

விளம்பரத்திற்காக ரஜனியின் பயணத்தை அரசியலாக்க விரும்பவில்லை என்றும் வைகோ கூறியுள்ளார். (இ-12)



கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் பவளவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட நிறுவுநர் தின விழாவும் தமிழிசைச் சங்கமமும் அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது.

# என்மீது பொய்க் குற்றச்சாட்டு

## கீதா எம்.பி. விளக்கம்

நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இரட்டைக் குடியுரிமை பெற்றிருப்பதால் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக செயற்படமுடியாது என்றும் அவருக்கு எதிராக வழக்கு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தன் மீது பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அதை தான் மறுப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இரட்டை குடியுரிமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த கீதா பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

எனக்கு.இலங்கை குடியுரிமை மாத்திரமே உள்ளது, அடிப்படை அறிவின்றியே வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு எனக்கு இரட்டைக் குடியுரிமை உள்ளது என தீர்ப்பு வழங்குவார்களாயின் மேன்முறையீடு செய்வேன் என கீதா கூறியுள்ளார். எவ்வாறாயினும் நாடாளுமன்றில் உள்ள பல எம்.பிகளுக்கு இரட்டை குடியுரிமை உள்ளது. ஆகவே மேன்முறையீடு செய்து நீதிக்காக போராடுவேன்.

தனது திருமணம் முறிந்தமைக்கும் அரசியலே காரணம் என கீதா தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏனைய எம்.பிக்கள் மற்றும் அமைச்சர்களுக்கும் இரட்டை குடியுரிமை உண்டு. அதற்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என கீதா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜனாதிபதியின் பரிந்துரை அமுல்படுத்தப்படவில்லை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை என துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அலுவல்கள் பிரதி அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவித்துள்ளார்.



அமைச்சரவையின் செயலாளர் எஸ்.அபேசிங்க இது தொடர்பில் அமைச்சரவை ஊடாக துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சின் செயலாளருக்கு வழங்கிய தகவல்கள் மற்றும் ஜனாதிபதியின் கண்காணிப்பு அறிக்கைக்கு இடையில் முரண்பாடு காணப்படுவதாக பிரதி அமைச்சர் ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இதேவேளை, அம்பாந்தோட்டை துறைமுகத்தைக் கையளிக்கும் செயற்றிட்டம் தொடர்பில் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தம் குறித்தும், இறுதி சலுகைகள் குறித்தான ஒப்பந்தம் தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு வலியுறுத்தி பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி மூன்று பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான 83 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் மற்றும் 84 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் தொடர்பில் கடந்த அமைச்சரவைக் கூட்டத்திற்கு முன்னதாக 20 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு ஜனாதிபதி கலந்துரையாடியதாக பிரதி அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலின் போது அமைச்சரவையினூடாக சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளை கவனத்திற்கொண்டு ஜனாதிபதியால் கடந்த 20 ஆம் திகதி பரிந்துரை க்கப்பட்ட விடயங்களை அமைச் சரவைக்குப் பெற்றுக் கொடுத்ததாகவும் பிரதி அமைச்சர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் இடையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலின் போது, ஐந்து அமைச்சர்கள் கொண்ட உப குழுவொன்று நியமிக்கப்பட்டு, அதனூடாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பிலும் தீர்மானம் எடுக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டது.

எனினும், கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியுடனான கலந்துரையாடல் நடைபெற்று மறுதினம் அமைச்சரவையின் செயலாளரால் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் அடங்கிய கடிதத்தில் முரணான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததாக பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# சீனாவிலிருந்து வந்து மகிந்தவை சந்தித்த 6 ஆம் பராக்கிரமபாகு மன்னனின் பேத்தி

(சீனா)

சீனாவை சேர்ந்த யுவதி ஒருவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்க கடந்த திங்கட்கிழமை கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள அவரது வீட்டுக்கு சென்றுள்ளார்.

சீனாவின் பூஃவுஜேன் பிராந்தியத்தை சேர்ந்த அரச குடும்ப இளவரசியான சூசியேங் முன்னாள் ஜனாதிபதியை சந்திக்க வந்துள்ளார்.

இந்த சீன இளவரசி கோட்டை இராச்சியத்தை ஆட்சி செய்த 6 ஆம் பராக்கிரமபாகுவின் பரம்பரை உறவினர் எனக் கூறப்படுகிறது.

மன்னர் 6 ஆம் பராக்கிரமபாகு தனது மகனான இளவரசன் ஒருவரை அரச தூதனாக சீனாவுக்கு அனுப்பி வைத்திருந்தார். சீனாவின் அழைப்பின் பேரில் அந்த இளவரசன் அங்கேயே குடியேறி விட்டார்.

இளவரசி சூசீயேங் இலங்கை இளவரசனின் 12வது பரம்பரையை சேர்ந்தவர் என தெரிய வருகிறது.


இந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதியை சந்தித்த சீன இளவரசி, நீங்கள் சிறந்த முறையில் சுதந்திரமாக தற்போது இருக்கின்றீர்கள்தானே என வினவியுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள முன்னாள் ஜனாதிபதி என்ன சுதந்திரம். அரசாங்கம் செய்யும் வேலைகளால் இருந்த சுதந்திரமும் இல்லாமல் போயுள்ளது எனக் கூறியுள்ளார். (இ-7)

# விபத்தில் கணவன்,மனைவி காயம்

மோட்டார் சைக்கிளும் ஆட்டோவும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவன், மனைவி படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் ஆவரங்கால் சந்தியில் இடம்பெற்றது. சந்நிதி நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் எதிரே வந்த ஆட்டோவும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கே.சந்திரகுமார் (வயது-57), ச.சந்திராதேவி (வயது-56) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர் உடனடியாக அச்சுவேலி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக காலை 7.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் (இ-3,30)

# உலகின் அதிவேக விமானம் தயாரிப்பு



(லண்டன்)

லண்டனில் இருந்து நியூயோர்க்குக்கு 3 மணி நேரத்தில் பயணம் செய்யும் வகையில் அதிவேக விமானம் தயாரிக்கப்படுகிறது.

மின்னல் வேகத்தில் பயணம் செய்யக் கூடிய சுப்பர் சோனிக் பயணிகள் விமானம் தயாரிக்கும் பணி நடந்து வருகிறது. அந்த விமானத்தை அமெரிக்காவின் விர்ஜின் தொழில் அதிபர் ரிச்சர்ட் பிரான்சன் தயாரிக்கிறார்.

அதற்காக இதுவரை ரூ.21 கோடி செலவிடப்பட்டுள்ளது. இந்த விமானத்துக்கு 'பேபி பூம்' என பெயரிடப்பட்டுள்ளது. தற்போது விமானத்தில் தொழில்நுட்பப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று முடிவடையும் தருவாயில் உள்ளது.

இது மணிக்கு 2,335 கிலோமீற்றர் வேகத்தில் சீறிப் பாய்ந்து செல்லக் கூடியது. இது மற்ற அதிவேக விமானங்களை விட 10 சதவீதம் கூடுதல் வேகத்தில் பறக்கும் திறன் கொண்டது.

இந்த விமானம் 60 ஆயிரம் அடி உயரம் பறக்க கூடியது. இதில் லண்டனில் இருந்து நியூயோர்க் நகருக்கு 3 மணி 15 நிமிடத்தில் பயணம் செய்ய முடியும்.

அதற்கு ரூ.1 இலட்சத்து 60 ஆயிரம் வரை பயணம் கட்டணம் வசூலிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சோதனைகள் முடிந்து 2020 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இந்த விமான சேவை தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-12)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்A/Lபிரான்ஸ் NOTPR<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/7130 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'2"<br>தகைமைதொழில்:வங்கியாளர்<br>தொ.இ: G/7124 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: B/7132 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>தகைமை/தொழில்BA/முன்பள்ளிஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/7126 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 6'1"தகைமை/<br>தொழில்:BSc/அமெரிக்கா<br>தொ.இ: B/7133 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:ITலண்டன் PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/7127 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7134 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>கி.பா: 64<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/தனியார் தொழில்<br>தொ.இ: G/7131 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com**
**குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.**
**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1026

**தனுஜா**




**கமல்**




**சங்கீதா**




**சுகந்தன்**




**தர்சி**




**ரூபன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பட்டதாரிகளின் பிரச்சினைக்கு படிப்படியாக தீர்வு காணப்படும்

## வடக்கு மாகாண முதலமைச்சர் அறிவிப்பு

வடக்கு மாகாணத்தில் உள்ள பட்டதாரிகளின் பிரச்சினைக்கு படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண முதலமைச்சருக்கும் அரச வேலை வாய்ப்புக் கோரும் பட்டதாரிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த 24 ஆம் திகதி மாலை முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது.

இது தொடர்பாக முதலமைச்சர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


அவரது அறிக்கையில்,

தமது படிப்பை முடித்த பின் பல வருடங்களாக வேலையற்ற பட்டதாரிகளாகவிருப்பதாகவும் சராசரியாக 35 வயதை எட்டிய நிலையில் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை எடுத்துக் கூறினார்கள்.

அடுத்த மாணவத் தலைமுறையினர் தாம் வேலையற்றிருப்பதைப் பார்த்து படிப்பதைத் தொடராது புறக்கணிக்கும் நிலை ஏற்படக் கூடுமெனவும் கூறினார்கள்.

எமக்குக் கிடைக்கப்பெற்ற தரவுகளின் படி தற்பொழுது வெற்றிடங்கள் 1051 ஆக விருப்பதையெடுத்துக்காட்டி அவற்றை நிரப்ப நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருப்பதாகக் கூறினேன்.

அவற்றில் பல வெற்றிடங்கள் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கானவை. போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பட்டதாரிகளில் அவ்வாறானவர்கள் மிகக் குறைவே என்று அடையாளம் காணப்பட்டிருக்கிறது. இதன் பொருட்டு அவர்களை வேறு துறைகளில் ஈடுபடுத்துவது பற்றியும் பேசப்பட்டது.



சுற்றுலாத்துறை,தொழில் முயற்சிகள், ஆடைத் தொழில் நிறுவனங்களில் முகாமைத்துவத் தரப்பயிற்சி, பொலிஸ் திணைக்களத்தில் உதவி அத்தியட்சகர் தரப்பதவிகள் போன்றவற்றில் வெற்றிடங்கள் இருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

அவர்கள் மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள வடமாகாண வெற்றிடங்கள் சுமார் 2000 அளவில் இருப்பதாகக் கூறினார்கள். அவை பற்றி ஆளுநர் ஊடாக அறிந்து கொள்ள முடியும் எனக் கூறினேன்.

தொண்டர் ஆசிரியர் சம்பந்தமாக சில விடயங்களைக் குறிப்பிட்டார்கள். வருடாவருடம் தொண்டர் ஆசிரியர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளிப்பதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்ததாகவும் அவர்கள் வேலையை தம்மாலும் ஏற்றுக் கொள்ளமுடியும் எனவும் கூறினார்கள்.

எக்காலத்திலிருந்து கற்பித்த தொண்டர் ஆசிரியரைத் தேர்ந்தெடுப்பது என்பது பற்றிய மத்திய அரசாங்க சுற்றுநிரூபம் இருப்பதையெடுத்துக்கூறி பட்டதாரிகள் அவ் வெற்றிடங்களை ஏற்படின் அவற்றை நிரப்பமுடியாதென அறிவித்தேன்.

தொண்டர் ஆசிரியர் கல்வித் தகைமை க.பொ.த. சாதாரண அல்லது உயர் தரமே அன்றிப் பட்டப்படிப்பல்ல என்பதை எடுத்துக் கூறினேன். அத்துடன் முன்பள்ளி ஆசிரியர்கள் சம்பந்தமாகவும் அதேபதில் வழங்கப்பட்டது. அதாவது அப்பதவிகளுக்கு பட்டதாரிகளை நியமித்தால் குறைந்த கல்வித் தகைமைகளை உடையவர்களுக்கு வேலைவாய்ப்பில்லாமல் போகும் என்பதை தெரிவித்தேன்.

மேலும் அத்தனை வேலையற்ற பட்டதாரிகளின் சுய விபரங்களையும் ஆண்டு ரீதியாக கற்ற பாடங்களின் அடிப்படையில் பட்டியலாகத் தயாரித்து 28.03.2017 இற்கு முன் அனுப்பி வைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டேன்.

அத்துடன் அரசாங்க உத்தியோகங்கள் கிடைக்காதவர்களுக்கு தனியார்துறையில் வேலையில் சேர்வது பற்றி அவர்களின் விருப்புகளைத் தருமாறும் கோரினேன்.

அவர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் தரவுகளை வைத்து கொழும்பு செல்லும் போது நான் இவைபற்றி உரிய அமைச்சருடன் பேசுவதாக அவர்களுக்குத் தெரிவித்தேன் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# யாத்திரை சென்ற இலங்கையர் மூவர் இந்தியாவில் திடீர் மரணம்

இந்தியாவுக்குச் சென்ற மூன்று இலங்கையர்கள் உயிரிழந்துள்ளனர் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியா, தம்பதிவ யாத்திரைக்குச் சென்ற மூவரே இவ்வாறு உயிழந்துள்ளனர்.

திடீர் சுகயீனம் காரணமாகவே மூன்று இலங்கையர்களும் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகள் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# காத்தான்குடி அரிசி ஆலையில் நேற்று பாரிய வெடிப்பு சம்பவம்

## பல இலட்சம் ரூபா நட்டம்



(கொழும்பு)

மட்டக்களப்பு - காத்தான்குடி-01, பிரதான வீதியில் அமைந்துள்ள பிரபல அரிசி ஆலையில் பாரிய சத்தத்துடன் ஆலையின் எரிவாயு வெடித்ததில் பல இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை 6 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதனால் உயிரிழப்போ, காயங்களோ எவருக்கும் ஏற்படவில்லை. குறித்த வெடிப்புச் சம்பவத்தில் அரிசி ஆலை மற்றும் கடை ஒன்றின் களஞ்சியசாலை போன்றவற்றுக்கு பொருளாதார சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன், அருகிலுள்ள சில வீடுகளுக்கும் சிறு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

அரிசி ஆலைக்கு சுமார் 5 இலட்சம் ரூபாவும், கடைக் களஞ்சியசாலைக்கு ஐந்து இலட்சம் ரூபாவும் நட்டம் ஏற்பட்டுள்ளதாக உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

# தனியார் காணியும் பொதுமக்களும்

கடந்த 07.03.2017 வலம்புரி பத்திரிகையின் “அரச காணியும் பொதுமக்களும்” எனும் பகுதியில் அரச காணி தொடர்பிலான ஆவணங்களும் அவை தொடர்பில் மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்களை அறியத்தந்திருந்தோம் ஆனாலும் அரச காணி மற்றும் தனியார் காணி தொடர்பில் குழப்பமான சொற்பதங்கள் மற்றும் பிழையான கருத்துக்கள் முன்வைக்கப்படுவதனால் அவை தொடர்பில் மிகவும் அடிப்படையான சில விடயங்களை தொகுத்தளிப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

தனியார் காணி தொடர்பில் அறிந்து கொள்ள வேண்டிய பொது மக்கள், மிக அடிப்படையான சொற்பதங்களையும் அதன் விளங்கங்களையும் அறிந்து கொள்ள வேண்டியது மிக முக்கியம் ஆகும்.

உறுதி (deed) என்பது தனியார் காணிக்கு தலைப்பு கொடுக்கும் ஒரு சட்டரீதியான ஆவணமாகும். ஒரு செல்லுபடியான உறுதியானது ஒரு பகிரங்க நொத்தாரிசினால் செயற்படுத்தப்பட வேண்டும்.

தனியார் காணிகள் பின்வரும் முறைகளில் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. (Occupation) எனப்படுவது சட்ட ரீதியாக வாழுதல் அல்லது அரசு உட்பட வேறு எவருக்கும் சொந்தமில்லாத காணியை சொந்தமாக்கி கொள்ளுதல் ஆகும். அத்துடன் பெற்றுக்கொள்ளுதல் (accession) ஒருவரின் சொத்தானது இன்னும் ஒருவரின் சொத்துடன் இணைத்துக்கொள்ளப்படல் அல்லது சேர்த்துக்கொள்ளப்படலாகும். ஆனாலும் தொடர்பில் குறித்தெழுப்படல் (Prescription) என்பது பரவலாக பாவனையில் உள்ள விடயமாக இருப்பதனால் அது தொடர்பாக கூடிய அவதானம் செலுத்தப்படல் வேண்டும். ஒருவர் வேறு ஒருவருக்கு சொந்தமான காணியை 10 வருடங்களுக்கு கட்டணம் எதுவும் செலுத்தாமலும் எதுவித குழப்பங்களும் இடையூறுகளும் இல்லாமல் உரிமை பாராட்டுவதாயின் அக் காணியை வைத்திருப்பவர் அக் காணியை சட்டரீதியாக உரிமையை கோரலாம். ஆனாலும் காணி உரிமையாளர் 18 வயதிற்கு குறைந்தவராகவோ சித்த சுவாதீனம் உள்ளவராகவோ அல்லது வெளிநாடு ஒன்றில் வசிப்பவராயின் மேலும் நிரூபிக்க கூடிய அச்சுறுத்தல் இருந்தது என்று நீதிமன்றம் கருதுமிடத்து குறிதெழுப்படல் கேள்விகுள்ளாக்கப்படும் அத் துடன் மேலே குறிப்பிட்ட சில காரணங்களுக்கு 30 வருட இடைவெளி கருத்திலெடுக்கப்படும்.

இன்று காணிக் கொள்வனவு (Purchase) மிக முக்கியமான ஒன்றாக உள்ளது.

தனிப்பட்ட காணிச் சொந்தக்காரரிடமிருந்து காணி விற்கப்படலாம் அல்லது தனிப்பட்ட காணிச் சொந்தக்காரரிடமிருந்து கொள்வனவு செய்யப்படலாம். காணி விற்பனையானது சாட்சிகளின் முன்னிலையிலும், மற்றும் ஒரு பிரசித்த நொத்தாரிசினாலும் கைச்சாத் திடப்படும் பொழுதே செல்லுபடியானதாகிறது. பிரசித்த நொத்தாரிசானவர் விற்பனை ஆவணங்கள் உண்மையானதும், சரியானதும், அசலானதும் என உறுதிப்படுத்த வேண்டும். அவ் ஆவணங்களானவை ஏனையவற்றை விட முன்னுரிமை அளிப்பதற்காக காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். காணி விற்பனை தொடர்பான முத்திரை வரித் தொகையானது காலத்திற்கு காலம் மாறுபடுவதுடன் கொள்வனவு செய்பவரால் செலுத் தப்பட வேண்டும்.

காணி கொள்வனவு ஒன்றின் போது பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்வது பாதுகாப்பான காணி கொள்வனவு ஒன்றிற்கு வழி வகுக்கும். காணி பதிவாளர் காரியாலயத்தில் காணியின் வரலாற்றை பெற்று தன்னுடைய முந்தைய காணி உரிமையாளர் அதனுடைய ஆரம்ப பதிவுகளை சரி பார்த்து கொள்ளலாம் அத்துடன் மாநகரசபை,நகரசபை மற்றும் பிரதேச சபை ஆகியவற்றில் வீதி மற்றும் கட்டட நிரல் ஆவணங்களை சரி பார்த்துக் கொள்வதுடன் குறிப்பிட்ட காணி மற்றும் அதில் உள்ள கட்டடம் தொடர்பில் வரி மற்றும் கட்டணங்கள் தொடர்பில் பத்திரம் ஒன்றை பெற்று உறுதிப்படுத்தி கொள்ளலாம்.

அத்துடன் சில தனியார் காணிகள் மரபு வழியாக (Inheritance) பெறப்படுகின்றது மக்கள் தனியார் காணியை விருப்பில் அவர்கள் நிரல்படுத்தப்பட்டிருந்தாலும் பெற்றுக்கொள்ளலாம் மேலும் ஒருவர் இறுதி விருப்புடன் இறந்து போகையிலும் யார் காணியைப்பெற்றுக்கொள்ளலாம் ஆனாலும் இறுதி விருப்பத்திற்கு (Last will) மேலாக பெறுமதி 4 மில்லியனுக்கு மேலாக இருந்தால் மாவட்ட நீதிமன்றமே தீர்மானிக்கும். சில வேளைகளில் காணிகள் குறித்து வைக்கப்பட்ட சட்டத்திற்கு அமைய நன்கொடைகளாகவும் அளிக்கப்படுகின்றன.

தொகுப்பு: ம.ஜெயந்தன்
சிரேஷ்ட நிகழ்ச்சி திட்ட
உத்தி யோகத்தர்
சட்ட உதவி ஆணைக்குழு
முல்லைத்தீவு

# சின்னத்தை காவு கொண்ட சின்னம்மா

# டில்லி - ஆர்.கே.நகர்

ஆர்.கே. நகர் என்ற ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு நடக்கும் இடைத் தேர்தல் மீது அகில இந்தியப் பார்வை குவிந் திருக்கிறது. 'இரட்டை இலை வெற்றி தந்த இலை... உயர் இலட்சியம் காத் திட வந்த இலை' என அ.தி.மு.க. மேடைகளில் பாடப்பட்ட இலைக்கு இன்று சோதனை. 1989 சட்ட மன்றத் தேர்தலில் தொலைந்த இலை, பிறகு மீண்டு வந்து, 28 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் முடக்கப்பட்டுவிட்டது. 'இடைத் தேர்தல்களில் ஆளும்கட்சிதான் ஜெயிக்கும்' என்கிற கருத்து இங்கு கேள்விக் குறி ஆகியிருக்கிறது. சசிகலா, ஓ.பன்னீர்செல்வம் என அ.தி.மு.க. இரண்டாகப் பிரிந்து நிற்கும் நிலையில், ஜெயலலிதா வின் சாயல் கொண்ட அவரின் அண்ணன் மகள் தீபாவும் களத் குதித்திருக்கிறார். அ.தி.மு.க-வின் வாக்குகள் மூன்றாகச் சிதறும் நிலையில், இரட்டை இலை சின்னமும் இல்லாமல் போயிருக் கிறது. ஆர்.கே. நகரை வைத்து நடக்கும் அரசியல் பரபரப்புகள் அதிகம்.

## கோட்டைவிட்ட உளவுத்துறை!

'இரட்டை இலை' போலவே இருக்கும் 'மின் கம்பம்' சின்னத் தைப் பன்னீர் அணி சாதுர்யமாகத் தேர்வு செய்திருந்ததைப் பார்த்து சசிகலா அணியினர் அதிர்ந்துதான் போனார்கள். ஆட்டோ ரிக்ஷா, கிரிக்கெட் பட், கத்தரிக்கோல் ஆகிய மூன்று சின்னங்களை சசிகலா அணியினர் இறுதி செய்திருந்தார் கள். 'இவற்றில் ஒன்று கிடைத்தால் போதும்' என்ற மனநிலையில் அவர்கள் இருந்தார்கள். ஆனால், பன்னீர் அணியினர் 'இரட்டை' என வரும் சின்னங்களையும் இலை போல தோற்றம் அளிக்கும் சின்னங்களையும் குறிவைத்து, இரட்டை குத்துவிளக்கு, மின் கம்பம் போன்ற சின்னங்களை லிஸ்ட் எடுத்து இரகசியமாக வைத்திருந் தார்கள். உளவுத்துறை எல்லாம் கையில் இருந்தும், இதை அறிந்து கொள்ளாமல் கோட்டைவிட்டது சசிகலா அணி. 'மின் கம்பம்' சின்னம் இரட்டை இலையைப் போலவே தோற்றம் அளிப்பதாகத் தெரிந்ததும்; 'எம்.ஜி.ஆரின் தொப்பி எனச் சொல்லிக் கொள்ளலாம்' என நினைத்தார்களோ என்னவோ... தொப்பிக்கு மாறினார்கள்.

## இலையை முடக்கிய பின்னணி!

இரட்டை இலை சின்னத்துக் காக டில்லி தலைமைத் தேர்தல் ஆணையத்தில் நடந்த கூத்து இது. ஆறாயிரம், பேரின் பிரமாணப் பத்திரம், ஆறு இலட்சம் உறுப்பினர்க ளின் கையெழுத்து, 40 இலட்சம் உறுப்பினர்களின் பட்டியல் ஆகிய வற்றைத் தாக்கல் செய்தது ஓ.பி. எஸ். அணி. 'ஜெயலலிதா மரணத் துக்கு சி.பி.ஐ. விசாரணை கேட்டு நடத்திய உண்ணாவிரதப்போராட்த் தில் கையெழுத்து வைபவமும் நடந்தது ஏன்' என்பது இப்போது புரிந்திருக்குமே! இன்னொரு பக்கம், 122 எம்.எல்.ஏக்கள், 1,912 பொதுக்குழு உறுப்பினர்கள், 37 எம்.பிக்கள் ஆதரவுப் பட்டியலைக் கொடுத்தது சசிகலா தரப்பு. விசா ரணை நடந்தபோது சல்மான் குர்ஷித், மோகன் பராசரன், வீரப்ப மொய்லி, ஆர்யமா சுந்தரம் போன்ற சட்டத்தரணிகளை வைத்து வாதா டியது சசிகலா அணி. ஓ.பி.எஸ். தரப்பில் சி.எஸ். வைத்தியநாதன், குரு கிருஷ்ணகுமார் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.







இரண்டு மாதங்களுக்கு முன்பு தான் உத்தரப்பிரதேசத்தில் அகிலேஷ் யாதவுக்கும் முலாயம் சிங் யாத வுக்கும் இடையே பிளவு ஏற்பட்டு 'கட்சியின் சைக்கிள் சின்னம் யாருக்கு' என்ற சர்ச்சை எழுந்தது. எம்.எல்.ஏக்கள், எம்.பிக்கள் அகி லேஷ் பக்கம் இருந்ததால் சைக்கிள் சின்னத்தை அகிலேஷிடம் வழங் கியது தேர்தல் ஆணையம். அதே போல உரிமை கொண்டாடியது சசிகலா தரப்பு.

"அ.தி.மு.க. எங்கள் கட்டுப் பாட்டில் தான் உள்ளது. எம்.எல். ஏக்கள், எம்.பிக்கள் அதிகளவில் எங்கள் பக்கம்தான் இருக்கிறார் கள். பொதுக்குழு உறுப்பினர்களில் அதிகமானவர்கள் எங்களைத் தான் ஆதரிக்கிறார்கள்" என சசி கலா தரப்பு சொல்ல ஆரம்பித்த துமே தலைமைத் தேர்தல் ஆணை யர் நஜீம் ஜைதி, "சின்னத்துக்கான விசாரணை மட்டும் நடைபெறு கிறது. பொதுச்செயலாளர் விவகா ரம் பற்றிப் பேச வேண்டாம்" என்றா ராம். ஓ.பி.எஸ்.தரப்போ, "பொதுச் செயலாளர் நியமனமே செல்லாத போது அவர் எப்படி இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கும் அத்தாட்சிப் படிவமான படிவம் பி இல் கையெழுத்துப் போட முடியும்" என்றார்கள்.

"இரட்டை இலை சின்னத்தை தினகரன் தரப்புக்குத் தந்தால், சசிகலாவின் பொதுச்செயலாளர் நியமனத்தை ஏற்றுக் கொண்டதாகி விடும்" எனத் தேர்தல் ஆணைய சட்ட வல்லுநர்கள் சொல்லியிருக் கிறார்கள். அதனால்தான் கட்சி யின் பெயரையும் சின்னத்தையும் இரண்டு தரப்பும் பயன்படுத்த இடைக் காலத் தடை விதித்தது தேர்தல் ஆணையம். "ஆரம்பத்திலிருந்தே சின்னம்மாவை முன்னிலைப்படுத் தியதுதான் சின்னம் காவு வாங் கப்பட்டதற்குக் காரணம்" எனப் புலம்ப ஆரம்பித்துவிட்டார்கள் அ.தி.மு.கவினர்.

## கூடைதான் மின் கம்பத்துக்குக் காரணம்!

2011 சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க கூட்டணியில், முரசு சின்னத்தில் போட்டியிட்டது தே.மு. தி.க. 'முரசு' சின்னம் போலவே இருக் கும் 'கூடை' சின்னம் ஏற்படுத்திய குழப்பத்தால் தே.மு.தி.க வேட்பா ளர்கள் இரண்டு தொகுதிகளில் தோற்றுப்போனார்கள். வேப்பன ஹள்ளி தொகுதியில் போட்டியிட்ட தே.மு.தி.க. வேட்பாளர் கந்தன் என்கிற முருகேசனை, தி.மு.க வேட்பாளர் செங்குட்டுவன் 7,604 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த் தினார். உழைப்பாளி மக்கள் கட்சி சார்பில் போட்டியிட்ட ரங்கநாதன் 8,943 வாக்குகள் பெற்றார். ரங்க நாதனுக்கு கூடைச் சின்னம் ஒதுக் கப்பட்டிருந்தது. வாக்காளர்களி டையே குழப்பம் ஏற்பட்டதால், ஜெயிக்க வேண்டிய தே.மு.தி.க. தோற்றது. செஞ்சி தொகுதியிலும் இதே குழப்பம்தான். தே.மு.தி.க. வேட்பாளர் ஆர்.சிவலிங்கம் 1,811 வாக்குகள் வித்தியாசத்தில் பா.ம.க. வேட்பாளர் க்ணேஷ்குமாரிடம் தோற்றுப்போனார். இங்கே சுயேட்சையாகப் போட்டியிட்ட சிவக் குமாருக்கு கூடை சின்னம் ஒதுக் கப்பட்டிருந்தது. அவர் 8,627 வாக்குகள் வாங்கினார். முரசுக்கு விழ வேண்டிய வாக்குகள் கூடை சின்னத்துக்குப் போயின. விஜய காந்த் போட்டியிட்ட ரிஷிவந்தியத் திலும் இதே குழப்பம் நிலவியது. அங்கு, கூடை சின்னத்தில் எம். விஜயகாந்த் என்ற சுயேட்சை களமி றங்கி, 7,355 வாக்குகள் வாங்கினார். ஆனாலும், அது விஜயகாந்தின் வெற்றியைப் பாதிக்கவில்லை.

இப்படி கடந்த காலத் தேர்தல் பாடத்தைக் கணித்துத்தான் இரட்டை இலையைப் போலவே தோற்றம் அளிக்கும் மின் கம்பம் சின்னத்தைத் தேர்வு செய்தது பன்னீர் அணி. இரட்டை இலையை நேசிப்பவர்கள், மின் கம்பம் சின்னத்துக்கு வாக்க ளிக்கலாம் என்பதுதான் பன்னீர் அணியினரின் கணக்கு. "ஆர்.கே. நகர் தொகுதியில் ஏற்கனவே இரண்டு முறை இரட்டை இலை சின் னத்தில் நின்று வெற்றி பெற்றவர் சேகர்பாபு. தொகுதியிலும் அவர் ரொம்ப பரீச்சயம். அவர் தி.மு.கவுக்குத் தாவி 2011 சட்டசபைத் தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் போட்டி யிட்டார். அவர் அ.தி.மு.கவில் தான் இருக்கிறார் என நினைத்து இரட்டை இலைக்கு வாக்களித்து விட்டார்கள். அதுபோல எங்களுக் கும் வாக்குகள் விழலாம்" என மதுசூதனன் தரப்பு சொல்லிக் கொண்டிருக்கிறது.

## வேட்புமனு வைபோகமே!

தொகுதியில் இருக்கும் மீனவ மக்களின் 50 ஆயிரம் வாக்குக ளைக் குறிவைத்துப் போட்டியிடுகி றார் 'மீனவர் மக்கள் முன்னணி கட்சி'யின் வேட்பாளர் வே.சங் கர்.

'மது குடிப்போர் விழிப்புணர்வு சங்கம்' சார்பில் போட்டியிடும் ஆறு முகம், கையில் தாலியுடன் மனு தாக்கல் செய்தார். 'குடித்துவிட்டு இறப்பவர்கள் குடும்பத்துக்கு அரசு நிதியுதவி செய்ய வேண்டும்' என்ப தற்காகத்தான் தாலி சென்டி மென்ட் டாம். "தமிழ்நாட்ல 'குடிமகன்கள்' இல்லாத தொகுதின்னு ஒண்ணு கிடையாது சேர். எல்லா கட்சிகளிலும் எங்களுக்கு ஆதரவாளர்கள் இருக்கா ங்க. கட்சி வித்தியாசம் பார்க்காம எங்களுக்குத்தான் வாக்குப் போடு வாங்க" எனத் தள்ளாடாமல் புதுக் கணக்குச் சொன்னார் ஆறுமுகம்.

தி.மு.க. வேட்பாளர் மருது கணேஷ், ஆயிரக்கணக்கான தொண்டர்களுடன் தடல்புடலாக வந்தார்.

சின்னம் பற்றிய கவலையோ, வெற்றி குறித்த பதற்றமோ இன்றி, பரபரப்பாக சுற்றிக்கொண்டிருந்த 'தேர்தல் மன்னன்' பத்மராஜன், "இது நான் போட்டியிடற 178 ஆவது தேர்தல். இதுவரை ரூ.20 இலட்சத்துக் கும் மேல செலவு செஞ்சிருக்கேன். ஆனா, ஒரு முறைகூட டெப்பாசிட் வாங்கலை" என்றார்.

இந்து மக்கள் கட்சி வேட்பாளர் ராம.ரவிக்குமார் மாலையுடன் சவப்பெட்டியில் படுத்துக்கொண்டு வந்தார். திடீரென்று பெரிய சைஸ் சங்கு ஒன்றை எடுத்து அவர் ஊத... "தேர்தல் அலுவலகம் அரு கில் இப்படியெல்லாம் இடையூறு செய்யக் கூடாது" என பொலிஸ் தடுத்தது. "சமாதி அரசியலையும், சாராய அரசியலையும் ஒழிப் போம்" என அவருடைய ஆதரவா ளர்கள் கோஷமிட்டனர்.

## தொப்பியைத் தேடிய தினகரன்... தினகரனைத் தேடிய பொலிஸ்!


வேட்புமனு தாக்கலின் கடைசி நாளில் தேர்தல் அலுவலகம் ரொம்ப பிஸியானது. போக்குவரத்து நெரி சல் ஏற்பட்டதால் பி.ஜே.பியின் கங்கை அமரன், ஓ.பி.எஸ். அணி யின் மதுசூதனன், எம்.ஜி.ஆர் அம்மா தீபா பேரவையின் தீபா ஆகியோர் தேர்தல் அலுவலகத் துக்குச் சில நூறு மீற்றர் தூரத் திலேயே நிறுத்தப்பட்டனர். அத னால் அவர்கள் வீதியில் நடந்து வந்தனர். ஆனால், தினகரன் வந்த கார் மட்டும் அலுவலக வாசல் முன் பாக நிறுத்தப்பட்டது. ஜெயலலிதா இங்கே வேட்புமனு தாக்கல் செய்த போது தரப்பட்ட அதேஅளவு பாது காப்பும் மரியாதையும் தினகர னுக்குக் கிடைத்தன. தேர்தல் அலு வலகம் முன்பு கூடுதல் ஆணையர் கள் சாரங்கன், கணேசமூர்த்தி, சங்கர், இணை ஆணையர்சந்தோஷ் குமார், துணை ஆணையர்கள் ஜெயகுமார், செல்வகுமார், சுதாகர் என்று பலரும் அட்டெண்டன்ஸ் போட்டிருந்தனர். தினகரன் வரும் ரூட் குறித்து வாக்கி டாக்கியில் பொலிஸ் அதிகாரிகள் தகவலைக் கேட்டபடியே இருந்தனர். தினகர னின் வருகைக்காகப் பிற வேட்பா ளர்களை மனு தாக்கல் செய்ய அனுமதிக்கவில்லை. தேர்தல் அலுவலகம் வந்ததும், தினகரன் தலையில் தொப்பி ஏறியது. "எந்தக் கலர் தொப்பி எடுப்பாக இருக்கும்?" எனத் தினகரன் கேட்டு செலக்ட் செய்த தொப்பியைத்தான் அணிந்து வந்தார். அதே மொடலில் 50 தொப் பிகள் வாங்கி வைத்திருக்கிறார் கள். தேர்தல் வரையில் தினமும் ஒரு தொப்பியை அவர் பயன்படுத்து வாராம். தொப்பி சின்னம் கிடைத்து அதை அணிந்து வரவேண்டும் என்பதால்தான் வேட்புமனு தாக் கலுக்குத் தாமதம் ஆனதாம்.

## மது... சூது!


தினகரனுக்கு முன்னதாக மனு தாக்கல் செய்ய வந்தவர் மதுசூத னன். ஆனால், அவரை வாசலி லேயே நிறுத்தினார்கள். இதில் ஏதோ சூது உள்ளது என்பதைப் புரிந்துகொண்ட மதுசூதனன், "இப்படி குழப்பங்கள் வரும் என்று தெரிந்துதான், நேற்றே நாங்கள் வருகிற நேரத்தையும், மனுதாக் கல் செய்கிற நேரத்தையும் எழுத்துபூர்வமாகக் கொடுத்திருக்கி றோம். முற்பகல் 11 மணிக்கு நான் மனு தாக்கல் செய்வேன் என்று சொல்லியிருக்கிறேன். உள்ளே போய்ச் சொல்லுங்கள்" என்று குரல் கொடுத்தார். அதன்பிறகு தான் மதுசூதனனை அழைத்தார் கள். மனு தாக்கல் செய்துவிட்டு வெளியே வந்தவர், "எல்லாத்துக்கும் கால நேரம் இருக்கில்லையா?" என்றார்.

"தீபாம்மா, வீட்டிலிருந்து புறப்பட்டு விட்டார், திருவொற்றியூர் வடிவுடையம்மன் கோயிலில் விசேட பூஜையில் இருக்கிறார். பூஜை நல்லபடியாக முடிந்து கிளம்பி விட்டார்... தண்டையார்பேட் டைக்கு வந்து விட்டார்" எனத் தேர்தல் அலுவலக வாசலில் ரன் னிங் கமென்ட்ரி கொடுத்த படியே இருந்தார்கள் அவரின் ஆதரவாளர் கள். தீபா வந்த நேரத்தில் தினக ரனும் வந்துவிட்டார். அங்கிருந்த பொலிஸ் அதிகாரிகள், "கொஞ்ச நேரம் நீங்க அப்படி உட்கார்ந்து கொள்ளுங்கள், அவங்க முடிச்சுட் டுப் போயிடட்டும்" எனச் சொல்லி, தேர்தல் அதிகாரி அறைக்குப் பக் கத்தில் இருந்த அறையில் தீபாவை உட்கார வைத்தனர்.

இனி ஆர்.கே.நகரில் அனல் பறக்கும்!



முரசு போல இருக்கும் கூடை



இரட்டை இலையும் மின் கம்பமும்...

ஜூனியர் விகடன்




# முட்டாளை மணந்த இளவரசி

(சனிக்கிழமை தொடர்ச்சி)

.....குதிரையின் கால் குளம்பு கிடந்தது. பல வளைவுகளை உடைய ஆட்டின் கொம்பு ஒன்று கிடந்தது. எல்லாவற்றையும் எடுத்துப் பைக்குள் போட்டுக் கொண்டான். சாக்குப்பையைத் தூக்கிக்கொண்டு மெல்ல நடந்து அரண்மனையை அடைந்தான் அவன். காவலுக்கு இருந்த வீரர்கள் கந்தல் ஆடையுடன் காட்சி அளித்த அவனைக் கண்டு சிரித்தனர்.

இளவரசியுடன் போட்டியிட வந்துள்ளேன். என்னை உள்ளே விடுங்கள், என்றான் அவன். பிச்சைக்காரனாகிய உனக்கு என்ன தெரியும்? நீயா இளவரசியுடன் போட்டியிடப் போகிறாய் என்று கேலியாகக் கேட்டான் வீரன் ஒருவன். என் மூக்குக்குக் கீழே வாய் உள்ளது. வாய்க்கு உள்ளே நாக்கு உள்ளது. என் திறமையான பேச்சினால் இளவரசியை வெல்வேன், என்றான் அவன்.

உம்மைப் போன்ற முட்டாளிடம் இளவரசி பேசமாட்டார். நீ திரும்பிச் சென்று நல்ல அறிவு பெற்று மீண்டும் இங்கே வா, என்றான் இன்னொரு வீரன்.

நான் இங்கிருந்து நகர மாட்டேன். போட்டியிட வந்திருக்கிறேன். இளவரசியிடம் சொல் என்று உறுதியுடன் சொன்னான் அவன்.


வீரர்கள் இளவரசியிடம் சென்றார்கள். பிச்சைக்கார இளைஞன் ஒருவன் போட்டிக்கு வந்திருப்பதாகச் சொன்னார்கள். விளையாடுவதற்காக அந்த முட்டாள் இங்கு வந்திருக்கிறான். நன்கு அவமானப்படப்போகிறான். அவனை இங்கு அனுப்பி வையுங்கள், என்றாள் கோபத்துடன் அவள்.

பிச்சைக்காரன் உள்ளே நுழைந்தான். இளவரசியைப் பணிவாக வணங்கினான்.

பனிக்கட்டியை விட குளிர்ந்த கைகளை உடைய இளவரசியாரே வணக்கம், என்றான் அவன். என் கைகள் குளிர்ச்சியாக இல்லை. சூடாக உள்ளது. இந்தச் சூட்டில் ஒரு கோழியே வறுபட்டு விடும். இது உனக்குத் தெரியுமா? என்று வெடுக்கெனப் பதில் தந்தாள் அவள். அப்படியா? கோழி வறுபடுமா என்று பார்க்கிறேன், என்ற அவன் சாக்குப் பைக்குள் கையை விட்டான். செத்த கோழியை வெளியே எடுத்தான். எதிர்பாராதது நடந்ததைக் கண்ட அவள் திகைத்தாள். தன் திகைப்பை மறைத்து கொண்டு சூடு பட்டால் கோழியின் கொழுப்பு ஒழுகுமே, என்றாள்.

பைக்குள் கைவிட்டுத் தொட்டியை எடுத்தான் அவன் ஒழுகுவதை இதற்குள் பிடித்துக் கொள்ளலாம், என்றான்.

தொட்டி விரிசல் விட்டிருந்தால் ஒழுகுமே என்றாள் அவள். குதிரைக் குளம்பை எடுத்த அவன், விரிசல் உள்ள பகுதியில் கீழே இதை வைத்து அடைத்து விடலாம்,



என்றான். எப்படி எதிர்க் கேள்வி கேட்டாலும், பதில் வைத்திருக்கிறானே என்று நினைத்தாள் அவள்.

தொட்டியை விட குளம்பு பெரிதாக இருக்கிறது. எப்படித் தொட்டியை அதனால் நெருக்க முடியும்? என்று கேட்டாள் அவள். தடியை வெளியே எடுத்தான் அவன், இதைப் பயன்படுத்திக் குளம்பிற்குள் தொட்டியை இறுக்கமாகப் பொருத்த முடியும், என்றான் அவன். ஏறுமாறான கேள்விகளுக்குத் தக்க பதில் தருகிறானே. அவன் கை ஓங்கி வருகிறதே, என்று திகைத்தாள் அவள். அவனை மடக்க நினைத்த அவள், இளைஞனே! நான் என்ன சொன்னாலும் அதை வேறொன்றாகத் திருப்பி விடுகிறாய். நாக்கு பல திருப்பங்கள் இருப்பது போல நீ நடந்து கொள்கிறாய், என்றாள் அவள்.

தன் பைக்குள் கையை விட்ட அவன் ஆட்டுக் கொம்பை எடுத்தான். அதை அவளிடம் காட்டி, இதைவிட அதிக திருகுகள் உள்ளதைப் பார்த்திருக்கிறீர்களா? என்று கேட்டான்.

அவள் என்ன பதில் சொல்வது என்று சிந்தித்தாள். நீண்ட நேரம் ஆயிற்று. அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. பிறகென்ன. இளவரசிக்கும் அவனுக்கும் சீரும் சிறப்புமாகத் திருமணம் நடந்தது.

முற்றும்.




- 1513 - நாடுகாண் பயணி ஜ/வான் பொன்ஸ் டி லெயோன் வட அமெரிகாவைக் (புளோரிடா) கண்ணுற்றார்.
- 1625 - முதலாம் சார்ல்ஸ் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, மற்றும் அயர்லந்து மன்னராக முடி சூடினார். அத்துடன் பிரான்ஸ் மன்னனாகவும் தன்னை அறிவித்தார்.
- 1854 - கிரிமியாப் போர்: ஐக்கிய இராச்சியம் ரஷ்யா மீது போரை அறிவித்தது.
- 1890 - கென்டக்கியில் லூயிஸ்வில் என்ற இடத்தில் சூறாவளி தாக்கியதில் 76 பேர் கொல்லப்பட்டனர்.
- 1918 - மல்தோவா, பெசராபியா ஆகியன ருமேனியாவுடன் இணைந்தன.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியாவில் அச்சு அணிஆதரவு அரசாங்கம் யூகொஸ்லாவிய வான்படையினரால் கவிழ்க்கப்பட்டது.
- 1958 - நிக்கிட்டா குருஷேவ் சோவியத் பிரதமர் ஆனார்.
- 1964 - அமெரிக்க சரித்திரத்தில் அதி சக்தி வாய்ந்த 9.2 ரிக்டர் நிலநடுக்கம் அலாஸ்காவில் இடம்பெற்றதில் 125 பேர் கொல்லப்பட்டனர். அன்கரேஜ் என்ற நகரத்தின் பெரும் பகுதி சேதமுற்றது.
- 1968 - விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதர் சோவியத் ஒன்றியத்தின் யூரி ககாரின் விமான விபத்தொன்றில் கொல்லப்பட்டார்.
- 1969 - நாசாவின் மரைனர் 7 என்ற ஆளில்லா தானியங்கி விண்கலம் செவ்வாய்க் கோளை நோக்கி ஏவப்பட்டது.
- 1970 - கொன்கோர்ட் விமானம் தனது முதலாவது சுப்பர்சோனிக் பயணத்தை மேற்கொண்டது.
- 1977 - இரண்டு பயணிகள் விமானங்கள் கனாறி தீவுகளில் மோதிக் கொண்டதில் 583 பயணிகள் பலியாகினர்.
- 1980 - நோர்வேயின் எண்ணெய்த் தாங்கி ஒன்று வட கடலில் விபத்துக்குள்ளாகியதில் 123 பேர் கொல்ல ப்பட்டனர்.
- 1993 - ஜியாங் செமின் மக்கள் சீனக் குடியரசின் அதிபரானார்.
- 1994 - அலபாமாவில் சூறாவளி தாக்கியதில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புக்கள்

- 1845 - வில்ஹெம் ரொண்ட்ஜென், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானியர் (இ. 1923)
- 1847 - ஓட்டோ வல்லாச், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானியர் (இ. 1931)
- 1892 - சுவாமி விபுலாநந்தர், யாழ் நூல் எழுதியவர் (இ. 1947)
- 1901 - எய்சாக்கு சாட்டோ, நோபல் பரிசு பெற்ற ஜப்பானியப் பிரதமர் (இ. 1975)
- 1942 - ஜோன் சல்ஸ்டன், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய அறிவியலாளர்
- 1886 - லுட்விக் மீஸ் வான் டெர் ரோ, ஜெர்மானிய கட்டிடக் கலைஞர் (இ. 1969)

இறப்புக்கள்

- 1898 - சர் சையது அகமது கான், இந்திய அறிஞர் (பி. 1817)
- 1967 - யாரொஸ்லாவ் ஹெய்ரோவ்ஸ்கி, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1890)
- 1968 - யூரி ககாரின், விண்வெளிவீரர் (பி. 1934)

சிறப்பு நாள்

உலக திரையரங்கு தினம்




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 30 | 80 | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 90 | 100 | 120 | 200 | 100 |
| தக்காளி | 120 | 100 | 90 | 100 | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 50 | 100 | 80 | 80 | 60 |
| கோவா | 40 | 100 | 20 | 40 | 40 | 60 | 40 |
| கரட் | 100 | 140 | 80 | 70 | 70 | 160 | 70 |
| பூசணி | 60 | 80 | 30 | 60 | 60 | 80 | 50 |
| புடோல் | 100 | 100 | 50 | 120 | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 80 | - | 50 | 50 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 80 | 60 | 80 | 120 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 75 | 90 | 90 | 100 | 90 |
| பாகற்காய் | 140 | 300 | 110 | 280 | 180 | 200 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 200 | 80 | 100 | 80 | 160 | 140 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | - | 60 | 80 | 100 | 70 |
| பயற்றங்காய் | 160 | 140 | 110 | 100 | 100 | 200 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 60 | 100 | 80 | 120 | 50 |
| பீற்றூட் | 60 | 100 | 40 | 60 | 60 | 80 | 120 |
| கறிமிளகாய் | 180 | 200 | 80 | 160 | 120 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 600 | 400 | 400 | 250 | 400 | 400 |
| போஞ்சி | 200 | 250 | 50 | 140 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 70 | 60 | 10 | 60 | - | 60 | 60 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 20 | 30 | 30 | 40 | 60 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 | 120 | 70 | 80 | 80 |
| தேங்காய (ஒன்று) | 70 | 80 | 50 | 70 | 70 | 40-60 | 60 |
| இராசவள்ளி | 200 | 300 | 180 | 200 | 200 | 200 | 120 |
| வெங்காயப்பூ | 150 | 100 | 40 | 100 | 100 | 200 | - |
| முள்ளங்கி | 60 | 120 | 25 | 60 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 10 | 30 | 15 | 20 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | - | 60 | 50 | 60 | 50 | 100 | - |

மாமியார் உடைத்தால் மட்கலம்.
மருமகள் உடைத்தால் பொற்கலம்
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சிங்களவர் என்றால் குற்றமில்லை தமிழர் என்றால் குற்றம்

இலங்கையில் இப்போது முக்கூட்டுத் தலைவர்களின் திட்டமிடலில் இன விவகாரம் கையாளப்படுகிறது.

இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவர்களே முக்கூட்டுத் தலைவர்கள்.

மகிந்த ராஜபக்ஷவை தேர்தலில் வீழ்த்துவது; அவருக்கு நிகராக மைத்திரிபால சிறிசேனவை தேர்தல் களத்தில் இறக்குவது; மைத்திரி – ரணில் இணைந்த கூட்டு அரசை நிறுவுவது; இரா. சம்பந்தருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குவது என்ற நடவடிக்கைகள் அனைத்துக்கும் பின்னணியாக இருந்து செயற்பட்டவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்பது மறுக்க முடியாத உண்மை.

என்னுடன் போட்டியிடும் அந்த வீரன் யார்? அவரை அறிய விரும்புகிறேன் என்று மகிந்த ராஜபக்ஷ கர்ச்சித்த போது; மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவது என்ற தீர்மானம் சந்திரிகா குமாரதுங்கவால் எடுக்கப்பட்டிருந்தது. இதற்குப் பின்னணியாக சில வெளிநாடுகளும் இருந்தன என்பது வேறு கதை.

மைத்திரிபால – ரணில் – சந்திரிகா என்ற முக்கூட்டுத் தலைவர்களின் திட்டமிடலில் மகிந்த ராஜபக்ஷவுக்கான அரசியல் தோல்வி நிறைவேற்றப்பட்டது.

இந்த வெற்றியை அடுத்து போர்க்குற்ற விசாரணையில் இருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பையும் படைத்தரப்பையும் காப்பாற்றுவது என்ற விடயத்தை முக்கூட்டுத் தலைவர்களும் மிகச்சிறப்பாகக் கையாண்டனர்.

இதற்கு இரா. சம்பந்தருக்கு வழங்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் பதவி மிகுந்த உதவி புரிந்தது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் இரண்டு வருடகால அவகாசம் எல்லாப் பிரச்சினையில் இருந்தும் தப்புவதற்கான வழியாயிற்று.

இவை நடந்து முடிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையர் தனது தாளத்தை மாற்றத் தொடங்கி விட்டார்.

ஆம், போர்க்குற்றம் தொடர்பில் படையினர் மீது விசாரணை நடத்த முடியாது. அவர்களுக்குத் தண்டனை வழங்க முடியாது என்பதாக சந்திரிகாவின் கதை உள்ளது.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்புத் தொடர்பில் எந்தப் பேச்சுக்கும் இடமில்லாமல் அதனை அப்படியே தாட்டுவிடுவதுதான் முக்கூட்டுத் தலைவர்களின் திட்டம். இது சந்திரிகாவூடாக வெளிப்பட்டுள்ளது.

போர்க்குற்றம் தொடர்பில் படையினருக்கு எதிராக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காது என்று கூறும் சந்திரிகா அம்மையார்,

அதேநேரம் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் கருத்துக் கூறுகையில், அவர்கள் குற்றம் செய்ததனாலேயே தண்டனை அனுபவிக்கின்றனர் என்கிறார்.

ஆக, ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் வழங்கிய இரண்டு வருட கால அவகாசத்தை தமிழ் மக்களுக்கு எதிராக பயன்படுத்துவதேயன்றி வேறு எதுவும் நடக்காதென்பது தெட்டத் தெளிவாகிறது.

அதாவது சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் விசாரணை நடக்கும். அவர்கள் குற்றவாளிகளாக அறிக்கையிடப்படும். இந்த வேலையை இலங்கை அரசு நியமிக்கின்ற விசாரணைக் குழு செய்து முடிக்கும்.

அதேசமயம் படையினர் எந்தக் குற்றமும் இழைக்கவில்லை. அவர்கள் வன்னி யுத்தத்தில் எவரையும் சுட்டுக்கொல்லவில்லை என்பதாக முடிவு இருக்கும். இதுவே இரண்டு வருட கால அவகாசத்தில் நடக்கும்.

ஆம், சிங்களவர்கள் தமிழர்களுக்கு எதிராக எது செய்தாலும் அது குற்றமில்லை.

ஆனால் சிங்களவர்கள் எந்தக் குற்றத்தை தமிழர்கள் மீது சுமத்தினாலும் குற்றம் சுமத்தப்பட்டவருக்குத் தண்டனை கிடைக்கும். இதுவே நடக்கப் போகிறது.

அட, பரவாயில்லை. தமிழர்கள் எதை இழந்தாலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமக்காக்கி இருக்கிறார்களே! அது போதாதா என்ன?

## சங்குப்பிட்டி பாலத்தில் விபத்து தந்தையும் மகளும் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் வீதிக்கருகிலிருந்த கல்லில் மோதி விபத்துக்குள்ளானதில் தந்தையும் மகளும் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் சங்குப்பிட்டிப் பாலத்தருகில் இடம்பெற்றது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

சாவகச்சேரியிலிருந்து சங்குப்பிட்டிப் பாலம் ஊடாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த தந்தையும் மகளும் பிறிதொரு வாகனம் வருவதைக் கண்டு அவ்வாகனத்திற்கு வழிவிடுவதற்கு முற்படுகையில் பாலத்தருகிலிருந்த கல் ஒன்றில் மோதுண்டு படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

இச்சம்பவத்தில் சாவகச்சேரி அம்பிகா பாடசாலை வீதியைச் சேர்ந்த வி. கிருஷ்ணசாமி (வயது 47) கிருஷ்ணசாமி மதுசியா (வயது 19) ஆகிய இருவரும் யாழ். போதனா வைத்திய சாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-3-30)

## நைஜீரியப் பிரஜைகளுக்கு மறியல்

(கொழும்பு)

கொச்சிக்கடை பலகத்துறை பிரதேசத்தில், சட்ட விரோதமாக தங்கியிருந்த நைஜீரியப் பிரஜைகள் ஐவரை, எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, நீர்கொழும்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான், நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் இருந்து வழங்கப்பட்ட தகவல் ஒன்றின் அடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே, இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் கொச்சிக்கடைப் பொலிஸார். மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7).

## சாஸ்திரங்கள்

✦ நீலச் சங்குப் பூவினால் பூஜை செய்தால் அவச்சொற்கள், தீராத அபாண்டங்கள், தரித்திரம் முதலியவை தீரும். சனிபகவானின் அருட்பார்வை கிடைக்கும். ஆயுள் அதிகரிக்கும்.

-மகாபாரதம்

✦ பருவம் அல்லாத காலத்தில் மரங்களும் கொடிகளும் பழம் கொடுத்தால் நலமே. ஆனால் அகாலத்தில் (காலத்திற்கும் பொருந்தாத வகையில்) மழை பெய்து நதியில் வெள்ளம் வருவது நாட்டுக்கு பயத்தையும் அழிவையும் தருவதே.

-நாரதர் தர்மருக்கு கூறியது

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை வவுனியா பிரதேசத்தில் பட்டானிச்சூரிலிருந்து நெளுக்குளம் ஊடாக செட்டிகுளம் வரை, நெளுக்குளத்திலிருந்து பம்பைமடு வரை, ஒமேகாலைன், வவுனியா தொழில் நுட்பக்கல்லூரி, பம்பைமடு பல்கலைக் கழகம், அரசன் அரிசி ஆலை, சியாம்அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய் வேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, செட்டிகுளம் இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கஜசிங்கபுர இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் பள்ளிவாசல்பிட்டி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## பெருந்தோட்டக் காணிகள் அங்கு வாழும் மக்களுக்கே!

### பிரதமர் உறுதி என்கிறார் அமைச்சர் மனோ கணேசன்

(கொழும்பு)

கண்டி, மாத்தளை மாவட்டங்களில் உள்ள அரச பெருந்தோட்ட காணிகள் அந்தந்த பிரதேசங்களில் வாழும் மக்களுக்கே வழங்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறு தியளித்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கண்டி, மாத்தளை மாவட்டங்களை பெரும்பாலும் உள்ளடக்கிய அரசுக்கு சொந்தமான மூன்று பெருந்தோட்ட நிறுவனங்களின் காணிகள் வெளியாருக்கும், அரசின் ஏனைய அபிவிருத்தி நோக்கங்களுக்கும் பிரித்து வழங்கப்படுவது இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும், அமைச்சர்களான கபீர் ஹஷிம், மலிக் சமரவிக்கிரம ஆகியோருக்கும் இடையில் இடம் பெற்ற சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் தமிழ் முற்போக்கு கூட்டணி யினருக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இடம் பெற்றிருந்தது. இதன் போதே பிரதமர் மேற்கண்டவாறு உறுதியளித்தார் என அமைச்சர் மனோ தெரிவித்தார். (இ-7)

## மக்களுக்கு உண்மையான தோழன் நல்லாட்சி - சஜித்

(கொழும்பு)

சர்வதேசம் இலங்கையின்மீது வைத்திருந்த தவறான அபிப்பிராயங்களும் எண்ணங்களும் தற்போது இல்லாமலாக்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு மற்றும் கட்டுமான அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மேலும் நல்லாட்சி அரசாங்கம் இராணுவ வீரர்களுக்கும் இந்நாட்டு மக்களுக்கும் உண்மையான தோழனாக செயற்படுவதையே சர்வதேசமும் உலகுக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**விளக்கை எவ்வாறு அணைக்க வேண்டும்?**

குத்துவிளக்கின் திரியை அணைக்கும் போதும் மிகக் கவனமாக இருத்தல் வேண்டும். திரியை ஊதி அணைப்பதோ கையினால் வீசி அணைப்பதோ கூடாது.




திரியை பின் புறமாகச் சாய்த்து எண்ணெயில் மூழ்கச் செய்தோ சிறிது எண்ணெய் எரிந்து நிற்கும் விதத்தில் வீழ்த்தியோ அணைக்க வேண்டும். மட்டுமல்லாமல் மாலையில் குத்துவிளக்கேற்றி அதன் முன்னால் நாம் ஜெபம் செய்வது வீட்டில் ஐஸ்வர்யமும் செல்வமும் பெருகுவதற்கு சிறந்ததாகும்.

(தொடரும்)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### பற்றறிவு கற்றறிவு



தூலம், சூக்குமம், காரணம் என்ற மூன்று சொற்களைக் கேட்டிருப்பீர்கள். இவற்றுள் தூலமாகியது உடல், சூக்குமமாகியது உயிர், காரணம் என்பது பிரம்மம் அல்லது மெய்ப்பொருள். இந்த உடலுக்கு மையப்புள்ளி, சுற்று வட்டம் இரண்டும் உண்டு. அதாவது உடலுக்கு எல்லை உண்டு. உயிருக்கும் மையப்புள்ளி உண்டு ஆனால் அதனுடைய சுற்றுவட்டம் ஒரு எல்லைக்குள் அடங்காது. மெய்ப்பொருளுக்கோ மையப்பள்ளியும் இல்லை, சுற்று வட்டமும் இல்லை. அந்த உயிருக்கு மனமானது விரியும் போது அது பிரம்மம் வரையில் போவதனால் சுற்றுவட்டம் இல்லை.

ஆனால், பிரம்ம நிலைக்கு மையப்புள்ளியும் இல்லை, சுற்று வட்டமும் இல்லை. இங்கு பிரம்மமே அறிவாக இருப்பதனால் அந்த பிரம்மம் என்ற நிலையிலே முற்றறிவு (Total Consciousness). அது உயிராக வந்ததனால் இயங்கிப் பெற்ற சுற்றறிவு (Character) இதுவரையில் இயங்கிப்பெற்ற பதிவுகள் அனைத்தையும் அடக்கமாகக் கொண்டது. அதற்கும் மேலே இந்த உடல் வரையில் நின்று புலன்கள் மூலமாக இயங்கிக் கொண்டிருக்கும் போது அது பற்றறிவு.

இவ்வாறாகத் தானே பற்றறிவு, கற்றறிவு, முற்றறிவு என்று மூன்றாகச் சொல்லலாம். இந்த மூன்று நிலையிலும் எங்கேயும் இருப்பது அறிவு ஒன்றுதான் இருக்கும் நிலைக்குத் தகுந்தவாறு, அதனுடைய தன்மைக்குத் தகுந்தவாறு வேறுபடுகின்றது. தெளிவினாலே, தவத்தினாலே, பல பிறவிகள் எடுத்த தொடர்பினாலே அவர்களுடைய Character இந்த மூன்று நிலையிலே எங்கே வேண்டுமானாலும் நிற்கலாம். ஆனால், விகிதாசாரம் என்ன? அந்தந்த இடத்தில் ஏற்பட்ட பதிவு அழுத்தம், வலுவு எந்த விகிதாசாரத்தில் இருக்கிறதோ அந்த அளவு அதிகமாக இருக்கும்

## 3ம் சுற்றுக்கு முன்னேறியது குருநகர் பாடும்மீன் அணி



யாழ்ப்பாணம் வலிகாமம் பருத்தித்துறை, வடமராட்சி தீவக லீக்குகளின் அனுமதியுடன் நடைபெறும் புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரின் 24.03.2017 அன்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து மெலிஞ்சி முனை இருதயராஜா அணி மோதியது.

பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியை குருநகர் பாடும் மீன் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது .(க)

## வீரர்களுக்கிடையே குழப்பம் போட்டி இடை நிறுத்தப்பட்டது

வல்வை விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை அன்று வல்வை றெயின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் யங்கம் பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

முதல் பாதியாட்டத்தில் 8 ஆவது நிமிடத்தில் தர்சனின் மூலை உதைப்பினை ரதன் தலையால் முட்டிக் கோல் போட்டார்.

முதல் பாதியாட்டம் 01:00 என்ற அடிப்படையில் முடிவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்திலும் யங்கம்பன்ஸ் ஆதிக்கம் இருந்தது.

32 ஆவது நிமிடத்தில் பிரகாஷ் கோல் போட்டு வெற்றிப் பாதையை நோக்கி அணியை நகர்த்தி சென்றார்.

போட்டி நேரம் முடிவதற்கு இரண்டு நிமிடங்கள் மீதமிருக்கையில் வீரர்களுக்கிடையில் குழப்ப நிலை உருவானது.

போட்டி பாதியில் 02:00 என்ற ரீதியில் இடை நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யங்கம்பன்ஸ் அணி சார்பாக பிரகாஷ் 01, ரதன் தலா ஒவ்வொரு கோல்கள் போட்டனர். (க)

## FA கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நாவாந்துறை சென்.மேரிஸ் வெற்றி



FA கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் 24.03.2017 அன்று நடைபெற்ற போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து புத்தளம் லிவர்பூல் அணி மோதியது.

மேற்படி போட்டி புத்தளம் மகாஜான கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

சென்.மேரிஸ் அணி 4:3 என்ற கோல்கணக்கில் புத்தளம் Liver pool FC அணியை வெற்றி பெற்றது.

சென்.மேரிஸ் அணி சார்பாக நிதர்சன் 3 கோலினையும் எபிரோன்- ஒரு கோலினையும் பெற்றுக் கொடுத்தனர். (க)

## இன்றைய போட்டிகள்

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் "தலைவர் கிண்ண" உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் நாமகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து 5 ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மாலை 4.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காளியம்பாள் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கலப்பு வலைப்பந்தாட்டப் போட்டி

### யாழ்ப்பாணத்திற்கு 2 ஆம் இடம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் ஒழுங்கமைத்து 18.03.2017 அன்று நடத்தப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழங்களுக்கிடையிலான 2 ஆவது பேரா கலப்பு வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணப் பல் கலைக்கழக கலப்புவலைப்பந்தாட்ட அணியானது 2 ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இச்சுற்றின் இறுதிப் போட்டியில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகமும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும் மிகச்சிறப்பாக விளையாடி முதல் அரையாட்ட இறுதியில் 9.9 என்ற புள்ளிகளைப் பெற்று சமநிலையில் இருந்தன.

பின்னர் ஆட்ட இறுதியில் 25:17 என்ற புள்ளிகளினடிப்படையில் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் முதலாம் இடத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இச்சுற்றுப் போட்டியில் கொழும்பு பல்கலைக்கழகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

இச்சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வீரர் ஏ. சந்தோஸ் சிறந்த வலைப்பந்தாட்ட வீரர் (Net ball King) என்ற விருதினைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலப்பு வலைப்பந்தாட்ட அணியின் தலைவியாக செல்வி ரி.லகீதாவும் அணிப் பயிற்றுவிப்பாளராக திருமதி ஜெ. சரவ அணியின் முகாமையாளராக செல்வி இ.அருளம் பலமும் கடமையாற்றியிருந்தனர். (க)

## வேலணை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்து

### துறையூர் ஐயனார் சம்பியன்




வேலணை பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வு- 2017 இன் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் கழக மைதானத்தில் கடந்த 21 ஆம் திகதி இடம் பெற்றது.

இப்போட்டியில் துறையூர் ஐயனார் அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் அணி மோதியது. பரபரப்பான ஆட்டத்தில் கோல் எதுவும் போடப் படாத நிலையில் போட்டி நிறைவு பெற்றது.

இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. 3:2 கோல் கணக்கில் துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டி கிண்ணத்தை சுவீகரித்தது. (க)

## வலிகாமம் வடக்கின் சம்பியனாகியது ஞானவைரவர்





2017 ஆம் ஆண்டிற்கான பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான இறுதி நாள் விளையாட்டு விழா கடந்த 9 ஆம் திகதி தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில்பிரதம விருந்தினராக சு.முரளிதரன், மேலதிக அரச அதிபர் (காணி) கலந்து சிறப்பித்தார்.

ஞானவைரவர் விளையாட்டுக் கழகம் துடுப்பாட்டம் (ஆண், பெண்),கபடி (பெண்), உதைபந்து (பெண்), கரப்பந்து (பெண்) ஆகியவற்றில் முதலிடத்தையும், கபடி (ஆண்), கயிறிழுவை (பெண்), தடகளம்(ஆண்,பெண்) ஆகியவற்றில் இரண்டாமிடத்தையும் பெற்று மொத்தமாக 78 புள்ளிகளை பெற்று முதலிடத்தை தட்டிச்சென்றது.

இரண்டாமிடத்தை பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது. ஞானவைரவர் விளையாட்டுக்கழகம் தொடர்ந்து இரண்டாவது வருடமாகவும் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. (க)

# இலங்கை கடலில் இந்தியா ஆய்வு

இந்திய கடற்படையின் கப்பல் ஒன்று இலங்கை கடற்படையினருடன் இணைந்து ஆய்வுகளை இலங்கை கடற்பரப்பில் நடத்தவுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகரகம் வெளியிட்டுள்ளது.

இதன்போது இரண்டு தரப்பும் இணைந்து புதிய கடல்பிராந்திய பாதுகாப்பு குறித்த தரவுகளை பெறவுள்ளன.

இலங்கைக்கு வரும் கப்பல்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்த செயற்பாடு மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் உயர்ஸ்தானிகரம் தெரிவித்துள்ளது.

இதேவேளை. இந்தியாவின் ஜஎன்எஸ் டார்சாக் என்ற கப்பல் இந்த பணிகளில் ஈடுபடவுள்ளதுடன், இந்த ஆய்வின்போது இலங்கையின் கடற்படையினருக்கு பயிற்சிகளும் வழுங்கப்படவுள்ளன.

இந்த ஆய்வுகளின் போது இந்திய கப்பல் காலிக்கும் கொழும்புக்கும் ஆய்வுக்காக செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

## டெங்கு அபாயம்...

யாக குறைவடைந்தாலும் பூச்சியமாக குறைவடையாத காரணத்தால் மக்கள் தொடர்ந்தும் சுற்றுச்சூழலை துப்புரவாக வைத்திருக்க தவறின் நோய்த்தாக்கம் அதிகரிக்கும் எனவும் எச்சரித்துள்ளனர்.

அமைச்சினால் முன்னெடுக்கப்படும் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளினூடாக எதிர்வரும் இரண்டு வாரங்களில் தற்போதைய நிலையில் இருந்து பாரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கிண்ணியா தள வைத்தியசாலை, திருகோணமலை பொது வைத்தியசாலை மற்றும் மூதூர் மாவட்ட வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் டெங்கு நோயாளர்களின் வீதம் குறைவடைந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் கிண்ணியா நகர சபையின் ஏற்பாட்டில் சில உபகரணங்கள் வழுங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை கிண்ணியாவில் அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகிய நிலையில் டெங்கை கட்டுப்படுத்தும் நோக்கிலான திட்டங்கள் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் டெங்கு நுளம்புகள் பரவுவதை தடுக்கும் வகையில் புகை விசிறும் நடவடிக்கை நேற்று இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது. (செ)

## தமிழர்களுக்கான...

காந்த் கலந்து கொள்வதாக இருந்தது. இந்நிகழ்ச்சியில் ரஜினிகாந்த் கலந்துகொள்ளக் கூடாது என்று திருமாவளவன், வைகோ, வேல் முருகன் உள்ளிட்ட தலைவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

பாமக நிறுவனர் ராமதாஸும் இந்த நிகழ்ச்சியில் ரஜினிகாந்த் கலந்துகொள்ளக் கூடாது என்று கூறி அறிக்கை விடுத்திருந்தார். அவர்களின் வேண்டுகோளை ஏற்று, இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று ரஜினிகாந்த் அறிவித்தார்.

மேலும், இனிவரும் காலங்களில் இலங்கை செல்வதை அரசியலாக்கி அங்கு என்னை போக விடாமல் செய்துவிடாதீர்கள் என்று நடிகர் ரஜினிகாந்த் வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிலையில், ரஜினியின் பயணம் ரத்தானதால் வரும் ஏப்ரல் 9ஆம் திகதி நடைபெறவிருந்த வீடு வழங்கும் விழாவை ரத்து செய்வதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. எனினும் தமிழர்களுக்காக கட்டப்பட்ட 150 வீடுகளும் அவர்களிடமே ஒப்படைக்கப்படும் என்றும் லைக்கா கூறியுள்ளது.

இது தொடர்பாக லைக்கா நிறுவனத்தின் துணைத்தலைவர் பிரேம் சிவசாமி நேற்று வெளியிட்ட அறிக்கையில், "இலங்கையின் வடக்கு மாகாணத்தின் வவுனியா பிரதேசத்தின் சின்ன அடம்பன் கிராமம் மற்றும் புளியங்குளம் பகுதியில், லைக்கா ஞானம் அறக்கட்டளையின் சார்பில் "லைக்கா ஞானம் கிராமம்" உருவாக்கப்பட்டது.

இந்தக் கிராமத்தில் அனைத்து வசதிகளையும் கொண்ட 150 வீடுகளை லைக்கா ஞானம் அறக்கட்டளை உருவாக்கியிருந்தது.

அகதி முகாம்களில் வாழ்ந்த 150 குடும்பங்களுக்கு இந்த வீடுகளை கையளிக்கும் விழா, எதிர்வரும் ஏப்ரல் 10ஆம் திகதி நடைபெற இருக்கிறது. இந்த நிகழ்வில், கலந்துகொள்ளுமாறு ரஜினிக்கு அழைப்பு விடுத்திருந்தோம்.

அந்த வகையில் இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்கும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை சந்திப்பதற்கும் விருப்பம் தெரிவித்திருந்தார்.

இதற்கமைவாக ஏப்ரல் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவிருந்த பிரமாண்டமான நிகழ்வில் கலந்து கொள்வதற்கும் புதிதாக உருவாக்கப்பட்ட வீடுகளுக்கான உறுதிப் பத்திரங்களை வழங்கி வைக்கவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான, ஞானம் அறக்கட்டளையின் அடுத்தக்கட்ட உதவித் திட்டங்களை அறிவிக்கவும் திட்டமிட்டு இருந்ததோடு, ரஜினிகாந்த் இரண்டு நாட்கள் வடக்கு கிழக்கில் தங்கியிருக்கவும் விருப்பம் கொண்டிருந்தார்.

இதன் தொடர்ச்சியாக முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் திருகோணமலை, மட்டக்களப்பு பிரதேசங்களுக்கும் நேரில் சென்று மக்களை சந்திக்கவும் ஆவலாக இருந்தார்,

ஆனால் அவரின் இலங்கைப் பயணம் குறித்து தற்போது சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில், ஒரு அறக்கட்டளையின் உதவித்திட்ட செயற்பாடுகளை தமது அரசியல் சுயலாபத்திற்காக பயன்படுத்துகின்ற ஒரு அநாகரீக சூழல் உருவாகியிருக்கிறது. அது மட்டும் அல்லாமல் ரஜினியை தர்மசங்கடமான நிலைக்கு உட்படுத்தும் நிலை வலிந்து உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அசௌகரியங்களை தவிர்க்கும் முகமாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவித் திட்டங்கள், இவற்றின் ஊடாக தடைப்படக் கூடாது என்பதற்காகவும் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற இருந்த அனைத்து நிகழ்வுகளும் ரத்து செய்யப்படுவதோடு ரஜினிகாந்தின் இலங்கைப் பயணமும் ரத்துச் செய்யப்படுகிறது என்பதனை மிகவும் மனவேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனினும் திட்டமிட்டபடி பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பினையும் விருப்பத்தினையும் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன், வீடுகள் அனைத்தும் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும் என்பதனையும் லைக்கா ஞானம் அறக்கட்டளை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழக அரசியல்வாதிகள் இன்று இலங்கையில் அல்லலுறும் தமிழ் மக்களின் வாழ்வுக்கும் அவர்களின் எதிர்கால நன்மைக்கும் எதுவும் செய்ததில்லை. ஆயினும் லைக்கா ஞானம் அறக்கட்டளையின் நோக்கம் எல்லாம் அரசியல் தவிர்த்து அவர்களுடைய வாழ்வாதாரத்துக்கும் நிரந்தர உறைவிடத்துக்கும் உதவி செய்வதே ஆகும்.

இதேவேளை இலங்கை தமிழ் மக்களுக்கு நீண்டகால அரசியல் தீர்வை உருவாக்கி கொடுப்பதற்கு பல அரசியல் தலைவர்கள் கடுமையான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதனை நாம் மனதார வரவேற்கிறோம்.

ஆனால் இன்றைய நிலையில், அனைத்தையும் இழந்து அல்லலுறும் மக்களுக்கு உதவுகின்ற எம்முடைய முயற்சிகளை நிம்மதியாக செய்ய விடுங்கள் என தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என்று பிரேம்சிவசாமிதனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ)

## குற்றச்சாட்டுக்கு...

நிரூபிக்கமுடியவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்தா அளுத்கமகே தெரிவித்தார்.

காலி - ஹபராதுவ பகுதியில் நேற்று இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்துக்கு வாக்களித்த மக்கள், இன்று வரை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் தொடர்பில் நிரூபிக்க முடியுமென்றால், அது என்ன என்று கேள்வியெழுப்புகிறார்கள் என அவர் தெரிவித்தார்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விசாரணைக்காக ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நிறுத்தினார்கள். ஆனால் எதுவும் நிரூபிக்க முடியவில்லை எனவும் அளுத்கமகே குறிப்பிட்டார். (செ)

## காணாமல் ஆக்கப்...

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட வட மாகாண அமைச்சர் ப. டெனீஸ்வரன், து. ரவிகரன் ஆகியோர் முதலமைச்சருக்கு இவ்விடயம் தொடர்பாக தெரியப்படுத்தி கலந்துரையாடுவதற்கு நேரத்தை பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்துள்ளனர். (செ-281)

## தாயைக் கொலை...

குறித்த தாயின் மகன் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் நீண்ட காலமாக சிகிச்சைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், காலை உணவு தர தாமதமான காரணத்தினால் கோபமடைந்த மகன், தனது தாயை தடியொன்றினால் தாக்கியுள்ள நிலையில் படுகாயமடைந்த அவர் பரிதாபகரமாக உயிரிழந்ததாகவும் வெலிகம பொலிஸார் தெரிவித்துள்ளார். (செ-11)

## ரணிலும் மைத்திரியும்...

ஸ்தவ மக்களின் உரிமைகளையும் பாதுகாப்போம். அது தொடர்பில் நாம் பெருமைப்பட வேண்டும். பெரும்பான்மை சிறுபான்மை என பார்த்தால்தான் நாடு பின்னடைவான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் எமது நாட்டுக்கு எதிரான மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மகிந்த ராஜபக்ஷ கடந்த 2015ஆம் ஆண்டு வெற்றிபெற்றிருந்தால் பொருளாதார தடை வந்திருக்கும்.

இந்த நாட்டை பாதுகாக்கும் தெய்வங்கள் மாற்றத்தை ஏற்படுத்தினர். ஐக்கிய நாடுகள் சபை இன்று எம்முடன் 'பேச்சுவார்த்தைகளை நடத்துகின்றனர். கலந்துரையாடல்கள் செய்கிறார்கள் என்பதற்காக அவர்கள் கூறும் அனைத்தையும் நாம் செய்வதில்லை.

அதுவே வித்தியாசம், கடந்த காலங்களில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையுடன் முரண்பட்டிருந்தோம். நாம் அதனை செய்ய மாட்டோம். அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம்.

சர்வதேச நீதிபதிகளை கொண்டு வருமாறு அவர்கள் கூறுகின்றார்கள். அதனை செய்ய முடியாது என நாம் கூறிவிட்டோம். நீங்கள் என்ன சொன்னாலும் அதனை நாம் செய்யமாட்டோம். அவ்வாறே சர்வதேசத்துடன் செயற்படுகின்றோம். அவர்கள் சர்வதேச நீதிபதிகளை கோரினார்கள் என்பதற்காக நாம் அவர்களுடன் ஆத்திரப்பட்டு பயனில்லை. கடந்த அரசாங்கம் அதனையே செய்தது.

சர்வதேசம் ஏதாவதொன்றை சொன்னால் அந்த நாட்டுடன் உறவாடாமல் இருப்பதையே கடந்த அரசாங்கம் செய்தது. அவ்வாறு செய்ய முடியாது. அவர்கள் சில விடயங்களை கூறினால், எம்மால் முடியுமானவற்றை செய்வோம் என கூறுவோம் செய்ய முடியாதவற்றை செய்ய முடியாது என நேரடியாகக் கூறுவோம்.

ஊடகங்கள் என்னதான் கூறினாலும் பிரதமரும் ஜனாதிபதியும் சிங்கள பௌத்தர்கள். அவர்கள் நாட்டை காட்டிக்கொடுக்க மாட்டார்கள். நாட்டின் நலனுக்காகவே நாம் அனைத்தையும் செய்கின்றோம்.

சிங்கப்பூர் . மலேஷியா போன்ற நாடுகளிடம் இருந்து பாடங்களை கற்று, அனைத்து இன மக்களும் நம்பிக்கை கொள்ளக்கூடிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் லஷ்மன் கிரியெல்ல மேலும் கூறியுள்ளார். (செ-11)

## மூன்றாவது தரப்பால்...

மட்டக்களப்பில் மீனவர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் சத்துருக்கொண்டான் மீன்பிடி நிலையத்தில் நடைபெற்ற போது கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இன்று சிலர், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரையும் மிகச்சிறந்த சட்டவாதியான சுமந்திரனையும் தும்படித்துக் கொண்டிருக்கின்றனர்

எங்களுடைய சகோதரர்களே இதனைச் செய்கின்றனர். எங்களை கூடுதலாக விமர்சிப்பவர்கள் எங்களுடன் இருந்தவர்கள்தான். அவர்கள் உடனடியான ஒரு தீர்வு வரும் என நினைக்கின்றனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மிகவும் அனுபவம் வாய்ந்தவர். பல நூல்களை வாசித்துள்ளார். அதன் மூலமும் பல அனுபவங்களைப் பெற்றுள்ளார். அதிகமான இராஜதந்திரிகளையும் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்.

அதன் மூலமும் அனுபவங்களைப் பெற்றுள்ளார். இவற்றைக் கொண்டு பிரச்சினையினை எப்படி தீர்ப்பது என்பது தொடர்பில் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

பிரச்சினையை தீர்ப்பது என்பது ஒருவருக்கு தோல்வியேற் பட்டு ஒருவர் வெற்றிபெறும்போது ஏற்படாது. எவருக்கும் தோல்வி ஏற்படக்கூடாது. போர் வெற்றியை இறுமாப்புடன் கொண்டாடியவர்கள் அழுத்தம் காரணமாக போர்க்குற்றம் தொடர்பில் விசாரணை செய்வதற்கு இணக்கம் தெரிவித்தனர்.

போர் வெற்றியை கொண்டாடியவர்கள் பான் கீ மூன் வந்த போது சிலவற்றை செய்தனர். பின்னர் இலங்கை அரசாங்கம் செய்யாததன் காரணமாக நிபுணர் குழுவொன்றை ஐ.நா உருவாக்கியது. அது வந்தபோது இலங்கையில் கற்றறிந்த பாடங்கள் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது.

இவ்வாறுதான் விடயங்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வளவு விடயங்களும் நடைபெறுவதற்கு வெறுமனே சர்வதேச நாடுகள் மட்டும் காரணமல்ல. இந்த சர்வதேச நாடுகளில் மிக முக்கியமான நாடான அமெரிக்காவினை எங்களது தலைவர்கள் சந்தித்து என்ன பொறிமுறையை கையாள்வதன் மூலம் எங்களது மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கலாம்.

மகிந்த ராஜபக்ஷ, சிங்கள மக்களிடம் சென்று என்னை மின்சார கதிரையில் ஏற்றப் போகின்றார்கள், அதற்காகத்தான் ஜெனிவா தீர்மானம் கொண்டு வரப்படுகின்றது என சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்துவந்தார்.

அவரை மின்சாரக் கதிரையில் ஏற்றுவதா இல்லையா என்பதை பிறகு பார்க்கலாம் முதலில் எங்களுக்குரிய நிவாரணத்தை வழங்குவதற்கான பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்று கூறினோம்.

இன்று பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டாலும் அதன்கீழ் விசாரணை செய்வதும் இல்லை, அதன் கீழ் வழக்கு தாக்கல் செய்வதும் இல்லை. ஒவ்வொரு பொறிமுறையினையும் நாங்கள் கையாள கையாள அரசாங்கம் எங்களுக்கு எதிரான விடயங்களை கைவிட்டேயாக வேண்டிய நிலைக்கு சென்றுள்ளது.

இன்று எதுவும் நடைபெறவில்லையென்று நாங்கள் கூறிவிட முடியாது. பல விடயங்கள் 18 மாத அவகாசத்திற்குள் நடைபெற்றுள்ளன. சில இடங்களில் இருந்து இராணுவம் நகர்ந்துள்ளது, பல போராளிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மீள்நிர்மாணம் என்ற தொனியில் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாங்கள் நினைத்த வேகத்தில் சர்வதேசம் நினைத்த வேகத்தில் நடைபெறவில்லையென்பது உண்மையாகும். ஆனால் அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லையென சொல்ல முடியாது என துரைசிங்கம் மேலும் தெரிவித்தார். (செ)

## த.தே.கூட்டமைப்புக்கு...

முதியவர்கள், பெண்கள், சிறுவர்கள் எனப் பலரும் ஒன்றிணைந்து தொடர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

எனினும் 26 நாட்களாக தொடரும் போராட்டத்திற்கு இதுவரை எந்தவாரு தீர்வும் முன்வைக்கப்படவில்லை.

தமது சொந்த நிலங்களை இராணுவம் கையகப்படுத்தியுள்ள நிலையில் பொருளாதார ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதாகவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்

இந்நிலையில் நேற்றையதினம் தமது போராட்ட இடத்துக்கு த.தே. கூட்டமைப்பின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களுக்கு தங்களுடைய நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தியதோடு ஏழு நாள் கால அவகாசத்தையும் வழங்கினர். அனைவருமாக கலந்துரையாடி எமது பிரச்சினைகளை உரிய இடத்துக்கு கொண்டுசென்று தமக்கான நல்ல தீர்வை பெற்றுத் தருமாறும் தாம் எதிர்நோக்கும் பல்வேறு துன்பங்களையும் எடுத்துரைத்தனர்.

இதன்போது மக்கள் பிரதிநிதிகள் உரிய தீர்வு பெற்றுத்தராத பட்சத்தில் போராட்ட வடிவங்களை மாற்றி போராடுவோம் எனவும் உயிரிழப்புக்கள் நிகழ்ந்து காணிக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படலாம் எனவும் குறிப் பிட்டனர்.

இந்த சந்திப்பில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவப்பிரகாசம் சிவமோகன், சாந்தி சிறீஸ் கந்தராஜா, வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ. கமலேஸ்வரன், வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களான து. ரவிகரன், க.சிவநேசன் ஆ,புவனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (செ-281)

## புகையிரதம்...

குறித்த நபர் திருமணமாகி 3 ஆண்டுகளான நிலையில் தற்போது கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக்களத்தில் கடமையாற்றி வந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வீட்டில் இருந்து வெளியே சென்று தான் செலுத்தி சென்ற மோட்டார் சைக்கிளை மனைவியின் தம்பியிடம் கொடுத்து விட்டு தான் வெளியில் செல்வதாக கூறி நடந்து சென்றுள்ளார். 9 மணியளவில் அவருடைய தாய் தந்தை மற்றும் அண்ணனுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு தான் இன்னும் 3 நாட்களுக்குள் இறந்து விடுவேன என தெரிவித்துள்ளார்.

மன உளைச்சலுக்கான காரணத்தை கேட்டபோது அவர் எந்தக் காரணத்தையும் குறிப்பிடவில்லை என உறவினர்கள் மரண விசாரணையின் போது தெரிவித்திருந்தனர்.

இந் நிலையில் பிரஸ்தாப நபர் அரியாலை நாவலடி ஈச்சங்காட்டு பகுதியில் நேற்றைய தினம் காலை யாழில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற புகையிரதத்துடன் மோதுண்டு படுகாயமடைந்துள்ளார். படுகாயமடைந்த அவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த இறப்பின் மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9,3,30)

## ‘சிங்ஹலே’ இன...

ட்ட சர்வமதப் பேரவை அங்கத்தவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று நம் எல்லோராலும் பொலநறுவை என அழைக்கப்படும் பிரதேசம் புராதன காலத்தில் புலதிசிபுர எனும் பெயரால் அழைக்கப்பட்டு புகழ்பெற்று விளங்கியது.

வடக்கு கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களை எல்லையாகக் கொண்டிருக்கும் பொலநறுவைப் பூமி அன்றைய அரசர்களின் முக்கிய கவனத்தை ஈர்த்த பிரதேசமாகும்.

அவ்வாறே தற்போதைய நல்லாட்சியின் தலைவரையும் உருவாக்கிய பெருமை பொலநறுவைக்கு உண்டு.

எனினும், கடந்த 30 வருட யுத்த கால வரலாற்றை உற்றுநோக்குகின்ற போது எல்லையில் உள்ள அம்மக்களுக்கு அவர்களது வாழ்க்கை ஒரு சுகமான அனுபவமாக இருந்திருக்கவில்லை. அது அவர்களுக்கு பல நேரடி மற்றும் மறைமுக தாக்கங்களை ஏற்படுத்தி இருந்திருக்கின்றது.

பொலநறுவையில் வாழ்கின்ற பெரும்பான்மையினரான பௌத்த மத சிங்கள மக்கள் தென்னிலங்கையிலிருந்து வரவழைக்கப்பட்டு குடியேற்றத் திட்டங்கள் மூலம் குடியமர்த்தப்பட்டவர்களாவர்.

அப்படிப்பட்ட சமூகத்திற்குள்ளே வாழ்கின்ற மக்களுக்குள் பல குழுக்கள் உருவாகி நேர்ச் சிந்தனைக்குப் பதிலாக பாதக சிந்தனைகளை உருவாக்கி அதை இனவாதமாக உருவேற்றிக் கொண்டனர்.

அதன் விளைவாக “சிங்ஹலே” எனும் பெயரில் இனவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

“சிங்ஹலே” ஸ்டிக்கர்கள் பொலநறுவை பிரதேசத்தில் பரவலாக வாகனங்களில் ஒட்டப்பட்டதால் விரும்பியோ விரும்பாமலோ பலரை இனவாத சதிவலைக்குள் சிக்க வைக்க இனவாதிகள் முனைந்தனர்.

இதனை முளையிலேயே கிள்ளி எறியும் விதமாக தேசிய சமாதானப் பேரவையின் பொலநறுவை மாவட்ட மதங்களுக்கிடையிலான நல்லிணக்கக் குழு பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு “சிங்ஹலே” க்குப் பதிலாக “மனிதத்துவத்தை மதிப்போம்” எனும் மாவட்டம் தழுவிய செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் உண்மையான வீரம் என்பது இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் சக வாழ்வையும் ஏற்படுத்துகின்ற மகோன்னத முயற்சிதான் என்பது “மனிதாபிமானத்தை மதிப்போம்” எனும் ஸ்டிக்கர் மூலம் பிரபல்யப்படுத்தப்பட்டது.

எமது பிரசாரத்தை முழுமனதோடு விளங்கிக் கொண்ட நல்லிணக்கத்தை நேசிக்கும் நல்ல மனம் கொண்ட மக்கள் தாங்களாகவே முன்வந்து எமது ஸ்டிக்கர்களையும் துண்டுப் பிரசுரங்களையும் தமது வாகனங்கள், வீடுகள், காரியாலங்கள், வியாபார நிலையங்களில் அறிவித்தலாக வைத்திருந்தனர்.

அதன் மூலம் அடிப்படைவாத சக்திகளுககு அடிபணிய மாட்டோம் என்பதையும் பொலநறுவை மக்கள் புலப்படுத்தி நின்றனர்.

அடிமட்ட விவசாயிகள், அரச ஊழியர்கள், அதிகாரிகள், பொலிஸார், பொதுமக்கள், இளைஞர் யுவதிகளோடு ஜனாதிபதியின் பொலநறுவை மாவட்ட அலுவலகத்தில் இருந்த அதிகாரிகளும் எம்மோடு இந்த தேசத்தைக்காக்கும் “மனிதாபிமானத்தை மதிப்போம்” பிரசாரத்திற்கு ஆதரவு தெரிவித்து இணைந்து கொண்டனர். இது எமக்கு “சிங்ஹலே” இனவாதத்தை முறியடிப்பதில் பாரிய வெற்றியாக அமைந்து விட்டிருந்தது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ)

## க.பொ.த (சா/த)...

களது பெறுபேறுகளை அறிந்து கொள்ளலாம் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு, 5,669 பரீட்சை மத்திய நிலையங்களில் இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில், சுமார் 7 இலட்சம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். இதேவேளை, 2017ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் சாதாரண தரப் பரீட்சை, எதிர்வரும் டிசம்பர் மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் 21ஆம் திகதி முடிவடையவுள்ளது. இவ்வாண்டின் கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை, ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகி செப்டெம்பர் 02ஆம் திகதி முடிவடையும்.

இதேவேளை, இவ்வாண்டுக்கான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (செ)

## மகிந்தவை தமிழ்...

மேலும் கூறுகையில்,

போர் வெற்றியின் முக்கியத்துவத்தை மக்கள் புரிந்து கொள்ளத் தவறியுள்ளனர்.

சில சில நபர்கள் கூறிய பொய்களை கேட்டு ஏமாந்த மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்தனர்.

சிறுபான்மை மக்களின் வாக்குகள் கிடைக்காத காரணத்தினால் மகிந்த தோற்றதாக கூறப்படும் கருத்தை நான் ஏற்கவில்லை. தேர்தல் முடிவுகளை நன்றாக ஆய்வு செய்தால் இந்த விடயத்தை புரிந்து கொள்ள முடியும்.

பெரும்பான்மை மக்கள் வாக்களிக்காத காரணத்தினாலேயே மகிந்த தோல்வியடைந்தார்.

குறிப்பாக கொழும்பு மற்றும் மக்கள் செறிவான பகுதிகளில் சிங்கள மக்கள் அதிகளவில் மகிந்தவை நிராகரித்தனர்.

முஸ்லிம் மக்கள் அன்று மகிந்தவை வெறுப்பதற்கு ஓர் காரணம் இருந்தது, பொது பல சேனாவின் நடவடிக்கைகளினால் அவர்கள் மகிந்தவை நிராகரித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்ட காரணத்தினால் தமிழ் மக்கள் மகிந்த மீது குரோதம் கொண்டிருந்தனர்.

இந்த குரோத உணர்வு எவ்வளவு அதிகம் என்றால், இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவிற்கு 2010ஆம் ஆண்டு தேர்தலின் போது தமிழ் மக்கள் ஆதரவளித்திருந்தனர்.

பொய்ப்பிரசாரங்களைக் கண்டு ஏமாந்து மக்கள் தமக்கு கிடைத்திருக்கும் சுதந்திரத்தை மறந்து விட்டார்கள்.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய அனைவரும் தற்போது மனம் வருந்துகின்றார்கள்.

லசந்த கொலை விசாரணைகளை தடுக்க வேண்டுமென நான் ஒரு போதும் முயற்சிக்கவில்லை என கோத்தபாய ராஜபக்ஷ தனது நேர்காணலில் தெரிவித்துள்ளார். (செ)

## புலிகள் வெளியே...

க்கி பிடித்து கைது செய்த வீரர்கள் தற்போது சிறையில் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெலிவேரிய கிரிகிகந்தே பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே மகிந்த ராஜபக்ஷ இதனை குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார்.

அவரது உடல் நலன் குறித்து அறிய நான் சென்றிருந்தேன். வீரவன்ச தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கு எதிரில் உள்ள சிறைக் கூண்டிலில் நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக உயிரை பணயம் வைத்து போராடிய 6 இராணுவத்தினர் இருக்கின்றனர்.

மேலும் சில படையினர் தேசிய வைத்தியசாலையில் இருக்கின்றனர்.

இது தேசத்தை பாதுகாத்த வீரர்களை அவமானப்படுத்தும் செயலாகும்.

நாட்டின் பிரச்சினைகளுக்கு மாத்திரமல்ல மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்க முடியாத ஆட்சியாளர்கள் இருக்கும் காலத்தில் துக்கத்தையும் கஷ்டங்களையும் கடவுளிடம் கூறவேண்டும் என்று எண்ணி மக்கள் வழிப்பாட்டு தலங்களுக்கு செல்ல நேர்ந்துள்ளது எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (செ)

## கற்றல் செயற்பாடு...

களது கற்றல் செயற்பாடுகள் வழமை போன்று இடம்பெறும் எனவும் யாழ் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி கே.சுதாகர் அறிவித்துள்ளார்

இது தொடர்பாக பீடாதிபதியால் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

கலைப்பீடத்தின் முதலாம் இரண்டாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் கடந்த 20ஆம் திகதியில் இருந்து வழமைபோல் நடைபெற்று வருவதாகவும், முதலாம் வருட மாணவர்களின் வரவேற்புபசார நிகழ்வில் (11,12ஆம் திகதிகள்) ஏற்பட்ட அசாதாரண நிலைமைகள் காரணத்தால் மூன்றாம் நான்காம் வருட மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

மேற்படி அசாதாரண நிலைமை தொடர்பில் பூர்வாங்க விசாரணைகள் நிறைவடைந்துள்ள நிலையில் கடந்த 22ஆம் திகதி கலைப்பீட சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய மூன்றாம் நான்காம் வருட மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் யாவும் நாளை மறுதினம் ஆரம்பிக்கப்படும் என மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களின் வரவேற்பு நிகழ்வு கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற போது, வரவேற்பு நிகழ்வுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் முடிவுற்ற நிலையில் குறித்த நிகழ்வை நிறுத்துமாறு நிர்வாகத்தினர் அறிவித்ததாகவும் இதனால் குழப்பநிலை ஏற்பட்டதுடன் நிர்வாகத்தின் அனுமதியின்றி இந்த நிகழ்வு நடத்தப்பட்டதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் மாணவர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்ட காரணத்தால் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் கலைக்கப்படுவதாகவும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடததின் சட்ட மற்றும் இராமநாதன் நுண்கலைத துறை தவிர்ந்த ஏனைய கலைப்பீட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்படுவதாக யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்திருந்தது.

அத்துடன் ஒழுக்க விதிமுறைகளை மீறிய மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் யாழ் பல்கலைக்க நிர்வாகம் அறிவித்திருந்தது.

பின்னர் கலைப்பீட மூன்றாம் நான்காம் வருட மாணவர்கள் தவிர்ந்த இரண்டாம் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு கடந்த 20 ஆம் திகதி வகுப்புக்கள் ஆரம்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கடந்த 20ஆம் திகதி பீடாதிபதி உட்பட நிர்வாக உறுப்பினர்களை இரண்டாம் முதலாம் வருட மாணவர்கள் சந்தித்து மூன்றாம் நான்காம் வருட மாணவர்களின் விடயம் தொடர்பில் கலந்துரையாடியிருந்தனர்.

அப்போது இரண்டு நாட்களுக்குள் குறித்த விடயம் தொடர்பில் முடிவெடுக்கப்பட்டு இறுதியாண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்களை கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்குள் பல்கலைக்குள் அனுமதிப்பதாகவும் மாணவர்களுக்கு தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மூன்றாம் நான்காம் வருட மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்காததன் காரணமாக முதலாம் இரண்டாம் வருட மாணவர்கள், மூன்றாம் நான்காம் வருட மாணவர்களுக்கு ஆதரவாக அவர்களுக்கு தீர்வு வரும் வரையில் தமது கற்றல் செயற்பாடுகளை கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து புறக் கணிப்பதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

## காணாமல் ஆக்கப்...

தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் 19வது நாளாக தொடர் போராட்டத்தை மேற்கொண்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை நேற்றைய தினம் 2 மணியளவில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன் மற்றும் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா மற்றும் வடமாகாண சபை அமைச்சர் ப.டெனீஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் ஆகியோர் நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடினார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்த காலத்திலும் அதற்கு முன்னரும் இராணுவத்தால் விசாரணைகளுக்கு அழைத்துச் சென்றதன் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மற்றும் யுத்தம் நிறைவடைந்து பிள்ளைகளை இராணுவத்திடம் கையளித்து சரணடைந்து பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தமது உறவுகளுக்கு நடந்தது என்ன என பதில் வழங்குமாறு கோரி அமைதிவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த சில நாட்களாக வடகிழக்கு மாகாணங்களில் அமைதிவழிப்போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் எட்டு மாவட்டத்தில் உள்ள காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பிரதிநிதிகள் சிலர் வடமாகாண முதலமைச்சருடன் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடி அடுத்த கட்டமாக ஜனாதிபதியை சந்தித்து இதற்கு ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க...

விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுககும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை

எமது சேவை 365 நாட்களும்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (Express Service)
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும் (Door to Door Service)
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call 021 222 3536
DHL aramex FedEx SKYNET

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.